மலர் : 53 இதழ் : 3

தமிழரசு

செப்டம்பர் 2022
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.09.2022 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 114ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை, நெல்பேட்டையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

காலத்தால் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை அள்ளித் தருபவர்கள் ஆசிரியப் பெருமக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி (04.09.2022)

அறிவு ஒளியூட்டி அறியாமை இருள் அகற்றும் ஆசிரியப் பேரினமே!

உங்கள் யாவருக்கும், என் இதயம் நிறைந்த இனிய ஆசிரியர் தின வாழ்த்துக்கள்!

ஒரு சிறந்த நாடு, எப்படித் திகழ வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூற வந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு" - என்கிறார்.

இக்குறட்பாவிலுள்ள 'தக்கார்' என்னும் சொல்லுக்கு ஒழுக்க நெறி தவறாமல் வாழ்வோர் என்று உரையாசிரியர்கள் பொருள் காண்பர். ஆனால் 'தக்கார்' என்று சூட்டப் பெறுவோர் "ஆசிரியர்" என்று பொருள் காண நான் விழைகின்றேன். ஏனெனில், தமக்குரிய நெறியிலிருந்து வழுவாது, பிறழாது தாமும் வாழ்ந்து, வளரும் இளம் தலைமுறையினரையும் அந்நெறிப்படி வாழக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு மிக்கவர்களாக இருப்பவர் ஆசிரியர்களே.

மனிதர்களை, மதிவாணர்களாக்குவதும், மாமேதைகளாக்குவதும், ஏன் மனிதர்களை மனிதர்களாக்குவதும் கல்விதான்.

காலத்தால் அழிக்க முடியாத அத்தகைய கல்விச் செல்வத்தை மாணவச் செல்வங்களுக்கு அள்ளித் தருபவர்கள் ஆசிரியப் பெருமக்களே!

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்கவும், பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கவும், அவ்வாறு சேர்க்கப்பட்ட குழந்தைகளை இடைநிற்றல் ஏதுமின்றி முழுமையாகத் தொடரவும், குழந்தைகளின் வயதுக்கேற்ற கற்றல் அடைவுகளை உறுதி செய்யவும், ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சிகளை அளித்து அவர்தம் திறன்களை வளர்க்கும் நோக்கோடு தமிழ்நாடு அரசு 2022-2023ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.36,895.89 கோடியை ஒதுக்கியுள்ளது.

கொரோனா பெருந்தொற்றினால் மாணவர்களிடையே உருவான கற்றல் இழப்புகளை ஈடு செய்ய, 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே 2 இலட்சம் தன்னார்வலர்களைக்கொண்டு, அக்டோபர் 2021 முதல் "இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தினை" அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கெனச் சுமார் ரூ.163 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

மேலும், 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்குப் பயன்படும் வகையில் "நான் முதல்வன்" என்னும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல், எதிர்வரும் 2025ஆம் ஆண்டிற்குள், 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளும் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன்களைப் பெறும் நோக்கோடு, 2021-2022ஆம் ஆண்டில் "எண்ணும் எழுத்தும் இயக்கம்" தொடங்கப்பட்டு, பல்வேறு செயல்பாடுகளுக்கென ரூ.66.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம், 18 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களில் ஆண்டுதோறும், மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது" வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பள்ளி மாணாக்கர்களுக்குத் தமிழ்மொழித் திறனறித் தேர்வு நடத்தி, ஆண்டுதோறும் 1,500 பேர் தெரிவு செய்யப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்கள், மாணவர்கள் எனச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும்வண்ணம் மதுரையில் "முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம்" அமையவுள்ளது.

நாட்டின் எதிர்காலச் சொத்துக்களாம் இளைய தலைமுறையை, நன்முத்துக்களாக உருவாக்கும் பெரும் பொறுப்புக்குச் சொந்தக்காரர்களாகிய ஆசிரியப் பேரினத்தை அரசும், நாட்டோரும், நல்லோரும் மதித்துப் போற்றுவதன் அடையாளமே இந்த ஆசிரியர் தின விழாக் கொண்டாட்டம்.

வகுப்பறை அனுபவங்களின் மூலம் இடையறாது பணி செய்து மென்மேலும் திறம் பெற்றுச் சிறந்த ஆசிரியர்களாய் என்றும் சீர் பெற்று விளங்க நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2022

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 3

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா

உதவி ஆசிரியர்கள்
அ. சுகுமார்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. - குறள் : 647

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார் 5
★ பெண்களின் கல்வி வளர்ச்சிக்கான "புதுமைப் பெண்" திட்டம் 10
★ தமிழ்நாட்டில் முதன்முதலாக 26 தகைசால் பள்ளிகள் மற்றும் 15 மாதிரிப் பள்ளிகள் 17
★ இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் மகிழ்ச்சியை ஏற்படத்தியதுதான் நமது அரசின் சாதனை 21
★ "நெய்தல் உப்பு" விற்பனைத் தொடக்கம் 28
★ ரூ.12.30 கோடியில் கொளத்தூர் ஏரி மறுசீரமைக்கும் பணித் தொடக்கம் 29
★ வீரமங்கை வேலுநாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடகம் 32
★ மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மின்னகத்தில் ஆய்வு 33
★ தமிழ் மொழிக்கும், உலக மொழிகளுக்கும் இடையிலான உறவை ஆணித்தரமாக நிறுவ வேண்டியது காலத்தின் தேவை 34
★ ரூ.2,250 கோடி முதலீட்டில் 37,450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 40
★ கோயம்புத்தூரில் ரூ.662.50 கோடி மதிப்பீட்டில் 748 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் 45
★ திருப்பூர் மண்டல மாநாட்டில் "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற முழக்கம் 53
★ அத்திக்கடவு-அவிநாசித் திட்டத்தின் எம்மாம்பூண்டி நீர் உந்து நிலையத்தில் ஆய்வு 62
★ ஈரோடு மாவட்டத்தை, எல்லாவற்றிலும் முதன்மை மாவட்டமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வோம் 63
★ நான் மட்டும் முதல்வன் அல்ல, அனைவரும், ஒவ்வொரு வகையிலும் முதல்வனாக வரவேண்டும் 70
★ இளையோன் எதற்கும் இளையான் 76
★ "விடுதலைப்போரில் வீரத் தமிழகம்" முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சி 78

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.09.2022 அன்று
மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில்
1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து,
குழந்தைகளுக்கு உணவினை ஊட்டி மகிழ்ந்தார்.

குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை
தொடங்கிவைத்து ஆற்றிய உரை (15.09.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.09.2022 அன்று மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கிவைத்தார்.

"நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிகத் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்" என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்ட போதிலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான கோப்பில் கையெழுத்திட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்றும், பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்குவது, கற்றலை இனிமையாக்குவது என்ற நோக்கத்தில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதிலும், ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகம் இல்லை என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான அரசாணையினை வெளியிட்ட நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

ஆவணங்களைத் தொகுத்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தமிழரசு பதிப்பகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள "ஒரு நூற்றாண்டின் கல்விப் புரட்சி" என்ற சிறப்பு மலரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, சமூகசேவகி திருமதி கமலாத்தாள் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். முன்னதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை, நெல்பேட்டையில் மைய சமையல் கூடத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, பள்ளிகளுக்கு காலை உணவு எடுத்துச் செல்லும் வாகனங்களை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

நாட்டிலேயே முன்னோடித் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை பரிமாறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைபிரதேச பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில் தொடங்கப்பட்டு,1,14,095 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

மாணவ, மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புர நிருவாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பள்ளிக்கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை ஆகிய துறைகளின் அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இத்திட்டம் கண்காணிக்கப்படும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத் தொடக்க விழாவில், கோயம்புத்தூர், வடிவேலம்பாளையத்தில் கடந்த 30 ஆண்டு காலமாக ஏழை, எளியவர்களுக்கு ஒரு ரூபாய்க்கு இட்லி வழங்கும் சமூக சேவகி திருமதி கமலாத்தாள் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு செய்தார்.

மேலும், தமிழ்நாட்டின் பள்ளிகளில் உணவு வழங்கப்படும் திட்டங்களின் ஒரு நூற்றாண்டு நிகழ்வுகளை, வரலாற்று சம்பவங்களை அரிய

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

"உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்,

வாழ்விலோர் பொன்னாள் என்று சொல்லத்தக்கக்கூடிய வகையில் இந்த நாள் அமைந்திருக்கிறது. பசித்த வயிறுகளுக்கு உணவாக, தவித்த வாய்க்குத் தண்ணீராக, திக்கற்றவர்களுக்குத் திசைகாட்டியாக, யாருமற்றவர்களுக்கு ஆறுதலாக, இருக்கப்போகும் கருணை வடிவான திட்டம்தான் இந்தக் காலை உணவு வழங்கும் திட்டம்!

பள்ளிக்குப் பசியோடு படிக்க வரும் பிள்ளைகளுக்கு முதலில் உணவு வழங்கிய பிறகு வகுப்பறைக்குச் செல்லக் கூடிய வசதியை நாம் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். தமிழ்நாடு இந்த ஆண்டு வரலாறு காணாத அளவு நெல் மற்றும் தானிய உற்பத்தியில் உச்சத்தைக் கண்டிருக்கிறது. மறுபுறம் யாரும் பசியால் வாடிடக் கூடாது என்பதற்காகத்தான் நெல்பேட்டை சமையற்கூடத்தில் தயாரான உணவு பிஞ்சுக் குழந்தைகளைத் தேடிப் பள்ளிகளுக்குச் செல்கின்றன.

இந்த சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களின் ஆதிமூலத்தை அறிந்து தீர்வுகள் காணப்பட வேண்டும். அந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகத்தான் காலை உணவுத் திட்டத்தை ஆதிமூலம் தொடக்கப் பள்ளியில் இருந்து நாம் தொடங்கியிருக்கிறோம்.

இந்தப் பள்ளி அமைந்துள்ள இடத்தைப் நாம் பார்த்தோம் என்று சொன்னால், கீழ் அண்ணா தோப்பு. என்ன பொருத்தம் பாருங்கள்!! கீழ் அண்ணா தோப்பு. பேரறிஞர் அறிஞர் அண்ணா அவர்களால் வளர்த்தெடுத்திருக்கக்கூடிய தம்பிகள் நாம். ஏழை மக்களுக்கு மலிவு விலையில் உணவு கிடைத்திட வேண்டும் என்ற முழக்கத்தை முதன்முதலில் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்த ஒரு மாபெரும் தலைவர் நம்முடைய பேரறிஞர் அண்ணா. அவருடைய பிறந்தநாளில்,நெல்பேட்டையில் அமைந்திருக்கக்கூடிய அந்த உணவு கூடத்தில் நாங்கள் உள்ளே சென்று பார்ப்பதற்கு முன்னால் அருகில் உள்ள அண்ணா

சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, இன்றைக்கு இந்த மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்து இருக்கிறோம். அதில் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அவர்கள் சொன்னதுபோல, 102 ஆண்டுகளுக்கு முன்னால், இதே செப்டம்பர் 16ஆம் நாள் நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவராக இருந்த சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தும் தீர்மானத்தை இயற்றினார். அதாவது, ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் காலை உணவுத் திட்டம் தொடங்கப்படுகிறது.

அன்று ஆயிரம் விளக்கில் தொடங்கிய திட்டம், தூங்கா நகரமாக இருக்கக்கூடிய இந்த மதுரையின் வைகை ஆற்றங்கரையில் அடுத்த பரிமாணத்தை அடைந்து விரிவடைந்திருக்கிறது. பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் என்பது அமெரிக்காவில் US Department of Agriculture மூலம் பல மாநிலங்களில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இதேபோல, ஐரோப்பா நாடுகளிலும், குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஃபிரான்ஸ் நாட்டிலும், காலை உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் காலை உணவு வழங்குவதால் அந்த நாட்டு மாணவர்கள் கற்றல் திறன் மேம்படுவதாகவும், மாணவர் வருகை அதிகரிப்பதாகவும், பல ஆய்வு முடிவுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும், கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு காலை உணவுத் திட்டத்தின் தேவை அதிகரித்துள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இப்போது, பிள்ளைகள் காலைச் சிற்றுண்டியைச் சாப்பிடும்போது அடையும் மகிழ்ச்சியை அவர்களது முகங்களில் நான் பார்த்தேன். அந்த தருணத்தில், நான் அடைந்த மகிழ்ச்சியைச் சொற்களால் வர்ணிக்கவே முடியாது. அவர்கள் சாப்பிடும்போது அதைப் பார்த்தேன். என்னுடைய மனம் நிறைந்தது. என்னுடைய இதயம் மகிழ்ச்சியில் திளைத்தது. ஏழை, எளியோர் வீட்டுப்பிள்ளைகள்-ஒடுக்கப்பட்ட குடும்பத்துப் பிள்ளைகள்- எதன் காரணமாகவும் பள்ளிக்குச் செல்வது தடைப்படக் கூடாது என்பதற்காகவே திராவிட இயக்கம் தொடங்கப்பட்டது.

அங்குதான் கடந்த நூற்றாண்டின் மாபெரும் இயக்கத்துக்கான விதை தூவப்பட்டது. அதற்காகவே சுயமரியாதை, சமூகநீதிக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. வகுப்புவாரி உரிமை எனும் இடஒதுக்கீடு தரப்பட்டது. வறுமையோ- சாதியோ எதுவும் ஒருவரது கல்விக்குத் தடையாக இருக்கக் கூடாது என்று தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் நினைத்தார்கள்.

அவர்கள் வழித்தடத்தில் வந்திருக்கக்கூடிய நான் அவர்களது கனவுகளை நிறைவேற்றும் இடத்துக்கு வந்து அதனை நான் செயல்படுத்திக் கொண்டு வருகிறேன். அதை நினைத்து நான் உள்ளபடியே, அளவிட முடியாத மகிழ்ச்சிக்கு ஆளாகி இருக்கிறேன்.

இன்று நம்முடைய கையில் இருக்கின்ற ஆட்சியை காப்பியத்தில் வரக்கூடிய மணிமேகலை கையில் வைத்திருந்த அமுதசுரபி போல நினைத்து ஆட்சியைப் பயன்படுத்தி, எத்தகைய நிதிச்சுமை இருந்தாலும், இந்த பசிச் சுமையைப் போக்க நாம் முடிவெடுத்து இந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டுப் பிள்ளைகள் பசியால் வாடக் கூடாது என்று நினைக்கிறோம். அதனால்தான், இத்திட்டத்தை உடனடியாகத் தொடங்கி இருக்கிறோம். பள்ளிப் பிள்ளைகளுக்குக் கல்வியுடன் சேர்த்து உணவும் வழங்க வேண்டும் என்ற ஒரு உன்னத நோக்கத்தை முதலில் வெளிப்படுத்தினார் பண்டித அயோத்திதாசர் அவர்கள். அவரது பவுத்த சிந்தனையில் இது உதித்தது.

1900ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்தில் சென்னை வட்டாரத்தில் உருவாகிய கர்னல் ஆல்காட் பள்ளிகளில் மதிய உணவு வழங்க வேண்டும் என்ற சிந்தனைக்கு வித்திட்டார் பண்டிதர் அயோத்திதாசர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் தாய் அமைப்பான நீதிக்கட்சியின் தலைவராக இருந்த வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்கள், சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபோது, ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு 1922ஆம் ஆண்டு மதிய உணவை வழங்கினார்.

அந்த ஆயிரம் விளக்குதான் முதன்முதலாக நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பதும் எனக்குக் கிடைத்த மகிழ்ச்சி! இந்தியா விடுதலை அடைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு நிதி நெருக்கடியைக் காரணமாகக் காட்டி ஆங்கிலேய அரசால் மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு 1955-ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

அப்போது பொதுக்கல்வி இயக்குநராக இருந்தவர் யார் என்று கேட்டீர்கள் என்றால், நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள்தான். அவர்தான் இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டார். சில அதிகாரிகள் கூட எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைக் கண்டித்து இருக்கிறார்கள். இதை எப்படி செயல்படுத்த முடியும் என்று எல்லாம் கேள்விகளை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த எதிர்ப்புகளை எல்லாம் மீறி அதனை செயல்படுத்திக் காட்டியவர் யார் என்று கேட்டீர்கள் என்றால், பெரியாரின் பெருந்தொண்டராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள்.

இத்தகைய மதிய உணவுத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து நடத்தியது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு. இதனை செழுமைப்படுத்தும் வகையில் கூடுதலாக ஊட்டச்சத்துத் திட்டத்தை 1971ஆம் ஆண்டு முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் கையில் எடுத்தார்கள்.

குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்து வழங்குவதை மாபெரும் இயக்கமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதை உருவாக்கித் தந்தார்கள். அந்தக் காலத்தில் பேபி ரொட்டி என்பதை குழந்தைகள் அனைவருக்கும் வழங்கியது நம்முடைய கலைஞரின் அரசு. 1975ஆம் ஆண்டு முழுமையாக மாநில அரசின் நிதியில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலம் முழுவதும் நடத்திக் காட்டினார்கள்.

இதனை மேலும் விரிவுபடுத்த பெருமுயற்சி எடுத்தார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அதிகப்படியான மையங்களை உருவாக்கி, சத்துணவுத் திட்டத்துக்குக் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்தார் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதற்குப் பிறகு 1989ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி பொறுப்புக்கு வருகிறது. அப்போது தேர்தல் நேரத்தில் திட்டமிட்டு எதிர்க்கட்சிச் சார்ந்தவர்கள் எல்லாம் ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். என்னவென்றால், எம்.ஜி.ஆர். கொண்டுவந்த சத்துணவு திட்டத்தை கலைஞர் ஆட்சிக்கு வந்தால், நிறுத்திடுவார், அந்த சத்துணவுத் திட்டத்தை அழித்திடுவார், ஒழிச்சிடுவார் என்று திட்டமிட்டு ஒரு பொய்ப் பிரச்சாரமே நடந்தது. ஆனால் கலைஞர் 1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். வந்தவுடனே சொன்னார், சத்துணவுத் திட்டத்தை நான் நிறுத்திடுவேன், நிறுத்திடுவேன் என்று சொன்னார்கள். ஆனால், உண்மையான சத்துணவை வழங்கப்போகிறேன் என்று சொல்லி, கலைஞர் அவர்கள் 1989இல் முதலில், வாரம்தோறும் ஒரு முட்டை, பின்னர் இரண்டு முட்டையும் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

2007ஆம் ஆண்டு வாரத்துக்கு மூன்று முட்டை வழங்கினார். அத்துடன் கொண்டைக் கடலை, பச்சைப்பயிறு, வேகவைத்த உருளைக் கிழங்கு ஆகியவற்றையும் சேர்த்துக் கொடுத்தார். 2010ஆம் ஆண்டு வாரம் ஐந்து நாட்களும், சனி, ஞாயிறு தவிர, முட்டை வழங்கிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். முட்டை சாப்பிடாதவர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்து, வாழைப்பழமும் வழங்கினார்.

முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தனது ஆட்சிக்காலத்தில் கலவை சாதமாக வழங்க உத்தரவிட்டார். இதுவரை இருந்தவை அனைத்தும் மதிய உணவுத் திட்டங்கள். இப்போது நான் சொன்னவை எல்லாம். நான் சென்னையில் அடிக்கடி, நம்முடைய மாநகராட்சிப் பள்ளி, அரசுப் பள்ளிகளுக்கு ஆய்வு மேற்கொள்ளும்போது, ஒருமுறை ஒரு பள்ளிக்கு நான் சென்றேன். ஒரு நிகழ்ச்சிக்காக சென்றேன்.

அப்போது அங்கே இருக்கக்கூடிய பிள்ளைகளைப் பார்த்து, என்ன படிக்கிறீர்கள் என்று கேட்டு, ஏன் சோர்வாக இருக்கிறீர்கள் என்று கேட்டேன். சாப்பிடவில்லை என்று சாதாரணமாக கேட்டேன். வழக்கமாக கேட்கிறமாதிரி, காலையில் எப்போதும் நாங்கள் சாப்பிடுவதில்லை, அப்படியே பள்ளிக்கூடத்திற்கு வந்து விடுவோம் என்று சொன்னவுடன் எனக்கு அதிர்ச்சியாக போனது.

உடனே, நான் அதிகாரிகளை ஆலோசித்த போது, நிறைய பிள்ளைகள் காலையில் சாப்பிடாமல்தான் வருகிறார்கள் என்ற தகவலை அதிகாரிகள் சொன்னார்கள். அப்படியானால் காலை உணவுத் திட்டத்தை நாம் தொடங்கியாக வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன்.

பசியோடு பள்ளிக்கு வரக்கூடிய பிள்ளைகள் பட்டினியாக வைத்து அவர்களுக்கு பாடம் சொல்லித் தரக் கூடாது என்று நினைத்தேன். அந்த வரிசையில், இன்றைய நாள் காலை உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்படி நாள்தோறும் முதல்கட்டமாக 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட இருக்கிறது. 1,545 பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் முதல்கட்டமாக பயனடைய இருக்கிறார்கள்.

ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 12 ரூபாய் 75 காசு செலவு செய்யப்பட இருக்கிறது. செலவு என்பதை நிருவாக மொழியில் சொல்கிறேன். உண்மையில் இது செலவு அல்ல, நமது அரசின் கடமை! இன்னும் சொன்னால் எனது கடமையாகவே நான் கருதுகிறேன். இந்த திட்டத்தை படிப்படியாக இன்னும் விரிவுபடுத்தி, முழுமையாக நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்வோம் என்று இந்த நேரத்தில் நான் உறுதி அளிக்கிறேன்.

இத்தகைய திட்டங்களை இலவசம் என்றோ, தர்மம் என்றோ, தானம் என்றோ, சலுகை என்றோ யாரும் நினைக்கக் கூடாது. இது ஒரு அரசினுடைய கடமையும், பொறுப்பும் ஆகும். அத்தகைய கடமை உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கிறோம். பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவுடன் பிள்ளைகள் கல்வி கற்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவு இருக்கும்.

தமிழ்நாட்டின் கல்வி விகிதம் அதிகம் ஆகும். தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் அறிவாற்றல் பொருந்தியவர்களாக உயர்வார்கள். இப்படி எத்தனையோ நன்மைகளை இந்த மாநிலம் அடையப் போகிறது. எனவே இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கக்கூடிய பணத்தை நாங்கள் செலவாக நினைக்கவில்லை.

ஒரு மாணவருக்கு வழங்கும் உணவின் மதிப்பு 12 ரூபாயாக இருக்கலாம். ஆனால், அதனை உண்டு, சிறப்பான கல்வி கற்கக்கூடிய அந்த மாணவர் நாளைய தினம் மிகப்பெரிய பொறுப்பில் வந்து உட்கார்ந்தால் அவர் மூலமாக இந்தச் சமூகம் அடையும் பயன் என்பது அளவிட முடியாதது. என்னைப் பொறுத்தவரை கல்விக்காகவும், மருத்துவத்துக்காகவும், பசிப்பிணி போக்கவும் உருவாக்கப்படும் திட்டங்கள் எந்த விமர்சனத்துக்கும் அப்பாற்பட்டவை.

இத்தகைய திட்டங்களைத்தான் ஒரு ஆட்சியின் முகமாக நான் பார்க்கிறேன். இந்த ஆட்சியை அளவிடும்போது, இது போன்ற திட்டங்களை மனதில் வைத்து அளவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மகனின் அரசு, கருணையின் வடிவான அரசாகச் செயல்படும் என உறுதி அளிக்கிறேன். இந்த நேரத்தில் அரசு அதிகாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும் என்னுடைய அன்பான வேண்டுகோள் ஒன்றை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அரசானது தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. நீங்களும் தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தை பின்பற்ற வேண்டும். உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு எத்தகைய கவனத்தோடும், கனிவோடும் உணவு வழங்குவீர்களோ, அதைவிடக் கூடுதல் கவனத்தோடும், கனிவோடும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள மாணவச் செல்வங்களே! உங்களுக்கு காலையும் மதியமும் உணவு வழங்குகிறோம். எனவே, நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள், படியுங்கள், படியுங்கள். இது ஒன்றுதான் என்னுடைய வேண்டுகோள்.

கல்வி நாம் போராடிப் பெற்ற உரிமை! படிப்பு ஒன்றுதான் உங்களிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாத சொத்து! அத்தகைய சொத்தை உங்களுக்கு நீங்களே சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களது மற்ற கவலைகள், மற்ற தேவைகளை நிறைவு செய்யத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. நான் இருக்கிறேன். நீங்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

படித்துத்தான் ஆக வேண்டுமா? படிக்காமல் முன்னேறியவர்களை எடுத்துக்காட்டாக காட்டுகிறோம்... குறிப்பாக இந்தப் படிப்பைத்தான் படிக்க வேண்டுமா? வேறு படிப்பே இல்லையா?... என்று யாராவது சொன்னால், அவர்களை முட்டாள்களாகப் பாருங்கள்!

நீங்கள் படித்து அறிவார்ந்த சமூகமாக முன்னேற இருப்பவர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வியை விட்டு விலகிச் சென்று விடாதீர்கள். விலகிச் செல்லவும் நான் விட மாட்டேன்.

பள்ளிக் கல்வி, உயர்கல்வி, பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்புகள் எனக் கலை, அறிவியல் அனைத்துத் துறைகளிலும் நீங்கள் முன்னேறவேண்டும்! நீங்கள் முன்னேறினால்தான் நம் தமிழ்ச்சமூகம் இன்னும் முன்னேறும்!

அந்த முன்னேற்றத்திற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் களத்திலும், ஆட்சிப்பொறுப்பிலும் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க வாழ்க"

என்கிறது மணிமேகலைக் காப்பியம்.

அத்தகைய மாநிலமாக தமிழ்நாடு அமைய எந்நாளும் உழைப்போம், தமிழ்ச் சமூகத்தினுடைய வறுமையை அகற்றிட, குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்திட நான் தயாராக இருக்கிறேன்."



பெண்களின் கல்வி வளர்ச்சிக்கான

“புதுமைப் பெண்” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.09.2022 அன்று சென்னை, பாரதி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாண்புமிகு புதுதில்லி முதலமைச்சர் திரு.அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் முன்னிலையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விப் பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் உதவித்தொகை வழங்கும் “புதுமைப் பெண்” திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்.

மாநிலத்தின் அனைத்து வளர்ச்சியிலும்பெண்களுக்கு உரிய இடம் வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை என்ற பெயரை“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை” என மாற்றம் செய்துள்ளது. பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், திருநங்கையர் போன்றவர்களின் நலனைக் காத்திடும் வகையில் அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பெண்கல்வியைப் போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தைத் தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், படைப்பியலாளராகவும், நல்ல குடிமக்களைப் பேணும் உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தைச் சார்ந்தவராகவும், உருவாக

“புதுமைப் பெண்” திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்து ஆற்றிய உரை (05.09.2022)

அடித்தளமாக “புதுமைப் பெண்” என்னும் உன்னதத் திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், பெண்களுக்கு உயர் கல்வி அளித்து, பாலினச் சமத்துவத்தை ஏற்படுத்துதல், குழந்தை திருமணத்தைத் தடுத்தல், குடும்பச் சூழ்நிலை மற்றும் வறுமைக் காரணமாக மேற்படிப்புப் படிக்க இயலாத மாணவிகளுக்குப் பொருளாதார ரீதியாக உதவுதல், பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல், பெண் குழந்தைகளின் விருப்பத் தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பைத் தொடர ஊக்குவித்தல், உயர் கல்வியினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்துத் துறைகளிலும் பங்கேற்கச் செய்தல், உயர்கல்வி உறுதித் திட்டத்தின் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், பெண்களின் சமூகத்தையும் பொருளாதாரப் பாதுகாப்பையும் உறுதி செய்தல் போன்றவற்றின் மூலம் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெறும் மாணவிகள் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்துத் தமிழ்நாட்டில் உயர்கல்வி

பயில்பவராக இருத்தல் வேண்டும் அல்லது தனியார் பள்ளிகளில் கல்வி உரிமைத் திட்டத்தின்கீழ் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயின்று 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவியர்களாக இருத்தல் வேண்டும். மாணவிகள் 8ஆம் வகுப்பு அல்லது 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்புகளில் படித்துப் பின்னர், முதன்முறையாக உயர்கல்வி நிறுவனங்களில் (Higher Education Institutions) சேரும் படிப்புக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

புதுமைப் பெண் திட்டத்தில், சான்றிதழ் படிப்பு (Certificate Course), பட்டயப் படிப்பு (Diploma/ITI./ D.TEd., Courses), இளங்கலைப் பட்டம் (Bachelor Degree - B.A., B.Sc., B.Com., B.B.A, B.C.A., and all Arts & Science, Fine Arts CourseS), தொழில் சார்ந்த படிப்பு (B.E., B.Tech., M.B.B.S., B.D.S. B.Sc., (Agri.), B.V.Sc., B.Fsc., B.L., etc.,) பாரா மெடிக்கல் படிப்பு (Nursing, Pharmacy, Medical Lab Technology, Physiotherapy etc.,) போன்ற படிப்புகளைப் பயிலும் மாணவிகளுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும், முதலாம் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டு செல்லும் மாணவியரும், இரண்டாம் ஆண்டிலிருந்து மூன்றாம் ஆண்டு செல்லும் இளங்கலை பட்டப்படிப்புப் பயிலும் மாணவியர்களும், தொழிற்கல்வியைப் பொருத்தமட்டில், மூன்றாம் ஆண்டிலிருந்து நான்காம் ஆண்டிற்குச் செல்லும் மாணவிகளுக்கும், மருத்துவக் கல்வியைப் பொருத்தமட்டில், நான்காம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு செல்லும் மாணவியர்களும் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைவர்.

அந்த வகையில், இன்று முதற்கட்டமாக 67,000 கல்லூரி மாணவிகள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் ஆகியோர், சென்னையில், 2,500 மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு வழிகாட்டிப் புத்தகம், நிதிக்கல்வி புத்தகம் அடங்கிய "புதுமைப் பெண்" பெட்டகப்பை வங்கி பற்று அட்டை (Debit Card) ஆகியவற்றை வழங்கினார்கள்.

கல்வி என்னும் நிரந்தரச் சொத்தினைப் பெண்கள் அனைவரும் பெற்றிட வேண்டும் என்ற பெண்ணுரிமைக் கொள்கையின் மறு உருவமாகவும், பெண் சமுதாயத்தின் வாழ்வில் ஒளியேற்றி வலிமையான பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையவும் இப்புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

"உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

Today, we have Hon'ble Chief Minister of Delhi Thiru. Arvind Kejriwal, as the special invitee, for the launch of three important and revolutionary schemes. He is not just the CM of Delhi. He is a FIGHTER!

He left his I.R.S job and entered public life to serve the people. With his hard work, he has become the Chief Minister of Delhi. Recently, he has made his party win in Punjab also. He is always very active. He is closely watched by everyone in the country.

We are happy that he is among us today, in Tamil Nadu. It is happy moment for Bharathi Women's College, that, such a celebrated leader has come to your college.

When I visited Delhi this year on 1st of April, I had the opportunity to see the Government Schools there. Tamil Nadu School Education Minister Anbil Mahesh also was with me.

Just as everything else in the country is getting modernized, our classrooms also need to be modern and attractive to our children. We planned to create such schools in Tamil Nadu and requested Hon'ble Arvind Kejriwal to come as a guest for the launch. Accepting my invitation, he is here today. On behalf of all of you, I welcome him.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செறுக்குக்குப் பெயர் பெற்றிருக்கக்கூடிய சிங்கப் பெண்களே!

தமிழ்நாடு அரசின் புதுமைப்பெண் திட்டத்தில் இணைந்திடக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்!

இப்போதே, உங்கள் வங்கிக் கணக்கில், உங்களுக்கான கல்வி உதவித்தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. வந்திருக்கிறதா? இல்லையா? சொல்லுங்கள். வந்தவர்களெல்லாரும் கொஞ்சம் கையை உயர்த்திக் காட்டுங்கள். பார்ப்போம். நன்றி, நன்றி.

அதற்கான குறுஞ்செய்தியை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்ற இனிய செய்தியோடு என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

தமிழ்நாட்டினுடைய பள்ளிக்கல்வி, உயர்கல்வியில் மாபெரும் பாய்ச்சலாக அமையவுள்ள திட்டங்களைத் தொடங்குகிற இந்நன்னாளில், மற்றுமொரு மகிழ்ச்சியான செய்தியையும் தொடக்கத்திலேயே உங்களுக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன்.

76 ஆண்டுகளைக் கடந்து கல்வித் தொண்டாற்றி வரக்கூடிய, உங்கள் பாரதி மகளிர் கல்லூரியில் ஒரு சில கட்டடங்கள் பாழடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பது என்னுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உங்கள் தேவையினை உணர்ந்து,

“மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வித் திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளிலும் பயிலக்கூடிய மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கையை அதிகரிக்கக்கூடிய வகையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய மகத்தான திட்டம் இந்தத் திட்டம்.”

உடனே, ரூ.25 கோடி மதிப்பீட்டில், 33 வகுப்பறைகள், 7 ஆய்வகங்கள், 2 நூலகங்கள், 3 ஆசிரியர் அறைகள் கொண்ட, தரைதளத்துடன் கூடிய 3 அடுக்குக் கட்டடம் கட்ட நான் ஆணையிட்டிருக்கிறேன். விரைவில் அந்தப் பணிகள் முடிந்து அந்தக் கட்டடம் நிச்சயமாக உங்களுடைய பயன்பாட்டுக்கு வரும்.

இந்திய நாட்டினுடைய முன்னாள் குடியரசுத் தலைவரான சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களுடைய நினைவாக, கல்விக் கண் திறக்கும் ஆசிரியர்களின் நாளாகக் கடைப்பிடிக்கப்படும் நாள் இந்த நாள்.

இந்திய விடுதலைக்காகத் தனது உடல், பொருள் அனைத்தையும் தியாகம் செய்த கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல், வீரமிகு வ.உ.சிதம்பரனார் அவர்கள் பிறந்தநாள் இன்று.

இப்படிப் பல பெருமைகளைக் கொண்டிருக்கக்கூடிய நாள்தான், இந்த நன்னாள்!

ஆக, தமிழ்நாடு அரசின் மிக முக்கியமான, முத்தானத் திட்டங்கள் இந்த நல்ல நாளில் தொடங்கி வைக்கப்படுகிறது.

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வித் திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளிலும் பயிலக்கூடிய மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கையை அதிகரிக்கக்கூடிய வகையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய மகத்தான திட்டம் இந்தத் திட்டம்.
- 15 மாதிரிப் பள்ளிகள், 26 தகைசால் பள்ளிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
- எனது வாழ்வில் மகிழ்ச்சிக்குரிய மகத்தான நாள் இன்று. அதை நினைக்கத்தக்க வகையில் மிக முக்கியமான நாளாக இது அமைந்திருக்கிறது.

கல்வி எனும் நீரோடை, ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், உயர்ந்த சாதி, தாழ்த்தப்பட்ட சாதி, கிராமம், நகரம் என்ற வேறுபாடும், மாறுபாடும் இல்லாமல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த அடிப்படையில்தான் 100 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி உருவானது. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்பது இதுதான்.

உயர்ந்த சாதியைச் சேர்ந்த பணக்காரர்கள் மட்டுமே படிக்க முடியும்; அதுவும் ஆண்கள் மட்டும்தான் படிக்க முடியும் என்று இருந்தது. அத்தகைய காலத்தில் இடஒதுக்கீட்டை உருவாக்கி, பள்ளிகளையும் உருவாக்கியது நீதிக்கட்சிதான்.

அந்தச் சமூக நீதியை, அரசியல்ரீதியாகக் காப்பாற்றியவர் தந்தைப் பெரியார் அவர்கள். ஆட்சி ரீதியாக அதைக் காத்தவர்கள் பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்! அவர்களது வழித்தடத்தில் நமது திராவிட மாடல் அரசு அமைந்துள்ளது.

இன்றைய நாள் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இந்தக் கல்லூரியில் படிக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான். அந்தத் திராவிட இயக்கத்தினுடைய பெண்ணுரிமைப் போராட்டங்களால் விளைந்த பயன்.

1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டை இந்த நிகழ்ச்சியில் நினைவுகூர்வது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த மாநாட்டில்தான் பெண்களுக்குச் சொத்துரிமை, பணியுரிமை, மறுமணம் செய்து கொள்ளலாம், தாங்களே தங்கள் இணையரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் எனப் பல புரட்சிகரமான பெண்ணுரிமைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட மாநாடுதான் அந்த மாநாடு.

அதன் நீட்சியாகத்தான், 1989ஆம் ஆண்டு, 60 ஆண்டுகளுக்குப் பிறகு, பெண்களுக்குச் சொத்தில் சமவுரிமை வழங்கக்கூடிய திட்டத்தைச் சட்டமன்றத்தில் கொண்டுவந்து அதை ஏகமனதாக நிறைவேற்றித் தந்த தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் படிக்கலாம்! இன்னும் சொல்லப்போனால், பெண்கள் படித்தே ஆக வேண்டும் என்ற நிலையைத் திராவிட இயக்கம் உருவாக்கியது.

அந்த வரிசையில் கல்வி, சமூகநீதி, பெண்ணுரிமைத் திட்டங்களை அதிகளவில் செயல்படுத்தி வருகிறோம். உயர்கல்வியிலும், பள்ளிக்கல்வியிலும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையிலும் தமிழக அரசு செயல்படுத்திவரும் முன்னுரிமைத் திட்டங்களின் மூலமாகத் தமிழ்ச் சமுதாயத்தின் மேம்பாடு என்பது பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்கொண்டு இருக்கிறது.

- இல்லம் தேடிக் கல்வி
- நான் முதல்வன்
- அதன் ஒரு பகுதியாகக் கல்லூரிக் கனவு
- இன்று தொடங்கப்பட்டிருக்கக்கூடிய புதுமைப் பெண் ஆகிய திட்டங்கள், நமது ஆட்சியினுடைய அடையாளங்கள்!

பள்ளியில் படிக்க வரும் மகளிருக்கு, கல்லூரிக்கு வருவதற்குத் தடையும், தயக்கமும் இருக்கிறது. அந்தத் தடையை உடைப்பதற்குத்தான் இந்த புதுமைப் பெண் திட்டத்தை நாம் உருவாக்கி இருக்கிறோம்.

'படிக்க வைக்கக் காசு இல்லையே' என்ற கலக்கம் பெற்றோருக்கு இருக்கக் கூடாது. இன்றைக்கு மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயண வசதி செய்துதரப்பட்டுள்ளது. இது பெண்களுக்குச் சமூகப் பொருளாதார விடுதலையை வழங்கி இருக்கிறது. இதனால், மாதந்தோறும் ரூ.600 முதல் ரூ.1,200 வரை செலவு மிச்சம் ஆகிறது என்று பெண்கள் சொல்கிறார்கள். இதனால் அரசுக்கு எத்தனை கோடி இழப்பு என்பதை நான் இங்குப் பேசமாட்டேன். இதன் மூலமாக எத்தனை இலட்சம் பெண்கள் சிறப்பு அடைகிறார்கள் என்பதுதான் நம்முடைய இலட்சியம்! அந்த வகையில், அது ஒரு முதலீடுதான்!

அத்தகைய எண்ணத்தோடுதான் இந்த புதுமைப் பெண் திட்டத்தையும் உருவாக்கி இருக்கிறோம்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித்திட்டம் என்று இதற்குப் பெயர்.

திராவிட இயக்கத்தின் பெண் சிங்கமாக இருந்தவர்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள்!

அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைகளை, அதற்காகக் குரல் கொடுத்தவர்தான் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். படிக்கக்கூடாது என்று தடுக்கப்பட்ட பெண்களுக்காகப் போராடியவர். அந்தக் காலத்தில் மூடநம்பிக்கைக் காரணமாக முடக்கப்பட்ட பெண்களுக்கு உரிமைக் கதவைத் திறந்துவிட்டவர் அவர். 100 ஆண்டுகளுக்கு முன்பு, மகத்தான புரட்சியைத் தந்தை பெரியாருடன் இணைந்து நடத்திக் காட்டியவர் அவர்.

1938ஆம் ஆண்டு தமிழ்காக்கும் போராட்டத்துக்காகத் திருச்சி முதல் சென்னை வரை நடந்த பேரணியில் நடந்து வந்தவர் அவர். திராவிட இயக்கத்தின் தீரர்களுக்கு விருதுகள் தரவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முடிவெடுத்து, அதன் மூலமாக, முதன்முதலாக வழங்கியது மூவலூர் அம்மையாருக்குத்தான் அந்த விருது வழங்கப்பட்டது. அத்தகைய பெருமைமிகு அம்மையார் பெயரால் இத்திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நான் எப்படி, எந்த நோக்கத்துக்காக உருவாக வேண்டும் என்று சிந்தித்தேனோ அதே நோக்கத்துடன், சிறப்பாகச் செய்து காட்டியிருக்கிறார், அமைச்சர் பொறுப்பேற்றிருக்கக்கூடிய கீதா ஜீவன் அவர்கள். அவரை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அவரை நான் ஏற்கெனவே தூத்துக்குடியில் பாராட்டிப் பேசுகிறபோது சொன்னேன். பெண் சிங்கம் என்று நான் பாராட்டி இருக்கிறேன். பெண்களின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு, அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆயிரம் ரூபாய் வழங்குவது என்பதை அந்த மாணவியர்க்கு இலவசமாக வழங்குவதாக அரசு கருதவில்லை. அப்படி வழங்குவதை அரசு கடமையாக நினைக்கிறது.

சமூக நீதி என்றால் என்ன என்பதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஓர் எடுத்துக்காட்டைச் சொன்னார்...

அதாவது, மந்தைகளில் இருந்து ஆடுகளை ஓட்டி வரக்கூடிய ஒருவர், ஒரே ஓர் ஆட்டை மட்டும் தன்னுடைய தோளில் தூக்கி வருவார். அந்த ஆடு, நடக்க முடியாததாக இருக்கும். அல்லது காலில் காயம் பட்டதாக இருக்கும். அதுதான் சமூக நீதி என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அப்படித் தோளில் தூக்கி எடுத்து வருவது அந்த ஆட்டுக்குக் காட்டும் சலுகை அல்ல, அந்த மேய்ப்பவரின் கடமை! அத்தகைய கடமை, திராவிட மாடல் தமிழ்நாடு அரசுக்கு இருப்பதால்தான் நாம் இத்தகைய திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

பள்ளியுடன் படிப்பை நிறுத்திவிடும் பெண்ணுக்கு ஆயிரம் ரூபாய் கிடைப்பதால் கல்லூரிக்குள் நுழைகிறார்கள். இதன் மூலமாகத் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி அதிகமாகும். படித்தவர் எண்ணிக்கை அதிகமாகும். அறிவுத்திறன் கூடும். திறமைசாலிகள் அதிகமாக உருவாகுவார்கள். பாலினச் சமத்துவம் ஏற்படும். குழந்தைத் திருமணங்கள் குறையும். பெண்கள் அதிகாரம் பெறுவார்கள். ஒவ்வொரு பெண்ணும் சொந்தக் காலில் நிற்பார்கள். யாருடைய தயவையும் அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். எதிர்பார்க்க வேண்டாம்! எந்தக் கொடுமையையும், இழிவையும் அவர்கள் சகித்துக்கொண்டு, அடங்கிப் போக வேண்டாம்!

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

நமது ஆட்சியினுடைய மையக் கருத்து என்பது இதுதான். அனைவருக்குமான வளர்ச்சியின் உள்ளடக்கம் என்பது எல்லார்க்கும் எல்லாம் என்பதே! அதனை மனதில் வைத்துத்தான் புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மாதிரிப் பள்ளிகளும், தகைசால் பள்ளிகளும் இதே நோக்கத்துடன்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தனியார்ப் பள்ளிகளில்தான் ஸ்மார்ட் வகுப்புகள் இருக்குமா?

அரசுப் பள்ளிகளிலும் நாம் உருவாக்குவோம் என்ற நோக்கத்துடன் இதனை நாம் இன்றைக்கு உருவாக்கி இருக்கிறோம். பணம் வைத்திருப்பவர்களுக்கு ஒரு மாதிரி கல்வி, அது இல்லாதவர்களுக்கு இன்னொரு மாதிரி கல்வி அல்ல. அனைவருக்கும் ஒரே மாதிரி கல்விதான் நம்முடைய நோக்கம்!

கடந்த ஓராண்டுக் காலத்தில் பள்ளிக் கல்வித் துறையானது மகத்தான பல சாதனைகளைச் செய்துள்ளது. இதனை நினைத்து உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்.

- ✷ இல்லம் தேடிக் கல்வி
- ✷ நான் முதல்வன்
- ✷ பள்ளி மேலாண்மைக் குழுக்கள்
- ✷ பள்ளி செல்லாப் பிள்ளைகளைக் கண்டறியச் செயலி
- ✷ சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குச் சிறப்பு நிதி
- ✷ 1 முதல் 3ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் இயக்கம்
- ✷ பயிற்சித் தாள்களுடன்கூடிய பயிற்சிப் புத்தகங்கள்
- ✷ 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி வினாப் போட்டிகள்
- ✷ மாணவர் மனசு என்ற ஆலோசனைப் பெட்டி
- ✷ ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம்
- ✷ கணித ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி
- ✷ உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்

> “நமது ஆட்சியினுடைய மையக் கருத்து என்பது இதுதான். அனைவருக்குமான வளர்ச்சியின் உள்ளடக்கம் என்பது எல்லார்க்கும் எல்லாம் என்பதே! அதனை மனதில் வைத்துத்தான் புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.”

✷ வகுப்பறை உற்று நோக்குச் செயலி

✷ வெளிப்படையான ஆசிரியர் கலந்தாய்வு

✷ முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

✷ இளந்தளிர் இலக்கியத் திட்டம்

✷ வயது வந்தோருக்கான கற்போம், எழுதுவோம் திட்டம்

✷ கல்வி தொடர்பான தரவுகள் கொண்ட கையேடு தரப்பட்டுள்ளது

✷ மின் ஆசிரியர் என்ற உயர்தர டிஜிட்டல் செயலி வழங்கப்பட்டுள்ளது

✷ இதோ இப்போது மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள் உருவாக்கப்பட இருக்கின்றன

முதற்கட்டமாக ரூ.171 கோடி மதிப்பீட்டில், 25 மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். இப்பள்ளியினுடைய கட்டடங்கள் நவீனமயமாக்கப்படும். கற்றல் செயல்பாடுகளுடன் சேர்த்துக் கலை, இலக்கியம், இசை, நடனம், செய்முறை அறிவியல், விளையாட்டு ஆகிய அனைத்துத் திறமைகளும் மாணவர்களுக்கு உருவாக்கப்படும். அதாவது மாணவர்களின் பல்துறைத் திறன் வெளிக்கொண்டு வரப்படும்.

இவை அனைத்து மாவட்டங்களுக்கும் அடுத்தடுத்து விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில், ரூ.150 கோடி மதிப்பீட்டில் பள்ளிக்கு ஒரு ஸ்மார்ட் வகுப்பறை உருவாக்கப்படும்.

பேராசிரியர் அன்பழகனார் பெயரிலான பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ரூ.7,500 கோடி மதிப்பீட்டில் பள்ளிக்கூடங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட இருக்கின்றன. பள்ளி வசதி ஏற்படுத்துதல், சமத்துவம், உட்கட்டமைப்பு, கற்றல் விளைவுகள், நிருவாகம் ஆகிய அளவுகோல்களில் சிறந்து விளங்கும் மாநிலங்களின் தரவரிசையில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பெற்றுள்ளது. இதைவிட அமைச்சராக இருக்கக்கூடிய அன்பில் மகேஸ் அவர்களுக்கு வேறு என்ன பாராட்டு இருக்க முடியும்? பள்ளிக் கல்வித்துறை நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களின் பெயரை மட்டும்தான் நான் இங்கே சொன்னேன். இதன் பயன்களை விளக்கிச் சொன்னால் பல மணி நேரம் ஆகும்.

இத்திட்டங்களின் மூலமாகத் தமிழகப் பிள்ளைகளின் எதிர்காலம் என்பது ஒளிமயமானதாக அமையும். இதனை எதிர்காலம் நிச்சயமாகச் சொல்லும்.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையுடன் தீட்டப்படக்கூடியவை! பார்த்துப் பார்த்துத் திட்டங்களைத் தீட்டுகிறோம்.

ஒரு சிற்பி, சிலையைச் செதுக்கும்போது ஒவ்வொரு நொடியும் கவனித்து, கவனித்துச் செதுக்குவதைப்போல தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியானது கவனத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த வாய்ப்பைத் தமிழ்நாட்டின் இளைய தலைமுறை முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்!

நீங்கள் அனைவரும் நன்கு படியுங்கள். ஒரு பட்டத்தோடு நிறுத்திவிடாதீர்கள். உயர்கல்வியைப் படியுங்கள். ஏதாவது ஒரு பாடத்தில் ஆராய்ச்சிகள் செய்யுங்கள். பட்டம் முடித்ததோடு நின்றுவிடாதீர்கள். தகுதியான வேலைகளில் சேருங்கள். பெண்களுக்குப் பொருளாதார விடுதலை என்பது மிக மிக முக்கியம். தகுதியுள்ள வேலைவாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிக்கும் காலத்தில் திறமையாகச் செயல்படக்கூடிய பல பெண்கள், திருமணத்துக்குப் பிறகு வீட்டுக்குள் முடங்கிவிடுகிறார்கள். கல்வி அறிவும், கலைத்திறனும், தனித்திறமைகளும்தான் யாராலும் அழிக்க முடியாத சொத்துக்கள்! அதனைப் பயன்படுத்தி வாழ்நாள் முழுக்க நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் புதுமைப் பெண் திட்டத்தைத் தொடங்கி வைக்கும்பொழுது, ஒரு தந்தைக்குரிய கடமை உணர்வோடு நான் உங்கள் முன்னால் உரையாற்றிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் புதுமைப் பெண் திட்டத்தை ஒட்டிய, அந்த அழகிய பையில், நேர்த்தியாக இருக்கக்கூடிய நலினமும் அடங்கியிருக்கிறது. அந்தப் பையை நீங்கள் திறந்து பார்த்தீர்கள் என்றால்,

நீங்கள் உயர்கல்வியில் என்ன படிக்கலாம், எங்குப் படிக்கலாம், என்பது குறித்து விளக்கமான விபரங்கள் அடங்கிய ஒரு கையேடு ஒன்று உங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது உயர்கல்வி படிக்க உங்களுக்குப் பெரிதும் உதவும். அது மட்டுமல்ல, மாதா மாதம் ரூ.1,000 பெறப்போகக்கூடிய நீங்கள் அதை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்தான, நிதியை எப்படிக் கையாளுவது குறித்தான வழிமுறை. அது குறித்தும் கையேடு உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாதா மாதம் உங்களுடைய வங்கிக் கணக்கில் அது வரவு வைக்கப்படும். இந்த 1,000 ரூபாயை நீங்கள் முறையாகப் பயன்படுத்த வேண்டும். உங்களுடைய தாய், தந்தையரின் ஆலோசனையைப் பெற்று, ஆனால் உங்களுடைய கல்வி வளர்ச்சிக்காக மட்டுமே நீங்கள் பயன்படுத்துங்கள்.

மீண்டும் சொல்கிறேன், நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்கள் தந்தையின் இடத்தில் இருந்து நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களை வளர்த்தெடுக்கத்தான் நாங்கள் இருக்கிறோம். இந்த அரசும் இருக்கிறது. புதுமைப் பெண் போன்ற ஏராளமான திட்டங்களைக் கொண்டு வருவோம்.

இவ்விழாவைத் தொடங்கி வைப்பதற்காக எங்கள் அழைப்பை ஏற்று இங்கே வருகை தந்திருக்கக் கூடிய தில்லியினுடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. அர்விந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றி கூறி விடைபெறுகிறேன்.

அக்டோபர் 2:
மகாத்மா காந்தியடிகள் அவர்களின்
பிறந்தநாள்

உத்தமர் காந்தியடிகள்

"உத்தமர் காந்தியடிகளைப் பொறுத்தவரையில், இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் அவருடையப் புகழைப் பாடினாலும் அவருடைய பெருமையை எடுத்துச் சொல்கிற விழாக்களை நடத்தினாலும், அவர் நினைவைப் போற்றினாலும்; அவரைப் பாராட்டுவதில் அவருடைய சிறப்பியல்புகளை எடுத்துச் சொல்வதில் தமிழகத்திற்கு ஒரு தனி உரிமை உண்டு, தனிப் பெருமையும் உண்டு.

ஏனென்றால், இந்திய நாட்டின் விடுதலைக்காக அவர் போர்க்கொடி தூக்குவதற்கு முன்பே அவர் நிறவெறியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தென்னாப்பிரிக்காவிலே ஒரு பெரிய போராட்டத்தை நடத்தியவராவார். அந்தப் போராட்டத்தின்போது அவர் பெரிதும் மதித்துப் போற்றிய இந்திய நாட்டுத் தேசிய இனங்களில் ஒன்று தமிழ் இனம் என்பதை நான் இங்கே மிகுந்த பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய உத்தமர் காந்தியடிகள் இந்தியாவிலே வேறெங்கும் சென்று அங்குள்ள பகுதிகளைக் காண விரும்பியதைவிட முதன்முதலாக அவர் விரும்பியது தமிழகத்திலே, அதிலும் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே தில்லையாடி வள்ளியம்மாள் பிறந்த அந்த ஊரைத்தான் காண வேண்டுமென்கிற அந்த உணர்வோடு அந்த ஊருக்கு வந்தார். தில்லையாடி வள்ளியம்மாளின் பூர்வீக உறவினர்கள் பெற்றோர், உற்றார் ஆகியோர் வாழ்ந்த அந்த இடங்களையெல்லாம் பார்த்தார்.

இந்தியாவின் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழும் ஆகவேண்டும் என்பதற்கு உத்தமர் காந்தியடிகள் அன்றைக்கே 1909ஆம் ஆண்டிலேயே, அதாவது 90 ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து முழங்கிய அந்த முழக்கத்தைத்தான் செயல்படுத்துவதற்குத் தமிழகத்திலே உள்ள தமிழ் மொழியின்மீது ஆர்வமும் அன்பும் பற்றும் பாசமும் கொண்ட கட்சிகள் மாத்திரமல்ல, இந்தியாவின் ஒற்றுமைக்கு இதுதான் துணையாக, இருக்க முடியுமென்று எண்ணுகின்ற அத்தனைப் பேரும், இந்தியா முழு ஒருமைப்பாட்டை அடைய வேண்டுமென்றால் சென்னை மாகாணத்திற்கு, அதாவது தமிழகத்திற்கு வெளியே உள்ளவர்களும் தமிழ் மொழியை விரும்பிக் கற்க வேண்டும்".

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்
02.10.1999 அன்று நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின் 131ஆவது பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை

தமிழ்நாட்டில் முதன்முதலாக 26 தகைசால் பள்ளிகள் மற்றும் 15 மாதிரிப் பள்ளிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில்,
மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. **அர்விந்த் கெஜ்ரிவால்** அவர்கள் தொடங்கிவைத்தார் (05.09.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் 05.09.2022 அன்று சென்னை, பாரதி பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பாடத்திட்டம் சார்ந்தும் அதைக் கடந்தும் முழுமையான கல்வியை வழங்கிடும் வகையில் தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக 26 தகைசால் பள்ளிகளையும், அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை, விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் 15 மாதிரிப் பள்ளிகளையும் தொடங்கிவைத்தார்.

தகைசால் பள்ளிகள் (Schools of Excellence)

மாணவர்களின் கற்றலுக்கும், திறன் வெளிப்பாட்டிற்கும் முக்கிய காரணமாக விளங்குவது அவர்கள் பயிலும் பள்ளிகளில் உள்ள வசதிகளும், ஆசிரியர்களும், பள்ளித் தலைமையும்தான். மாணவர்கள் அடையவேண்டிய இலக்கையும் செல்லும் திசையையும் உறுதிசெய்தல், திறன்களை வளர்த்துக்கொள்ள வசதிகளை ஏற்படுத்தித் தருதல், ஆசிரியர் மாணவர் இடையே பிணைப்புடன் கூடிய கற்றல், கற்பித்தல் ஆகியவை மாணவர்களின் முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணிகள் ஆகும்.

இந்த இலக்கை அடைய, பாடத்திட்டம் மட்டுமில்லாது, ஒருங்கிணைந்த நூலகம், விளையாட்டு, கலைகள், இலக்கியம் என அனைத்தும் சேர்ந்த ஒரு முழுமையான கல்வி பள்ளிகளில் தேவைப்படுகிறது. நேரிடையாகவும், இணைய வசதிகளைப் பயன்படுத்தியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற பல்வேறு பயிற்சிகளின் விளைவாகவும் வருங்காலத்தில் மாணவர்கள் பெருமளவில் பலனடைந்து முன்னேற்றம் காண்பார்கள்.

அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தினை மேலும் உயர்த்துவதற்காக, முதற்கட்டமாகத் திருவள்ளூர் மாவட்டம் - பூந்தமல்லி, காமராஜ் நகர், சென்னை மாவட்டம் - தி.நகர், அசோக் நகர், காஞ்சிபுரம் மாவட்டம் - பெரிய காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டம் - காட்டாங்குளத்தூர், நந்திவரம், இராணிப்பேட்டை மாவட்டம் - ஆற்காடு, வேலூர் மாவட்டம் - வேலூர், திருப்பத்தூர் மாவட்டம் - நாட்டாரம்பள்ளி, வாணியம்பாடி, தருமபுரி மாவட்டம் - தருமபுரி, விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம், சேலம் மாவட்டம் - சேலம் நகரம், குகை, ஈரோடு மாவட்டம் - ஈரோடு, நீலகிரி மாவட்டம் - கூடலூர், கோயம்புத்தூர் மாவட்டம் - கோயம்புத்தூர், திண்டுக்கல் மாவட்டம் - பழனி, கரூர் மாவட்டம் - குளித்தலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திருச்சிராப்பள்ளி, கடலூர் மாவட்டம் - கடலூர், நாகப்பட்டினம் மாவட்டம் - நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம் - பட்டுக்கோட்டை, சிவகங்கை மாவட்டம் - திருபுவனம், மதுரை மாவட்டம் - மதுரை தெற்கு, தூத்துக்குடி மாவட்டம் - கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் - திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டம் - அகஸ்தீஸ்வரம், கிருஷ்ணகிரி மாவட்டம் - கிருஷ்ணகிரி, திருப்பூர் மாவட்டம் - திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடங்கப்படுகின்றன.

மாணவர்களின் திறன்களை வளர்க்கவும், விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை அதிகரிக்கவும், வகுப்பிற்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையிலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே கற்றல் எல்லைகளை விரிவுபடுத்தவும் இந்தப் பள்ளிகள் தளமாக விளங்கும்.

இலக்கை உணர்ந்துகொள்வதற்கான வலுவான அடித்தளமிடும் வகையிலும், கற்றலுக்கேற்ற வகையிலும் தகைசால் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். மாணவர், ஆசிரியர் விகிதாச்சாரத்திற்கேற்ப நவீன வசதிகள்கொண்ட வகுப்பறைகள் ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்தப்படும். மாணவர்களின் கற்றல் திறனை அறிந்துக்கொள்ளும் வகையில் குறிப்பிட்ட இடைவேளைகளில் நடக்கும் மதிப்பீட்டு முறைகளையும், ஆண்டு இறுதியில் நடக்கும் மதிப்பீட்டு முறைகளையும் மேற்கொள்ள வசதியாக ஸ்மார்ட் வகுப்பறைகள் எனப்படும் திறன் வகுப்பறைகளும், தமிழ்நாட்டின் தனித்துவமாக விளங்கும் இணைய வசதியோடுகூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களும் இப்பள்ளிகளில் ஏற்படுத்தப்படவுள்ளன.

தகைசால் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டிகள், பல்துறை வல்லுநர்கள் பங்கேற்று உரையாடும் கோடை முகாம்கள், பல்வேறு கலைகளில் தங்கள் திறன்களை வளர்த்துக்கொண்டு கற்றலின் மகிழ்வை அடைய வழிவகை செய்யப்படும்.

ஆசிரியரின் திறமைகளும், வெளிப்பாடுகளும் மாணவர்களின் முன்னேற்றத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளதால், ஆசிரியர்கள் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில், பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயனடைய ஊக்குவிக்கப்படுவர். மேலும், அவ்வகுப்புகளில் துறைசார் நிபுணர்களும், தொழிற்துறை வல்லுநர்களும் பங்கேற்று அவர்களோடு கலந்துரையாடுவர். நாட்டின் முக்கியமான நிறுவனங்களை நேரில் சென்று பார்வையிடவும் வழிவகை செய்யப்படும்.

இத்தகைசால் பள்ளிகளில், பாடத்திட்டம் சார்ந்தும் அதைக் கடந்தும் மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்கிடும் வகையில், பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக தகைசால் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், கலைகள், நாடகங்கள், இசை போன்றவற்றை அரங்கேற்றப் பெரிய அரங்கமும், அவற்றைக் கற்றுத்தர ஆசிரியர்களும், விளையாட்டுத் துறைக்கென உடற்பயிற்சி ஆசிரியர்களும், நூலகர்களும் பணியமர்த்தப்படுவர்.

அனைத்து வசதிகளும்கொண்ட நூலகம் மற்றும் அர்ப்பணிப்புணர்வோடு பணியாற்றும் சிறந்த நூலகர்கள் வாயிலாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் மேம்படுத்தப்படும். விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்குத் தொழில்முறை பயிற்சியாளர்கள் வாயிலாக அவர்களுடைய விளையாட்டுச் செயல்பாடுகளில் முன்னேற்றத்தை உண்டாக்கி அவர்களது மனநலமும், உடல்நலமும் பேணப்படும். கலைகள், நாடகங்கள், இசை ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களின் தன்னம்பிக்கையும் வெளிப்பாட்டுத் திறனும் வளர்க்கப்படும். இவற்றோடு மெய்நிகர் டிஜிட்டல் உலகத்தோடு போட்டியிடும் வகையில் மாணவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படும். இத்திட்டம் வருங்காலத்தில் படிப்படியாக அனைத்து மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.

மாதிரிப் பள்ளிகள்

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுத்துறைகளில் சிறந்து

விளங்குவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையிலும், அரசுப் பள்ளி மாணவர்கள் சிறந்த கல்வி நிறுவனங்களில் தொழில்முறைக் கல்விப் பிரிவுகளில் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் மருத்துவம்– STEAM) சேர்ந்து பயிலும் வாய்ப்பினை உறுதி செய்யும் வகையிலும் மாதிரிப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இந்தக் கல்வியாண்டிற்குள் சென்னை, மதுரை, திருப்பத்தூர், நீலகிரி, திருவாரூர், சிவகங்கை, ஈரோடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருவள்ளூர், வேலூர், நாகப்பட்டினம், இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள 15 அரசுப் பள்ளிகள் மாதிரி பள்ளிகளாகத் தொடங்கப்படுகின்றன.

அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றியும், மாணவர்களின் கல்வி, கலை விளையாட்டு போன்ற கூடுதல் பாடத்திட்டங்கள் உட்பட அவர்களின் ஒட்டுமொத்த செயல்திறனை அடிப்படையாகக்கொண்டும் மாதிரிப் பள்ளிகளில் சேர்க்கை நடைபெறுகிறது.

கல்வி நிபுணர்கள் குழுவால் மாதிரிப் பள்ளிகளுக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புக் கற்றல் மேலாண்மை அமைப்பைப் பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி, மாதிரிப் பள்ளிகளில் ஒவ்வொரு மாணவரின் ஒட்டுமொத்த ஆளுமையை மெருகேற்றி இணைக் கல்வி செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மாதிரிப் பள்ளிகள் ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் திறன், மனோதத்துவ அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை மேற்கொள்வது பற்றிய ஆழமான விழிப்புணர்வை வளர்ப்பதற்கு ஒரு தனித்துவமான தொழில் வழிகாட்டுதல் வாய்ப்பினையும் வழங்குகிறது.

அதனைத் தொடர்ந்து சென்னை, கோட்டூர்புரத்திலுள்ள சிறப்புமிக்க அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அர்விந்த் கெஜ்ரிவால் அவர்களை அழைத்துச் சென்று, முதல் தளத்தில் உள்ள குழந்தைகள் பிரிவில் குழந்தைகளுக்கான நிகழ்வாக முனைவர் வேலு சரவணன் அவர்கள் வழங்கிய "கடல் பூதம்" நிகழ்ச்சியைப் பார்வையிட்டார்கள். மேலும், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்கள் ஆறாம் தளத்தில் உள்ள பொறியியல், வேளாண்மைப் பாடப்பிரிவு, ஏழாம் தளத்தில் உள்ள ஓலைச் சுவடிப் பிரிவு ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

மேலும், நூலகத்தின் எட்டாம் தளத்தில் மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்களுக்கு, மாதிரிப் பள்ளிகள் மற்றும் இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கப்பட்டு, மதுரையில் கட்டப்பட்டுவரும் கலைஞர் நினைவு நூலகம் மற்றும் இல்லம் தேடிக் கல்வித் திட்டம் குறித்த குறும்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்கள் அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, சென்னை ஆகிய மாவட்டங்களிலுள்ள மாதிரிப் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடி அம்மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்களுக்கு இல்லம் தேடிக் கல்வித் திட்டம் குறித்த புகைப்பட விளக்கப் புத்தகத்தை (Coffee Table Book) வழங்கினார்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பார்வையிட்ட பின்பு, மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள், நூலகத்தின் வருகைப் பதிவேட்டில், "It's a pleasure to visit this library. Such huge collection of books and manuscripts so well managed and kept. It's not just Tamil Nadu's pride but India's pride. Keep it up" என்று தனது கருத்தினை எழுதிக் கையொப்பமிட்டார்.

கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சி அவர்களின் 151ஆவது பிறந்த நாள்

கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.09.2022 அன்று சென்னை, இராஜாஜி சாலை, துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

“செக்கிழுத்த செம்மல்”



சுதேசி இயக்கத்திற்கு இலக்கணமாய்த் திகழ்ந்து, தியாகத்தின் முழு உருவான ‘செக்கிழுத்த செம்மல்’ வ.உ.சிதம்பரனாரின் பிறந்தநாளில் அவரது தியாகத்தைப் போற்றிடுவோம்!

தற்சார்பு - தன்னிறைவு போன்றவற்றை உண்மையாக நெஞ்சில் ஏந்திச் செயல்பட்ட அவரது வழிநடப்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு - 05.09.2022

இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதுதான் நமது அரசின் சாதனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.09.2022 அன்று திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சபாநாயகராக, அவையில் சட்டமன்ற உறுப்பினர்களைப் போதும், போதும் என்று சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்களை உட்காரவைப்பார். ஆனால், அப்படிப்பட்ட சபாநாயகரை யாரும் உட்காரவைக்க முடியாது. அதனால்தான், நேற்றைய தினம், அவரை நன்றாகப் பேசுங்கள், சுருக்கமாகப் பேசுங்கள் என்று சொன்னேன். ஆனால், அதை அவரே குறிப்பிட்டுக் காட்டி, நன்றாகப் பேசினார். ஆனால், சுருக்கமாக பேசவில்லை. இருந்தாலும், அவர் ஆற்றிய உரை, அவர் எடுத்துச்சொன்ன கருத்துக்கள், நம்முடைய கழகம் ஆட்சிக்கு வந்து செய்திருக்கக்கூடிய சாதனைகள், மக்களுக்குப் போய் சேரவேண்டும் என்கின்ற அந்த உணர்வோடு, அழகோடு, தெளிவோடு, விளக்கமாக அவர் எடுத்துவைத்திருக்கிறார். அதற்காக நான் அவருக்கும், அதைப்போல, அவருக்கு முன்பு உரையாற்றியிருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வீரத்தின் விளைநிலமாக இருக்கக்கூடிய இந்த திருநெல்வேலிச் சீமையில் நடைபெறக்கூடிய இந்த அரசு விழாவில் கலந்து'கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி என்று திருஞான சம்பந்தரும், தண்பொருநைப் புனல் நாடு எனச் சேக்கிழாரும், பொன் திணிந்த புனல் பெருகும் பொருநைத் திருநதி என்று கவிச்சக்கரவர்த்தி கம்பராலும் பாடப்பட்ட ஊர் இந்த நெல்லை.

பாண்டிய நாட்டின் தலைநகரமாகவும் சில காலம் செயல்பட்ட ஊர் இந்த நெல்லை. வீரமா? நெற்கட்டான்செவல் பூலித்தேவன், ஒண்டி வீரன், அழகுமுத்துக்கோன்! இலக்கியமா? சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் பிறந்த ஊர். சாகித்ய அகாடமி விருது வாங்கிய பத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் சொந்த ஊர் இந்த ஊர். ஆன்மிகமா? நெல்லையப்ப சுவாமி கோயில் வானுயர எழுந்து நிற்கிறது.

கல்வியா? இங்கு இல்லாத கல்வி நிறுவனங்கள் இல்லை என்பது மட்டுமல்ல, தமிழகத்தில் அதிகமான இந்தக் கல்வி நிறுவனங்கள் முதன்முதலாக உருவானது நெல்லைச் சீமையில்தான். 'தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு' என்று அழைக்கப்படக்கூடிய பாளையங்கோட்டை இருக்கக்கூடிய நகரம் இது. நெல்லையப்பர் கோவில் குடமுழுக்கு 1944ஆம் ஆண்டு நடந்தது. அதன் பிறகு, 1974ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான் குடமுழுக்கு நடத்தப்பட்டது. திருப்பணிக் குழுத் தலைவராக இருந்த திருமுருக கிருபானந்தா வாரியார் அவர்களை நியமித்து, குடமுழுக்கைச் சிறப்பாக நடத்திக் காட்டியவர் அன்றைக்கு தமிழக முதல்வராக இருந்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். 1973ஆம் ஆண்டு நெல்லைச் சீமையில் ஈரடுக்குப் பாலத்தை அமைத்துத் தந்தவர், அந்த ஈரடுக்குப் பாலத்திற்குத் திருவள்ளுவர் பெயரைச் சூட்டி மகிழ்ந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இத்தகைய சிறப்புமிக்க வரலாற்றைப் பெற்றிருக்கக்கூடிய இந்த மாநகரத்தில் இந்த அரசு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு ராஜகண்ணப்பன் அவர்கள் இந்த விழாவை மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு, சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கிறார்.

> “ பொருநை நாகரிகம் தோன்றிய இடம் இது. ஆதிச்சநல்லூர், சிவகளை உள்பட தாமிரபரணி ஆற்றங்கரையில் நடக்கும் அகழாய்வில் கிடைக்கும் பொருட்களைக் காட்சிப்படுத்திப் பொருநை நாகரிகத்தின் பெருமையைக் கூறும் வகையில் ரூ.15 கோடி மதிப்பில் பொருநை அருங்காட்சியகம் நெல்லையில் அமைகிறது. ”

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் அமைச்சராகவும், இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராகவும், இரட்டைக் குதிரை வேகத்தில் அவர் செயல்பட்டிருக்கிறார். அவரது மாவட்டம் இராமநாதபுரமாக இருந்தாலும், இந்த நெல்லையைத் தொல்லையாக நினைக்காமல் தனது எல்லையாக வைத்துச் செயல்பட்டிருக்கிறார். அவரையும், அதேபோல, இந்த மாவட்டத்தின் ஆட்சித்தலைவர் திரு.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்களையும், நெல்லை மாநகரத்தினுடைய மேயர் சரவணன் அவர்களையும், மாவட்ட நிருவாகத்தையும், மாநகராட்சி நிருவாகத்தையும் நான் அரசின் சார்பில் மனதார வாழ்த்துகிறேன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஓராண்டுக் காலத்தில், திருநெல்வேலி மாவட்டத்துக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கக்கூடிய நலத்திட்டங்கள் அதனால் மக்கள் அடைந்திருக்கக்கூடிய பயன்கள் என்பவை மிகமிக அதிகம்.

- இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ், 1,113 பேர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சைப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.
- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், இதுவரை 25 தரிசுநிலத் தொகுப்புகள் கண்டறியப்பட்டு விளைநிலங்களாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கூட்டுறவுத்துறையின் சார்பில், 9,389 விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் தரப்பட்டுள்ளது.
- 28,129 பயனாளிகளுக்கு, நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், இதுவரை, 20 இலட்சத்திற்கும் அதிகமான நோயாளிகளுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுப் பயனடைந்திருக்கிறார்கள்.
- இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின்கீழ், 54,917 மாணவ, மாணவியர் பயனடைந்திருக்கிறார்கள்.
- மகளிருக்கான இலவசப் பயணத் திட்டத்தின்கீழ், இதுவரை, 6.92 கோடிக்கும் மேற்பட்ட மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்து பயனடைந்திருக்கிறார்கள்.
- தமிழகத்தில் ஒரு இலட்சம் உழவர்களுக்குப் புதியதாக இலவச மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது என்றால், அதில் இந்த நெல்லை மாவட்டத்தில் 3,421 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

இந்த வரிசையில் இன்றைய தினம் மேலும் பல்வேறு சாதனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன

- ரூ.156.28 கோடி மதிப்பீட்டிலான 727 பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
- ரூ.74.24 கோடி மதிப்பிலான 29 முடிவுற்ற திட்டப்பணிகள் மக்களுடைய பயன்பாட்டிற்காக இன்று இந்த மேடையிலே, இந்த விழாவிலே துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- 30,658 பயனாளிகளுக்கு ரூ.117.78 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் இந்த மேடையிலே வழங்கப்பட இருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னாலும், பல்வேறு திட்டப்பணிகளைச் சொல்லலாம்.
- மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி வற்றாத ஜீவநதியாக ஓடிக் கொண்டிருப்பது தண்பொருநை எனப்படக் கூடிய தாமிரபரணி!

பொருநை நாகரிகம் தோன்றிய இடம் இது. ஆதிச்சநல்லூர், சிவகளை உள்பட தாமிரபரணி ஆற்றங்கரையில் நடக்கும் அகழாய்வில் கிடைக்கும் பொருட்களைக் காட்சிப்படுத்திப் பொருநை நாகரிகத்தின் பெருமையைக் கூறும் வகையில் ரூ.15 கோடி மதிப்பில் பொருநை அருங்காட்சியகம் நெல்லையில் அமைகிறது.

- முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய கனவுத் திட்டம்தான் தாமிரபரணி - நம்பியாறு - கருமேனியாறு நதிநீர் இணைப்புத் திட்டம்! நம்முடைய சபாநாயகர் அப்பாவு அவர்கள் அதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

2009ஆம் ஆண்டு, நான் துணை மேயராக இருந்தபோது, நம்முடைய முதல்வராக இருந்த

கலைஞர் அவர்கள், அந்தத் திட்டத்திற்கு முதற்கட்டமாக, ரூ.369 கோடி நிதி ஒதுக்கினார். ஆனால், அதற்கு பிறகு வந்த ஆட்சியில், கடந்த காலத்தில் 10 ஆண்டுகளில் எந்தப் பணியும் நடைபெறவில்லை, அது கிடப்பில் போடப்பட்டது.

மீண்டும் இப்பொழுது நம்முடைய கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தத் திட்டத்தை விரைந்து முடிக்க நான் உத்தரவிட்டிருக்கிறேன். அதைத்தான் இங்கே குறிப்பிட்டார். ஆகவே, அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், நான் உறுதியோடு சொல்கிறேன். மக்களுடைய பயன்பாட்டிற்கு 2023ஆம் ஆண்டிற்குள் அது முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வரப்போகிறது.

இந்தத் திட்டம் நிறைவேறும் நிலையில், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வறட்சியான பகுதியாக இருக்கக்கூடிய 20,340 ஹெக்டேர் வேளாண் நிலம் பயன்பெறுவதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களும் இதனால் பயன் பெறப்போகின்றன.

- நெல்லை என்றால் நினைவுக்கு வருவது கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரும், மகாகவி பாரதியாரும்தான். அவர்கள் பயின்ற பள்ளியான நெல்லை சந்திப்பில் உள்ள ம.தி.தா. இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் அலங்கார வளைவு, கலையரங்கம், அவர்கள் படித்த வகுப்பறையை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.1.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
- செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் 151ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை ஸ்ரீபுரத்தில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் அவரது வாழ்க்கை வரலாற்றை வருங்காலத் தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் ஒலி-ஒளிக் காட்சி அமைக்கப்படுகிறது. இதற்காக ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுப் பணிகள் தொடங்கி உள்ளன.
- பாண்டிய மன்னர்கள், பாளையக்காரர்களின் கோட்டையாக இருந்து, தற்போது மேடை காவல் நிலையமாக உள்ள கட்டடம், பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு மக்களுடைய பார்வைக்கு இங்கே அர்ப்பணிக்கப்படுகிறது.
- முத்தமிழறிஞர் கலைஞரால் கொண்டுவரப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் மணிமண்டபத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் நூலகம் கட்டப்பட்டுள்ளது.
- நெல்லை மாவட்டம் - பாபநாசம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வசிக்கக்கூடிய காணிப் பழங்குடி இன மக்களின் நீண்டநாள் கனவான பட்டா கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தனிநபர் உரிமைப் பட்டா 78 பேருக்கு வழங்கப்படுகிறது.

> “நெல்லை என்றால் நினைவுக்கு வருவது கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனாரும், மகாகவி பாரதியாரும்தான். அவர்கள் பயின்ற பள்ளியான நெல்லை சந்திப்பில் உள்ள ம.தி.தா. இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் அலங்கார வளைவு, கலையரங்கம், அவர்கள் படித்த வகுப்பறையை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.1.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.”

- காணி இன மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில், தேன், தோட்டப்பயிர்கள், கிழங்கு வகைகள் ஆகியவற்றை மதிப்புக் கூட்டிச் சந்தைப்படுத்தும் வகையில், அவர்களுக்கு அங்ககச்சான்று வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்குக் கிடைக்கும் வகையில் விற்பனை மையங்கள் தொடங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.
- தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகவும், தமிழகம், இந்தியாவிலே முதன்மை மாநிலமாக விளங்கவும் நகர்ப்புற மாவட்டங்கள் மட்டுமில்லாமல் கிராமப்புறப் பகுதிகளிலும், தொழில்முனைவோர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) மூலம் மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில், வட்டாரப் புத்தொழில் மையங்கள் அமைக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நெல்லை, பாளையங்கோட்டை மாவட்ட கிளப்பில், புத்தொழில் மற்றும் புத்தாக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டப் புத்தாக்க மையத்தின்கீழ், தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கும் மையமாக இது செயல்படும். அதேபோல, கல்லூரிகளுக்குச் சென்று வேலைவாய்ப்பு, தொழில் உருவாக்கம், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புக்கு உதவுதல் உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்படும்.

- காடுகளை வளமாக வைத்திருக்க யானைகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. நெல்லை மாவட்டம் அகத்தியர்மலை யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இம்மாவட்டத்திலுள்ள கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்திற்கு ராம்சர் குறியீடும் வழங்கப்பட்டுள்ளது!
- கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் இப்பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சூரிய மின்கலன் உற்பத்தி ஆலை அமைக்கப்படவுள்ளது.

இன்றுகூட காலையில், தினமணி பத்திரிகையில், பல்வேறு செய்திகளை நான் பார்த்தேன். நீங்களும் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இந்த மாவட்டத்திற்கு என்னென்ன தேவைப்படுகிறது என்பதை எடுத்து வெளியிட்டிருந்தார்கள். மிக்க மகிழ்ச்சி! அது குறித்து நான் அதிகாரிகளோடு உடனடியாகக் கலந்து ஆலோசனை செய்தேன். எனவே, அது குறித்து ஒரு அறிவிப்பை இந்த மேடையில் மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, திருநெல்வேலி மாவட்டத்தில், இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில், சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையிலும், மக்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், மணிமுத்தாறு அணை அருகே ரூ.7 கோடி மதிப்பீட்டில் பல்லுயிர் சுற்றுச்சூழல் பூங்கா (Biodiversity Eco Park) ஒன்று அமைக்கப்படும்.

இரண்டாவது, வாழை விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, களைக்காட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வாழை ஏல மையம் ஒன்று அமைக்கப்படும்.

அடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில், விளையாட்டு வீரர்கள் அதிக எண்ணிக்கையிலும், மிகுந்த ஆர்வத்துடனும் உள்ளனர். இவர்களை ஊக்குவித்து, தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் அதில் பங்கெடுக்கச் செய்யும் வகையில் இராதாபுரத்தில் விளையாட்டு அரங்கம் மற்றும் பயிற்சி மையம் ஒன்று அமைக்கப்படும்.

நிறைவாக, நெல்லை மக்களுடைய மற்றொரு நீண்டகாலக் கோரிக்கையான திருநெல்வேலி மாநகர மேற்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் நிறைவடைந்தபின், ரூ.370 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டங்களாக, திருநெல்வேலி மாநகரத்திற்கு மேற்கு புறவழிச் சாலை அமைக்கப்படும். இத்தகைய சிறப்பான பணிகளைத்தான் மாதந்தோறும், வாரம்தோறும், ஏன் தினந்தோறும் தொடங்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இரண்டு முக்கியமான திட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் அமலில் உள்ளதைப் பார்த்து நான் உள்ளபடியே இந்த மாவட்ட நிருவாகத்தை மனம் திறந்து பாராட்டுகிறேன்.

- தமிழகத்தில் முதன்முறையாக, நெல்லை மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள் உடல்நல ஆலோசனை மற்றும் சிகிச்சை குறித்த டிஜிட்டல் பராமரிப்பு முறைக்காகத் 'தாய்-கேர் நெல்லை' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, கர்ப்பிணித் தாய்மார்களைத் தொடர்ந்து கண்காணித்து,

அழிந்து, காணாமல்போய் இருப்பது கண்டறியப்பட்டு அந்தக் கால்வாய் இப்போது தூர்வாரப்பட்டிருக்கிறது. இதனால், எதிர்வரக்கூடிய பருவமழையின்போது மாநகருக்குள் வெள்ளநீர் வருவது தடுக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் செல்லும்போது, அந்தந்த மாவட்டங்கள் அவற்றுக்கே உரிய தனித்தன்மையுடன் வளர்ச்சியடைந்து வருவதை நான் பார்க்கிறேன். அனைத்து மாவட்டங்களும் வளர்வதுதான் சீரான வளர்ச்சி!

சட்டமன்றத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்கள் தொகுதிக்கான கோரிக்கைகளை முன்வைக்கும்போது, சொல்லி வைத்ததுபோல, அனைவருமே, என்ன பேசுவார்கள் என்றால், "என்னுடைய தொகுதி பின்தங்கிய தொகுதி, ஆகவே இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும்" என்று கேட்பார்கள்.

அவர்களின் முழு உடல் பரிசோதனைத் தரவுகளும் டிஜிட்டல் முறையில் பராமரிப்புச் செய்யப்படும்.

கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழப்புகள் இல்லாத நிலையை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இந்தத் திட்டத்திற்காக, இந்த மாவட்டத்தினுடைய ஆட்சியர் திரு.விஷ்ணு அவர்களுக்கு, தமிழக அரசினுடைய "நல் ஆளுமை" விருது அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- நெல்லை மாவட்டத்தில் உள்ள 1,200 குளங்கள், தாமிரபரணி நதியின் வழித்தடங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் நெல்லை நீர்வளம் என்ற அமைப்பு 30.07.2021 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் தொடங்கப்பட்டது.

இந்த அமைப்பில், தன்னார்வ இயக்கங்கள் இணைக்கப்பட்டு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், நீர்நிலைகளை மேம்படுத்தும் நோக்கிலும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1,200 குளங்கள் கணக்கெடுக்கப்பட்டு, டிஜிட்டல் மேப்பிங் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டத்தில், பல குளங்கள் தூர்வாரப்பட்டு, புத்துணர்வு ஆக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு, வடகிழக்குப் பருவமழையின்போது, நீர் செல்லாமல் இருந்த குளங்கள் இந்தத் திட்டத்தில் சீரமைக்கப்பட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பியுள்ளது. இதுபோன்று, நெல்லை மாநகரப் பகுதிக்குள் மழைவெள்ளக் காலங்களில் தண்ணீர் புகுவதைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் திருப்பணிக் கரிசல்குளம் உபரிநீர் வெளியேறும் கால்வாய்

என்னைப் பொறுத்தவரையில், பின்தங்கிய தொகுதி என்று எதுவும் இருக்கவே கூடாது. அதனால்தான், நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத பத்து பிரச்சினைகளை எழுதி, மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்து, அதனை நிறைவேற்றித் தரும் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற மகத்தான திட்டத்தை 234 தொகுதிக்கும் நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

இது, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கிடையாது. நம்முடைய தமிழ்நாட்டில்தான் இது உருவாகியிருக்கிறது!

இரண்டு தினங்களுக்கு முன்பு, டெல்லி மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார். அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரியில் சேருகிறபோது, அந்தக் கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம்

எதுவாக இருந்தாலும் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது. திட்டங்கள் மட்டுமல்ல, எந்தத் தனிமனிதருக்கு ஏற்படக்கூடிய குறையாக இருந்தாலும், அதனையும் உடனடியாக தீர்க்கும் அரசாகவும் நம்முடைய அரசு இருக்க வேண்டும் என்று அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன், உத்தரவையே போட்டிருக்கிறேன்.

ரூபாய் வழங்கக்கூடிய திட்டத்தைத் தொடங்கி வைக்கக்கூடிய நிகழ்ச்சி, அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். அதில் கலந்துகொண்டு பேசுகிறபோது சொன்னார், 'இது அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டிய முன்மாதிரித் திட்டம்' என்று பெருமையோடு சொன்னார். இப்படி, தமிழக அரசு கொண்டு வரும் அனைத்துத் திட்டங்களும் இந்தியாவுக்கே முன்மாதிரித் திட்டங்களாக அமைந்துள்ளன!

கடந்த ஏப்ரல் மாதம், டெல்லி சென்ற நான் அங்கிருந்த மாதிரிப் பள்ளிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு சென்று பார்வையிட்டேன். தமிழ்நாட்டில் இதே மாதிரி உருவாக்குவேன், அதனை நீங்கள் தொடங்கி வைக்க வரவேண்டும் என்று முதலமைச்சராக இருக்கக்கூடிய அர்விந்த் கெஜ்ரிவால் அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்தேன். ஆறு மாதத்தில், அவரை இங்கு வரவழைத்து அதனைத் தொடங்கி வைக்கவும் நாங்கள் செய்துவிட்டோம்.

"இரண்டு ஆண்டு ஆகும் என்று நினைத்தேன். ஆறு மாதத்தில் ஆரம்பித்துவிட்டீர்களே!" என்று மாண்புமிகு அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் மனம் திறந்து பாராட்டினார்.

இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் வேகம்!

என்னைப் பொறுத்தவரை, செய்வதைத் திருத்தமாகச் செய்ய வேண்டும், விரைவாகச் செய்ய வேண்டும்!

திட்டமிடுவதற்கு முன்னால் எவ்வளவு அவகாசம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், திட்டமிட்டு அறிவித்த பிறகு, காலதாமதம் ஆகக்கூடாது என்று நினைக்கக் கூடியவன் நான். ஏனென்றால், கலைஞருடைய மகன் நான்.

எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - என்கிறார் திருவள்ளுவர்.

அதைப் பின்பற்றுபவன் நான்! அதனால்தான், இன்றைய தினம் தமிழக அரசு அறிவிக்கும் திட்டங்கள்

அண்மையில் பார்த்திருப்பீர்கள், டானியா என்ற ஒரு பள்ளிச் சிறுமி ஆவடி பகுதியைச் சார்ந்தவர். தொலைக்காட்சிகளில் அவரைப் பற்றிய செய்தி எல்லாம் பரபரப்பாக வந்தது. சமூக ஊடகங்களில் எல்லாம் வந்தது, அதையெல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். திருவள்ளூர் மாவட்டம் ஆவடியை அடுத்த, வீராபுரம் பகுதியைச் சேர்ந்த ஸ்டீபன்ராஜ் - சௌபாக்யா ஆகியோரின் அன்பு மகள்தான் டானியா. அவருக்கு ஒன்பது வயது. நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறார். முகச்சிதைவு நோய் அவருக்கு ஏற்பட்டது. முகத் தோற்றம் அப்படியே மாறி, பாதிக்கப்பட்டது. அவரோடு படிக்கக்கூடிய மாணவிகள் கூட கேலி செய்து அந்த டானியாவைப் புறக்கணிக்கின்ற ஒரு சூழல். அந்த செய்தி எனக்குக் கிடைத்தது. உடனடியாக, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.நாசர் அவர்களோடு நான் தொடர்பு கொண்டேன். அதற்குரிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யுங்கள், உடனே சென்று பாருங்கள் என்று நான் உத்தரவிட்டேன். உடனடியாகத் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரும், அமைச்சர் அவர்களும் சென்று அந்தச் சிறுமி டானியாவைப் பார்த்திருக்கிறார்கள், விசாரித்திருக்கிறார்கள். பெற்றோர் சொல்லியிருக்கிறார்கள், 'பிறந்தபோது நன்றாகத்தான் இருந்தார். மூன்று வயதில் அவர் முகத்தில் ஒரு கரும்புள்ளி வந்தது. அதன் பின்னர்தான், முகம் இப்படி சிதைந்துவிட்டது. இதற்காக நாங்கள் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து பார்த்தோம்' பயனில்லை, என்று அழுதுகொண்டே டானியாவின் பெற்றோர் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் செய்தியை என்னிடம் சொன்ன உடனே, உடனடியாக, அவரை, அருகில் உள்ள தனியார் மருத்துவமனை, சவீதா என்கின்ற அந்த மருத்துவமனையில் சேர்க்கச்சொல்லி, சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யச் சொன்னேன்.

அங்கே இருக்கக்கூடிய புகழ்மிக்க மருத்துவர்கள் 10 பேர் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டார்கள். அறுவை சிகிச்சை 10 மணி நேரம் நடந்தது. இந்தியாவில்

இதுவரைக்கும் இது மாதிரி அறுவை சிகிச்சை நடந்ததாக வரலாறு கிடையாது. அதுதான் முதல் முறை. சவீதா மருத்துவமனையில் நடைபெற்ற அந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. இரண்டு, மூன்று நாட்கள் கழித்து நான் நேரடியாக, அந்த மருத்துவமனைக்குச் சென்று டானியாவைப் பார்த்தேன். அவரும், அவர் குடும்பமும், என்னையும் அரசையும், நன்றிப் பெருக்குடன் வாழ்த்தினார்கள். அந்தக் குழந்தையின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சித்தான் எனக்கு மிகப்பெரிய பாராட்டு, எனக்கு எவ்வளவோ பாராட்டுக் கிடைக்கலாம், இந்தப் பாராட்டுக்கு ஈடு இணை எதுவும் இருக்க முடியாது.

உலகத்தில் இதைவிடப் பெரிய பரிசு இருக்கவே முடியாது. இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதுதான் நமது அரசின் சாதனை.

முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இன்றைய தினம், இந்த விழாவில், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் முப்பதாயிரம் குடும்பங்கள் பயனடைய இருக்கின்றன.

கூட்டுறவுக் கடன்கள் தரப்பட்டுள்ளன. வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது. திருநங்கையர்க்குக் கடனுதவி தரப்பட்டுள்ளது. தொழில் முதலீட்டுக் கடன்கள் தரப்பட்டுள்ளது. நெல்லை மாநகராட்சி சார்பில் பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இப்படிப் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலமாக, ஒவ்வொரு தனிமனிதரின் வீட்டின் கதவையும் தட்டி அவர்களுக்கு நன்மை செய்யும் அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு இருக்கிறது.

புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறும் கல்லூரி மாணவியர், அந்த விழா முடிந்தவுடன், தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்திருப்பீர்கள், ஒரு மாணவி அளித்த பேட்டி, அதை நானும் பார்த்தேன், பார்த்தபோது நான் பெருமைப்பட்டேன். அந்த மாணவி சொல்கிறார், இந்த ஆண்டு மட்டும், 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயன்பெறுகிறார்கள் என்றால், அவ்வளவு குடும்பங்களிலும் கல்வி என்னும் அணையா விளக்கு ஏற்றப்படுகிறது. தமிழ்நாட்டில் இப்போது, அனைத்துக் குடும்பங்களையும், அக்கறையோடு கவனிக்கக்கூடிய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

நாம் அனைவரும் தமிழ்ச் சமுதாயம் என்ற ஒற்றைக் குடும்பத்தின் உறுப்பினர்கள். அதில் நானும் ஒருவன். நீங்களும் ஒருவர். நாம் அனைவரும் இணைந்து நமது மாநிலத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்குவோம். அனைத்து மக்களின் மனங்களிலும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் ஏற்படுத்தும் ஆட்சியாக நாம் நடத்துவோம், அதுதான் உண்மையான திராவிட மாடல் ஆட்சி அதைத் தான் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். எனவே தொடர்ந்து இந்த அரசுக்கு நீங்கள் ஆதரவு தாருங்கள் என்று அன்போடு கூறி விடைபெறுகிறேன்.

“நெய்தல் உப்பு” விற்பனை தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார் (12.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2022 அன்று தலைமைச் செயலகத்தில், உப்பு உற்பத்தி இல்லாத அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்களில் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5,000 நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைக்கும் அடையாளமாக 5 தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். மேலும், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் சார்பில் “நெய்தல் உப்பு” என்ற புதிய வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் உப்பு விற்பனையினைத் தொடங்கிவைத்தார்.

உப்பளத் தொழில் ஒரு பருவகாலத் தொழிலாகும். உப்பளத் தொழிலாளர்களுக்கு ஓராண்டில் 9 மாதங்கள் மட்டுமே பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும். உப்பளங்கள் கடற்கரை மாவட்டங்களில் அமைந்துள்ளதால் உப்பளத் தொழிலாளர்களுக்கு மழைக் காலத்தில் போதிய மாற்றுப்பணிகள் கிடைக்க வாய்ப்பு இல்லாததால் இவர்கள் மழைக்காலங்களில் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

2021-2022ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கையில், மழைக் காலங்களில் உப்பு உற்பத்திப் பணிகள் பாதிக்கப்படும் நேரத்தில் உப்பளத் தொழிலாளர்கள் மாற்றுப்பணி ஏதுமின்றி வருவாய் இல்லாமல் சிரமத்தைச் சந்திக்கிறார்கள். எனவே, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் உதவி செய்யும் பொருட்டுத் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5,000 நிவாரண நிதியாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, உப்பு உற்பத்தி இல்லாத அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்களில் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5,000 நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைக்கும் அடையாளமாக 5 தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இதன்மூலம், உப்பளத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு, அயோடின் கலந்த கல் உப்பு, அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு மலிவு விலையிலும், மதிய உணவுத் திட்டத்திற்கும் விற்பனை செய்து வருகின்றது.

2021-2022ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கையில், பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு, தமிழ்நாடு உப்புக் கழகம் அயோடின் கலந்த கல் உப்பு, அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு ஆகியவற்றை “நெய்தல் உப்பு” என்ற புதிய வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் விற்பனை செய்யும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “நெய்தல் உப்பு” என்ற புதிய வணிகப் பெயரில் அயோடின் கலந்த கல் உப்பு, அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு ஆகியவற்றைப் பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு நியாயமான விலையில் வெளிச்சந்தையில் விற்பனையைத் தொடங்கிவைத்தார்.

ரூ.12.30 கோடியில்
கொளத்தூர் ஏரி மறுசீரமைக்கும் பணி தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார் (13.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.08.2022 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.30.77 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், ரூ.2.72 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.5.63 கோடி செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்து, ரூ.12.30 கோடி மதிப்பீட்டிலான கொளத்தூர் ஏரியினை மறுசீரமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைத் தொடங்கிவைத்தார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜமாலியா பகுதியில் சந்திரயோகி தெரு முதல் குக்ஸ் சாலை வரை 880 மீட்டர் நீளத்திற்கு ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

கொளத்தூர், திரு.வி.க நகர் மண்டலம், எஸ்.ஆர்.பி. கோயில் சாலையில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின்கீழ், ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் 260 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

கொளத்தூர், திரு.வி.க நகர் மண்டலம், பேப்பர் மில்ஸ் சாலை, எவர்வின் பள்ளி எதிரில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின்கீழ், ரூ.23.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் என மொத்தம், ரூ.30.77 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, மழைக்காலத்திற்கு முன்பாகப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், கொளத்தூர் பள்ளிச் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளிச் சாலையில் ரூ.30.90 இலட்சம் மதிப்பீட்டிலும், ரோகிணி சாலையில் ரூ.30.90 இலட்சம் மதிப்பீட்டிலும், எஸ்.ஆர்.பி. கோயில் தெருவில் ரூ.34.80 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரைசாமி மடம் சாலையில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டிலும், ஜவஹர்லால் நேரு 3ஆவது சுற்றுச்சாலையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும் புதியதாகக் கட்டப்படவுள்ள நகர்ப்புற நல வாழ்வு மையங்கள்;

பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.97.52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைக்கும் பணிகள்;

திரு.வி.நகர் மண்டலம், ஜி.கே.எம். சாலையில், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.24.78 இலட்சம் மதிப்பீட்டில் 40 சதுர மீட்டர் பரப்பளவில் புதியதாக அமைக்கப்படவுள்ள நீத்தார் வழிபாட்டுக் கூடம் (காரியக் கூடம்);

என மொத்தம், ரூ.2.72 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

திரு.வி.க.நகர் மண்டலம், சீனிவாசா நகரில் அமைந்துள்ள சென்னை ஆரம்பப்பள்ளி விளையாட்டு

மைதானத்தில் மூலதனநிதியின்கீழ் ரூ.60.32 இலட்சம் செலவில் 1,260 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள டென்னிஸ் மைதானம்;

பெரியார் நகரில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையில், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நோய்க்கான அறுவை சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை நோய் அறுவை சிகிச்சை, கண் அறுவை சிகிச்சை ஆகிய அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில் ரூ.2.75 கோடி செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள நான்கு அறுவை அரங்கங்கள், ரூ.1.28 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பிராணவாயு உற்பத்திக்கலன் மற்றும் ரூ.1 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள RTPCR ஆய்வகம்;

என மொத்தம், ரூ.5.63 கோடி செலவில் முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

நீர்வளத்துறையின் சார்பில், கொளத்தூர் ஏரியின் நீர் சேமிப்பை அதிகரித்திட 510 மீட்டரில் கரைகளைப் பலப்படுத்துதல், 120 மீட்டரில் சுற்றுச்சுவர் அமைத்தல், 170 மீட்டரில் புதியக் கால்வாய் அமைத்தல், பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் 400 மீட்டரில் நடைபாதை அமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர் ஏரியினை ஆழப்படுத்தி, கரைகளை மறுசீரமைத்தல், உபரிநீர் கால்வாயினை மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

நெடுஞ்சாலைத்துறை சார்பில் சென்னையின் தேசிய நெடுஞ்சாலைகளையும், மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளையும் இணைக்கும் உள்வட்டச் சாலையில் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட செல்வி நகர், மகாத்மா காந்தி நகர், மகாவீர் நகர், கண்ணகி நகர் ஆகிய தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு 240 மீட்டர் நீளத்திற்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

முன்னதாக, கொளத்தூர், டான்பாஸ்கோ மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனி அரசு மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர்-மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பெரம்பூர்-பந்தர் கார்டன் சென்னை மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர்-சென்னை மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர்-டான் பாஸ்கோ மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர்-பேப்பர் மில்ஸ் சாலை தி லூர்து பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலை சம்பலால் பஹாரியா ஜெயின் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த 927 மாணவர்கள், 619 மாணவியர்கள், என மொத்தம் 1,546 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.78.30 இலட்சம் மதிப்பிலான இலவச மிதிவண்டிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 225 முதலாம் ஆண்டு மாணவர்கள், 209 இரண்டாம் ஆண்டு மாணவர்கள் என மொத்தம் 434 மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத் தொகையாகத் தலா ரூ.10,000த்தினை ரொக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும், 225 முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஸ்டைன்லெஸ் ஸ்டீல் வாட்டர் பாட்டில், பேனா, நோட்டுப் புத்தகம் ஆகியவற்றுடன் கூடிய புத்தகப் பைகளையும் வழங்கினார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கி, ஆசிரியர்களுக்குச் சிறப்புச் செய்தார். ❖

வீரமங்கை வேலுநாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார் (13.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், கலை-பண்பாட்டுத்துறை, இயல்-இசை நாடக மன்றம், செய்தி மக்கள் தொடர்புத்துறை ஆகிய துறைகளால் ஒருங்கிணைந்து நடத்தப்பட்ட வீரமங்கை வேலுநாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடகத் தொடக்க விழாவில் கலந்துகொண்டு, வேலுநாச்சியார் நாட்டிய நாடகத்தைத் தமிழகம் முழுவதும் நடத்தும் வகையிலான இலச்சினையினை வெளியிட்டு, நாடகத்தைத் தொடங்கிவைத்துப் பார்வையிட்டார்.

வீரம் என்ற மூன்றெழுத்தை தன் மூச்சாகக்கொண்ட வீரமங்கை வேலுநாச்சியார், ஆங்கிலேயப் படையெடுப்பால் கணவரை இழந்ததோடு, நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் இருந்தது. மருது சகோதரர்கள் ஆதரவுடனும், ஹைதர் அலி, கோபால் நாயக்கர் ஆகியோரின் உதவியுடன் சிவகங்கை மக்களை ஒன்று திரட்டி, வலுவான ஓர் எதிர்ப்புப் படையினை உருவாக்கி, ஏழு ஆண்டுகள் இடைவிடாமல் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்டு மாபெரும் வெற்றி பெற்றுச் சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்தார். இதனைத் தொடர்ந்து 1789ஆம் ஆண்டு வரை சிவகங்கையை ஆட்சி செய்தார். வட இந்திய ஜான்சிராணிக்கு 75 ஆண்டுகளுக்கு முன்பே விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய முதல் வீரப் பெண்மணி வேலுநாச்சியார் ஆவார். இந்திய விடுதலை வரலாற்றில் வீரம் நிறைந்த வீரமங்கை வேலுநாச்சியாருக்கு ஈடாக எவரும் இல்லை. சிவகங்கைச் சீமையை ஆண்ட வீரமங்கை வேலுநாச்சியார் 25.12.1896ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், வேலுநாச்சியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் கலைப் பண்பாட்டுத்துறை மூலம் ஓ.வி.எம். தியேட்டர்ஸ் நிறுவனம் இணைந்து 62 நாடக கலைஞர்கள் பங்கேற்கும் வீரமங்கை வேலுநாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

வீரமங்கை வேலுநாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடக நிகழ்ச்சி, ஈரோடு மாவட்டத்தில் 15.08.2022 அன்று சி.என்.சி.கல்லூரியிலும், மதுரை மாவட்டத்தில் 21.08.2022 அன்று இராஜா முத்தையா மன்றம் அரங்கிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 22.08.2022 அன்று கலையரங்கத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 28.08.2022 அன்று இந்துஸ்தான் கல்லூரி அரங்கத்திலும் நடைபெற்றது.

மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மின்னகத்தில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆய்வு (16.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.08.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய துணை மின் நிலையங்களையும், மின்மாற்றிகளின் செயல்பாட்டினையும் தொடங்கிவைத்த நிகழ்ச்சியின்போது, மின்நுகர்வோர்க் குறைதீர்க்கும் மையமான மின்னகத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டறிந்தார். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டு, தீர்வு காணப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக மின்னகத்திற்கு வந்து ஆய்வு செய்வதாகத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, அண்ணா சாலை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மின்நுகர்வோர்க் குறைதீர்க்கும் மையமான "மின்னகம்" சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின்னகத்தில் புகார் அளித்தவர்களில் 10 இலட்சமாவது நுகர்வோரான திரு.சுவாமிநாதன் அவர்களுடன் மின்னகத்தில் இருந்து அலைபேசி மூலம் தொடர்புகொண்டு மின்னகத்தினால் வழங்கப்பட்ட குறைதீர்சேவை பற்றிக் கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களின் அழைப்புகளை ஏற்று, குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்ய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

"மின்னகம்" மின்நுகர்வோர் சேவை மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.06.2021 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. தொடங்கிய நாள் முதல் இன்று வரை தமிழ்நாடெங்கும் உள்ள மின்நுகர்வோர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று மின்னகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மின்னகத்தின் தலைமையகமான சென்னையில் முறைப்பணி ஒன்றிற்கு 65 நபர் வீதம் மூன்று முறைப்பணிகளாகவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்கீழ் இயங்கி வரும் 44 மின் பகிர்மான வட்டங்களிலும் நாள் ஒன்றிற்கு நான்கு பேர் வீதம் 176 நபர்களைக் கொண்டும் இயங்கி வருகிறது. தமிழகம் முழுவதுக்குமான மின்னகத்தின் அலைபேசி எண்ணான 94987 94987இல் பொதுமக்கள் 24x7 மணி நேரமும் புகார்களை அளிக்கலாம்.

இந்த மின் நுகர்வோர்ச் சேவை மையத்தில் பொதுமக்கள் யாவரும் மின்சாரம் சம்பந்தமான, துறை சம்பந்தப்பட்ட பெயர் மாற்றம், மின்விநியோகத்தில் தடை, விகிதப்பட்டியல் மாற்றம், மின் கட்டணத்தில் உள்ள சந்தேகங்கள் உள்ளிட்ட அனைத்துவித புகார்களையும் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மின்னகத்தில் ஆய்வு மேற்கொண்டபோது, "இம்மின்னகத்தில் நேற்றைய தேதிவரை 10,50,282 புகார்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. அவற்றுள் 10,41,872 புகார்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. மொத்தத்தில் 99% புகார்கள்மீது தீர்வு காணப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டு மக்களின் மின்துறை சார்ந்த குறைகளைத் தீர்ப்பதில் முழுமூச்சுடன் செயல்பட்டு, அன்றைய தினமே தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். மின்னகத்திற்கு வரும் பொதுமக்களின் அழைப்புகளுக்குக் குறுஞ்செய்தி மூலம் ஒப்புகை அளிப்பதோடு, குறைகள் தீர்வு காணப்பட்டவுடன் அதுகுறித்தும் பொதுமக்களிடம் அலைபேசி வாயிலாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் தொகுதி வாரியாக செயற்பொறியாளர் ஒருவரும், மாண்புமிகு அமைச்சர்களின் தொகுதிகளில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மேற்பார்வைப் பொறியாளர்களும் நியமிக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் / சட்டமன்ற உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு பொதுமக்களின் தேவை மற்றும் குறைகளைக் கேட்டறிந்து உடனடியாகச் சரி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று மின்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தமிழ் மொழிக்கும், உலக மொழிகளுக்கும் இடையிலான உறவை ஆணித்தரமாக நிறுவ வேண்டியது காலத்தின் தேவை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
22.08.2022 அன்று சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கும் விழாவில் விருதுகளை வழங்கி, ஆற்றிய உரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.08.2022 அன்று சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கும் விழாவில், 2020ஆம் ஆண்டிற்கான விருதினை முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், 2021ஆம் ஆண்டிற்கான விருதினை முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்று முத்தமிழறிஞர் அவர்கள் ஒன்றிய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில், 2006ஆம் ஆண்டு இந்திய மொழிகளுக்கான ஒன்றிய நிறுவனத்தின் ஓர் அங்கமாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. பின்னர் 2008ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனத் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகச் சென்னையில் அமைக்கப்பட்டது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சிறப்பினைக் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 24.07.2008 அன்று தம் சொந்த நிதி ஒரு கோடி ரூபாயை வைப்புத் தொகையாக அளித்து 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளையை நிறுவினார்.

இந்த அறக்கட்டளையின் மூலமாக ஆண்டுதோறும் 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது, இந்தியாவிலேயே மிக உயரிய வகையில் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உருவச்சிலையும் அடங்கியதாகும்.

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள ஆய்வாளருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டபின் 2009ஆம் ஆண்டிற்கான முதல் விருது பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா அவர்களுக்கு 2010ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், 2010ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்குரிய கலைஞர்

மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 22.01.2022 அன்று வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, தற்பொழுது 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளுக்கு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவராக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பெற்ற விருதுத் தேர்வுக் குழுவினரால் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன், மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் க. நெடுஞ்செழியன், பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் முனைவர் ழான் லூய்க் செவ்வியார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

2020 – முனைவர் ம. இராசேந்திரன், (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்)

முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் 03.03.1951இல் திருவாரூர் மாவட்டம், எட அன்னவாசல் என்னும் சிற்றூரில் பிறந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் இலக்கணக் கடல் தீ.வே.கோபாலையர் அவர்களின் மாணவராகப் பயின்று புலவர் பட்டம் பெற்றவர். முதுகலைத் தமிழ், ஆய்வியல் நிறைஞர் ஆகிய பட்டப் படிப்புகளைச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றவர். காலின் மெக்கன்சியின் (1754-1821) தமிழ்ச் சுவடிகளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். 1974 முதல் 1986 வரையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் ஆய்வு நிறுவனத்தில் தமிழ்ப் புலவராகவும், 1986 முதல் 1989 வரையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிறப்புத் தகைமையராகவும் விரிவுரையாளராகவும் கல்விப் பணியாற்றியவர். 2008 முதல் 2011 வரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

2021 – முனைவர் க. நெடுஞ்செழியன், (மேனாள் தமிழ்ப் பேராசிரியர்)

முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்கள் 15.06.1944இல் பிறந்தவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றியவர். 2008ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையில் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பெரியார் உயராய்வு மையத்தின் தலைவராகவும் பணியாற்றியவர். இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழகமும், தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம், தமிழ் எழுத்தியல் வரலாறு போன்ற நூல்களை எழுதிய இவர் தமிழரின் அடையாளங்கள் எனும் நூலிற்காகத் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் மானிடவியல் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றவர்.

2022 – முனைவர் ழான் லூய்க் செவ்வியார், [Senior Researcher], CNRS - Universite - D'iderot Paris, Laboratoire d' Histoite des Theories, Linguistiques - (Uumr 7597 HTL),

பிரெஞ்சு நாட்டு அறிஞரான முனைவர் ழான் லூய்க் செவ்வியார் 23.03.1956இல் பிறந்தவர். கணிதமும் மொழியியலும் பயின்ற இவர் தமிழ் இலக்கணப் பாரம்பரியத்தில் தனிக் கவனம் செலுத்தித் தொல்காப்பியம் சேனாவரையர் உரையைப் பண்டிதர்

தி.வே. கோபாலையரின் துணையுடன் எழுத்தெண்ணிக் கற்றுப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தவர். தமிழ் மொழிப்பெயர்ப்பு வரலாற்றில் உரையுடன் மொழிப்பெயர்க்கப்பட்ட முதல் மொழிபெயர்ப்பாக இவரது இந்த மொழிபெயர்ப்பு விளங்குவது சிறப்புக்குரியதாகும். 28 ஆண்டுகளாகத் தேசிய அறிவியல் ஆய்வு மையத்தில் (CNRS) ஆய்வாளராகப் பணியாற்றி வரும் இவர், தமிழ் யாப்பிலக்கணத்திலும், திருக்குறளிலும் மிகுந்த ஈடுபாடும் புலமையும் கொண்டவர். தேவாரப் பாடல்களை முழுவதுமாகக் கற்றுத் துறைபோகியவர்.

அதன்படி, 2020ஆம் ஆண்டிற்கான விருதினை முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், 2021ஆம் ஆண்டிற்கான விருதினை முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருதுகளையும், விருதுடன் தலா ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உருவச்சிலையையும் வழங்கிச் சிறப்பித்தார்.

2022ஆம் ஆண்டிற்கான விருது பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் முனைவர் ழான் லூய்க் செவ்வியார் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது அவர் வெளிநாட்டிலிருந்து வர இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால், அவருக்கான விருது பின்னர் வழங்கப்படும்.

மேலும், இவ்விழாவில் உயர்தனிச் செம்மொழி முன்மொழிந்த மூதறிஞர்கள், சங்ககால மக்கட் பெயர்க் களஞ்சியம், தமிழ்நாட்டில் சமணம் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை), ஒப்பில்லாத் தொல்காப்பியம், செம்மொழித் தமிழ் இலக்கிய இலக்கண மேற்கோள் அடைவு, செம்மொழித் தமிழ் இலக்கண கலைச்சொற் களஞ்சியம்: எழுத்ததிகாரம், செம்மொழித் தமிழ் இலக்கணக் கலைச்சொற் களஞ்சியம்: சொல்லதிகாரம், செம்மொழித் தமிழ் இலக்கணக் கலைச்சொற் களஞ்சியம் பொருளதிகாரம், தமிழர் பாரம்பரிய நெல் வகைச் சொல்லகராதி, உ.வே.சா. இலக்கிய அரும்பத அகராதியும் சங்கநூற் சொல்லடைவும், உ.வே.சா. நாட்குறிப்பு, TIRUKKURAL AS THE BOOK OF THE WORLD, PARIPATAL TEXT- TRANSLITERATION, TRANSLATIONS IN ENGLISH VERSE AND PROSE, PATINEN KILKKANAKKU NULKAL, DRAVIDIAN COMPARATIVE GRAMMAR- III, NALATIYAR IN TELUGU ஆகிய 16 நூல்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்று ஆகஸ்ட் 22. இது வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இந்த நாள், சிங்காரச் சென்னையினுடைய 383ஆம் ஆண்டினுடைய பிறந்தநாள். 22.08.1639 என்பது சென்னை உருவாக்கப்பட்ட நாள்!

சென்னையின் வணக்கத்திற்குரிய மேயராக நான் இருந்தபொழுதுதான் மதராஸ் என்ற பெயரைச் சென்னையாக, அப்போதைய முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றி, இன்று ஊரெங்கும் "நம்ம சென்னை, நம்ம பெருமை" என்று உணர்வுப் பெருக்குடன் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள் வாழும் இந்தத் தாய்த் திருநாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டி மகிழ்ந்த அரசுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு அண்ணா தலைமையிலே என்பதும் வரலாற்றில் பதிவாகியிருக்கிறது.

அதேபோல் மெட்ராஸ் என்று அழைக்கப்பட்ட இந்தத் தலைநகருக்குச் சென்னை என்று அதிகாரப்பூர்வமாகப் பெயரைச் சூட்டியதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுதான்.

இதேபோல், மூவாயிரம் ஆண்டுப் பழமை கொண்ட தமிழுக்குச் செம்மொழி என்ற தகுதியைப் பெற்றுத் தந்ததும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுதான்.

உலகின் மிகத் தொன்மையான மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என உலகின் பல மொழியியலாளர்களும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் போற்றுகின்றனர்.

பிற மொழிகளின் உதவியின்றித் தனித்துச் செயல்படும் ஆற்றல் கொண்டது நம்முடைய செம்மொழித் தமிழ். பழையன கழிந்து புதியதை உள்வாங்கும் திறன் கொண்ட தமிழ் மொழி, காலமாற்றத்திற்கேற்ற சொற்களஞ்சியத்தைக் கொண்டுள்ள மொழி. இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நமது தமிழ் மொழிக்குச் செம்மொழித் தகுதி வழங்க வேண்டும் என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கூறியதையும் அதற்காக அவர் எடுத்த முயற்சிகளையும் நாடு நன்றாக அறியும்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதியை ஒன்றிய அரசு 2004இல் வழங்கிய பின்பும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பணிகள் தமிழக வரலாற்றில் இன்றும் நிலைத்து இருக்கக்கூடியவை.

- மைசூரில் இயங்கி வந்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைச் சென்னைக்கு இடமாற்றம் செய்து தந்தவரும் கலைஞர்தான்.
- அதன் உட்கட்டமைப்பையும் நிருவாகத்தையும் பொலிவாக உருவாக்கித் தந்தார்.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழா 30.06.2008 அன்று நடைபெற்றது.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த

காலத்தில்தான், தமிழ்நாடு அரசு 2007, நவம்பர் 5ஆம் நாள், சென்னைப் பெரும்பாக்கத்தில் 16.586 ஏக்கர் (6.71.5 ஹெக்டேர்) நிலம் வழங்கியது. ரூ.1.45 கோடி செலவில், அந்நிலத்தினைச் சமன்படுத்தியும் வழங்கியது அன்றைய கழக அரசு. இந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் என் முன்னிலையில் 12.01.2022 அன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதுதான் இன்று நாம் காணக்கூடிய இந்த மாபெரும் கட்டடம்.

2008ஆம் ஆண்டு நடந்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழாவில் பேசிய நம்முடைய கலைஞர் அவர்கள் மகத்தான அறிவிப்பு ஒன்றைச் செய்தார்.

"150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு, அந்தக் கனவு நினைவாக வேண்டும் என்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு. செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் காலூன்றுகின்ற இந்த இனிய நாளில் எனக்கென்று உள்ள சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை நிறுவனத்தின் பொறுப்பில் கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை ஒன்று நிறுவிட வழங்குகிறேன்" என்று பெருமிதத்தோடு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என வாழ்ந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அன்னைத் தமிழ் மீதான அவரது அன்பின் வெளிப்பாடுதான் அந்த அறிவிப்பு.

'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு உயரும்' என்ற புரட்சிக்கவிஞரின் வழித்தடத்தில் இத்தகைய அறிவிப்பினைக் கலைஞர் அவர்கள் செய்தார்கள். அத்தகைய விருதுகள் மொழியியல் அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

- "கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் அறக்கட்டளை" வாயிலாக ஆண்டுதோறும் தகுதி வாய்ந்த தமிழறிஞர்களுக்குக் 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விருது இந்தியாவிலேயே மிக உயரிய அளவில் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டிதழும், கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உருவம் பொறித்த நினைவுப் பரிசும் அடங்கியதாகும்.

முதல் விருது 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய குடியரசுத் தலைவர் அவர்களால் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா' அவர்களுக்கு வழங்கப்பட்டது. இடையில் 2011 முதல் 2019ஆம் ஆண்டு வரை இது அறிவிக்கப்படாமல் இருந்த அந்த விருதுகளுக்குக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், விருதாளர்கள் முறையோடு தேர்ந்தெடுக்கப்பட்டு 22.01.2022 அன்று நடைபெற்ற விழாவில் பரிசுகள் அளிக்கப்பட்டன.

- இன்றைய தினம் 2020ஆம் ஆண்டுக்கான விருது முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் அவர்களுக்கும்,
- 2021ஆம் ஆண்டுக்கான விருது பேராசிரியர் முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களுக்கும்,
- 2022ஆம் ஆண்டுக்கான விருது பிரெஞ்சு நாட்டின் அறிஞர் ழான் லூயிக் செவ்வியார் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

விருது பெற்ற மூவரையும் தமிழ்நாடு அரசின் சார்பில் நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

- தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த சிறப்புக்குரியவர் ம.இராசேந்திரன் அவர்கள்.

பச்சையப்பன் கல்லூரியின் படிக்கட்டும் பைந்தமிழ் பாடும் என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள். அத்தகைய பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்தவர் ராசேந்திரன் அவர்கள். வரலாற்றின் கருவூலம் என்று சொல்லப்படுகின்ற மெக்கன்சியின் சுவடிகளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழ்நாடு அரசின்

மொழிபெயர்ப்புத்துறை இயக்குநராகவும், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராகவும் பணியாற்றியவர். குறள் பீடம், அகர முதலித் திட்டம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் இயக்குநராக இருந்தவர். இத்தகைய சிறப்புக்குரியவரைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இயக்குநராக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2008ஆம் ஆண்டு நியமித்தார்கள்.

செம்மொழிப் பெருமிதத்துக்காகவே ஐந்து நாள் மாநாடு கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்தது. தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் தாமே தம் கடின உழைப்பையும், உறுதியையும், கரைகாணாத் தமிழ்க்காதலையும் காட்டிய மாநாடாக அது திகழ்ந்தது. இந்தியக் குடியரசுத் தலைவரே நேரில் வந்து நெஞ்சுருகப் பாராட்டி வாழ்த்தினார். இத்தகைய சிறப்புப் பெற்ற இந்தச் செம்மொழி மாநாட்டிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்பாக பணியாற்றியவர்தான் இப்போது விருது பெறுகிற நம்முடைய ம.இராசேந்திரன் அவர்கள்.

இன்றைக்குப் பொதுநூலகச் சட்டத்திருத்த உயர்நிலைக்குழுத் தலைவராக இருக்கிறார். 14 நூல்களை எழுதி இருக்கிறார். 12 நூல்களைப் பதிப்பித்தும் உள்ளார். கணையாழி இலக்கிய இதழின் வெளியீட்டாளராகவும் பணியாற்றி வருகிறார். தமிழ் வேந்தராகவே நித்தமும் செயல்படும் ம.இராசேந்திரனுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரிலான இவ்விருது வழங்கப்படுவது மிக, மிகப் பொருத்தம், பொருத்தம், பொருத்தம்.

2021ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெறும் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்களின் அறிவுத் திறத்தை நான் சொல்லத் தொடங்கினால் பல மணி நேரம் ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இனமான பேராசிரியர் அவர்களும் இன்று இருந்திருந்தால் முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களுக்கு விருது வழங்கும் காட்சியைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

தமிழுக்கும், தமிழினத்துக்கும், திராவிட இயக்கத்துக்கும் தொண்டாற்றுவதற்காகத் தனது வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டவர்தான் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள். இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழரும், தமிழரின் அடையாளங்கள், சங்க காலத் தமிழர் சமயம், தமிழர் இயங்கியல், உலகத் தோற்றமும் தமிழர் கோட்பாடும், ஆசீவகமும் அய்யனார் வரலாறும் ஆகிய பல்வேறு நூல்களைப் படைத்தவர்.

தந்தைப் பெரியார் குறித்தும், திராவிட இயக்கம் பற்றியும் தொடர்ந்து எழுதி வரக்கூடியவர் பேராசிரியர் அவர்கள். எழுதுபவர் மட்டுமல்ல, இன உரிமைப் போராளி அவர். அவருக்கு இந்த விருது தரப்பட்டது பெருமைக்குரியது.

2022ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை, பிரான்ஸ் நாட்டு அறிஞரான முனைவர் ழான் லூயிக் செவ்வியார் பெறுகிறார். இவர், தமிழர் அல்லாதவர்கள் பண்டைத் தமிழ் இலக்கியத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள உதவும் படைப்புகளை வெளியிட்டு வருவதோடு, ஆய்வுப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். பழந்தமிழ் இலக்கண ஆய்வுகளில் மிக்க ஆர்வம் கொண்டவராக விளங்குகிறார். பல உலக ஆய்வு நிறுவனங்களோடு இணைந்து இத்தகைய பணிகளை அவர் செய்து வருவது சிறப்புக்குரிய ஒன்று.

இந்த வகையில், தகுதியும் தமிழ்ப் புலமையும் வாய்ந்த மூவர் இந்த விருதினைப் பெறுகிறார்கள்.

முத்தமிழறிஞரின் முயற்சியால் சென்னையில் செயற்பட்டுவரும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. ஒன்றிய அரசினுடைய வழிகாட்டுதலோடு, தமிழ்நாடு அரசின் நெறிப்படுத்தலோடு, சிறந்ததொரு மொழிப் பணியினைச் செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

தொல்பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் தமிழ் மொழி ஆய்விலும், அதன் மேம்பாட்டிலும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

செம்மொழித் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும், ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்த நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதற்குத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. ஏனென்றால், இது தமிழ் மொழிக்கான அமைப்பு. ஏனென்றால் இன்று நடப்பது தமிழின் ஆட்சி, தமிழின ஆட்சி. கடந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் நான் சில அறிவிப்புகளைச் செய்தேன்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைந்துள்ள சாலையைச் 'செம்மொழிச் சாலை' எனப் பெயர் மாற்றம் செய்து நமது அரசு செயல்படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலமாக அமைக்கப்படும் என்று அப்போது நான் சொன்னேன். அதற்குரிய பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக,

1. ரீயூனியன் - டி லா ரீயூனியன் பல்கலைக்கழகம் (ரீயூனியன் தீவு பல்கலைக்கழகம்)
2. இந்தோனேசியா - சுமத்ரா உத்தாரா பல்கலைக்கழகம்
3. கம்போடியா - கெமர் மொழிகள் ஆய்வு மையம் (CKS)

4. வியட்நாம் - மொழிகள் மற்றும் பன்னாட்டு ஆய்வியல் பல்கலைக்கழகம் (ULIS)

5. தாய்லாந்து - சுலாலோங்கோர்ன் பல்கலைக்கழகம்

ஆகிய தெற்காசிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் விரைவில் ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மொழியின் தொன்மை, வன்மை, திண்மை, பொருண்மை, சான்றாண்மை ஆகியவற்றை நிறுவி இருந்தாலும், தமிழ்மொழிக்கும். உலகமொழிகளுக்கும் இடையிலான உறவை, தொடர்பை ஆணித்தரமாக நிறுவ வேண்டியது காலத்தின் தேவை. அதற்கான அடித்தளத்தைத் தனிநாயகம் அடிகள், பாவாணர் போன்ற மொழிப் பேரறிஞர்கள் இட்டுச் சென்றிருந்தாலும், அதை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்று தமிழ்மொழிக்கும் உலக மொழிகளுக்கும் இடையிலான ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உருவெடுத்துள்ளது. இத்தேவையைத் தமிழ் இருக்கைகள் மூலமாக மேற்கொள்ள வழிவகை ஏற்படும்.

முத்தமிழறிஞர் கலைஞருடைய கனவை நிறைவேற்றுவதற்காகத்தான் நான் முதலமைச்சர் பொறுப்பில் நாளும் உழைத்து வருகிறேன். அதைவிடப் பெரிய பெருமையோ, கடமையோ எனக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. தமிழறிஞர்களுக்கு விருதுகளும், எளிதில் கருதிப் பார்க்க முடியாத கனவு இல்லம் என்ற திட்டத்தையும் நிறைவேற்றி வருகிறோம்.

எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்ற முழக்கத்திற்கேற்பக் காலத்துக்கேற்ற கருத்துக்களைக் கண்டறிந்து இன்று 16 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்காக, செம்மொழி நிறுவனத்தை நான் பாராட்டுகிறேன்.

அண்மையில் கூட, இந்தியப் பிரதமரை நான் வரவேற்றபோது செம்மொழி நிறுவனம் வெளியிட்ட தொல்காப்பியம், ஆங்கில மொழிபெயர்ப்பை அன்பளிப்பாகத் தந்தேன்.

முத்தமிழறிஞரின் முயற்சியால் உருவான செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை மேலும் வளப்படுத்தவும் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும், தமிழ் நிறுவனங்களின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி ஆக்கப்பூர்வமான பணிகளை மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

தன் அனுபவங்களால் நிறுவனத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார் நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள்.

இயக்குநர் பொறுப்பையேற்ற காலம் முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டு செயலாற்றி வருகிறார் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள்.

தமிழ்மொழிக்கும், வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களைச் செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடையத் தமிழ்நாடு அரசு எப்போதும் துணைநிற்கும் என்று சொல்லி உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லி விடைபெறுகிறேன்.

ரூ.2,250 கோடி முதலீட்டில் 37,450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 5 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, கொள்கை 2022 ஐ வெளியிட்டு, ஆற்றிய உரை (23.08.2022).

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.08.2022 அன்று சென்னையில் தொழில்துறை சார்பில் நடைபெற்ற காலணிகள் மற்றும் தோல் துறை மாநாட்டில், 5 திட்டங்களின் மூலம் ரூ.2,250 கோடி முதலீட்டில், 37,450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான 2030-2031ஆம் நிதியாண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சியடைய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு, இதுவரை 192 ஒப்பந்தங்கள் மூலம் மொத்தம் ரூ.2.20 இலட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, சுமார் 3,02,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு துறைவாரியான முதலீட்டு மாநாடுகளை மேற்கொண்டு, அத்துறைகளின் வாயிலாக முதலீடுகளை ஈர்த்து வருகிறது. அந்த வகையில், சென்னையில் காலணிகள் மற்றும் தோல் துறை மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

ரூ.2,250 கோடி முதலீடு மற்றும் 37,450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 5 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

அதன் விவரங்கள் பின்வருமாறு

கோத்தாரி, ஃபீனிக்ஸ் அக்கார்ட் லிமிடெட் மூலம் காலணி உற்பத்தி, கோத்தாரி, ஃபீனிக்ஸ் அக்கார்ட் லிமிடெட் மூலம் ஆயத்த நிலை மாதிரி சூழலமைப்பு, கோத்தாரி - SEMS குழுமம் மூலம் தோல் அல்லாத காலணி உற்பத்தி, வேகன் குழுமம் மூலம் தோல் அணிகலன் மற்றும் பரிசு அணிகலன்களின் உபகரணங்கள் உற்பத்தி, வாக்கரூ இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் மூலம் தோல் அல்லாத காலணி உற்பத்தி உள்ளிட்ட இத்திட்டங்கள், பெரம்பலூர் மற்றும் இராணிப்பேட்டை (பனப்பாக்கம்) மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, 2022

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஏப்ரல் மாதம், தொழில் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், விரைவில் காலணித்துறை மற்றும் தோல் பொருட்கள் கொள்கை வெளியிடப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலணித்துறை மற்றும் தோல் பொருட்கள் துறையில், தமிழ்நாட்டின் பங்கினை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022ஐ வெளியிட்டார்.

துறைவாரியாக, ஆய்வுகள் மேற்கொண்டு அத்துறை வளர்ச்சியைச் சீரான முறையில் நெறிப்படுத்தும் வகையில், துறை சார்ந்த கொள்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலும், தோல் அல்லாத காலணிப் பொருட்கள் துறையில் முதலீடுகளை ஈர்த்திடவும், வேலைவாய்ப்புகளைப் பெருமளவில் உருவாக்கிடவும், ஏற்றுமதியைப் பன்மடங்கு பெருக்கிடும் வகையிலும் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

காணொலிக் காட்சி வாயிலாகச் சர்வதேசக் காலணி உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்

இம்மாநாட்டில், சர்வதேசக் காலணி உற்பத்தியாளர்கள், காலணி உற்பத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் காணொலிக் காட்சி மூலமாக, தமிழ்நாட்டில் உள்ள சந்தை நிலவரங்களையும் அதன்மூலம் உருவாகும் முதலீடு வாய்ப்புகளையும் பற்றி உரையாடினார்கள். விவரங்கள் பின்வருமாறு:-

❖ திரு.ராகுல் வீரா, Sketchers நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய முதன்மைச் செயல் அலுவலர்

❖ MS.ஜேன் வில்சன், இங்கிலாந்து காலணி சங்கத்தின் முதன்மை அலுவலர்

❖ திரு.ரோன் சாங் மற்றும் 13 MS. ஜென்னி சாங் எவர்வான் குழுமத்தின் தலைவர்கள்

❖ திரு.பாப் லாய்டு, வால்மார்ட் குழுமத்தின் இயக்குநர்

❖ MS.ஜேன் சௌ, ஆல்டோ நிறுவனத்தின் இயக்குநர்

❖ திரு.கெண்ட், SEMS குழுமத்தின் பொது மேலாளர்

இம்மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்ற நிறுவனங்கள்

இந்தியச் சில்லறை விற்பனையாளர்கள் சங்கம் (Retailers Association of India - RAI) வாக்கரூ, விகேசி குழுமம், பாரகான், C&J க்ளார்க்ஸ் லிமிடெட், ஸ்கெச்சர்ஸ் இந்தியா, ப்யூமா இந்தியா, டைச்மேன், காதிம்ஸ், அஜியோ, ரிலையன்ஸ் ஃபுட்பிரிண்ட்ஸ், மெட்ரோ, எவர்வான், ஃபெங்டே, ஸ்ரீலெதர்ஸ், இந்தியன் டெர்ரைன், ஹாஸ்புரோ க்ளோத்திங், கோத்தாரி குழுமம் ஆகிய நிறுவனங்களில் இருந்து உயர் அதிகாரிகள் நேரடியாகப் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில் காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்ற நிறுவனங்கள்

இங்கிலாந்து காலணி சங்கம், நைக் இந்தியா, கொலம்பியா ஸ்போர்ட்ஸ்வேர், நியூ பேலன்ஸ், காலரேஸ், கிக்கர்ஸ், பே ஹை, தைவான் ஆனிட்சுகா டைகர், SEMS குழுமம் ஆகிய நிறுவனங்களில் இருந்து உயர் அதிகாரிகள் காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

"உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சிறப்பாக நடைபெறக்கூடிய இந்த முதலீட்டாளர் மாநாட்டிற்குத் தலைமையேற்று, உரையாற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்று, ஓராண்டுக் காலம் முடிவுற்ற நிலையில், இந்தத் துறையால் நடத்தப்படக்கூடிய ஏழாவது முதலீட்டாளர் மாநாடு இது என்பது எனக்கு மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது.

சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, துபாய் என்று பல இடங்களில் இந்த மாநாடு நடைபெற்றபோதிலும் இத்தனை மாநாடுகள், இவ்வளவு குறுகிய காலத்தில் வேறெந்த மாநிலத்திலும் நடைபெற்றிருக்க வாய்ப்பு இல்லை என்றே நான்

கருதுகிறேன். இத்துறையைச் சார்ந்த அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் அயராத உழைப்பிற்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏராளமான முதலீடுகள் ஈர்க்கப்படுவதும், புதிய, புதிய தொழில்கள் தொடங்கப்படுவதும், தமிழ்நாட்டை ஏராளமான நிறுவனங்கள் நோக்கி வருவதும், வளர்வதும் தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெறுகிறது என்பதற்கு இது அடையாளமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. தொழில் நிறுவனங்கள் தொடங்குவதை எளிதாக்கும் மாநிலங்களின் பட்டியலில் மூன்றாவது இடத்திற்குத் தமிழ்நாடு முன்னேறி வந்திருக்கிறது.

குறிப்பாகத் தொழில் துறையானது மிகச் சிறப்பானவர்களால் நிருவகிக்கப்படுவது இதற்கு முக்கியக் காரணம் என்பதை வெளிப்படையாக நான் இங்கே சுட்டிக்காட்டிப் பாராட்ட விரும்புகிறேன்.

2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கை அடைவதற்கு, பெருமளவில் முதலீடுகளை மேற்கொள்ளும் உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை (Capital intensive high-tech industries) ஈர்த்திடுவது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலை வாய்ப்புகளை அளித்திடும் துறைகள் சார்ந்த தொழில் முதலீடுகளையும் (Employment intensive) ஈர்க்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன்னால், ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி இருந்தார். 'வளர்ச்சித் திட்டங்கள் என்பவை, வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய வளர்ச்சித் திட்டங்களாக அமைய வேண்டும்' என்று சொல்லியிருந்தார். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும், எந்தத் திட்டமிடுதலாக இருந்தாலும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகத்தான் அது அமையும்; அமைய வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

இதை மனதில் வைத்துத்தான் தமிழக அரசினுடைய அனைத்துத் திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன.

பெரும் முதலீடுகள் மேற்கொள்ளக்கூடிய துறைகளான,

❖ செமிகண்டக்டர் உற்பத்தி,
❖ மின் வாகனங்கள் உற்பத்தி,
❖ சோலார் செல்கள்,
❖ பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி,
❖ தகவல் தரவு மையங்கள்,
❖ பெட்ரோலியப் பொருட்கள்,
❖ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி,
❖ ஜவுளி மற்றும் ஆடைகள்,
❖ காலணி மற்றும் தோல் பொருட்கள்,
❖ நகைகள் மற்றும் ஆபரணங்கள்,
❖ உணவு பதப்படுத்துதல்

போன்ற அனைத்துத் துறைகளிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

இவ்வாறான துறைகளில் முதலீடுகளை ஈர்த்திடுவதன் மூலம், அதிக அளவிலான

வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இதன்மூலம், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை வலிமையுறச் செய்வதோடு, மாநிலத்தின் உற்பத்திச் சூழலையும் மேம்படுத்த முடியும்.

அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிற்சாலைகள், பின்தங்கிய மாவட்டங்களில் அமைக்கப்படுவதன் மூலம், அப்பகுதி மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிப்பதுடன், அந்தப் பகுதியின் பொருளாதாரமும் வளர்ச்சி அடைகின்றது. அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் வளர்ச்சியின் இலக்குகளை அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்தி வருகிறோம்.

எந்தத் துறையாக இருந்தாலும், அதனை முன்னோக்கிக் கொண்டு செலுத்த ஒரு கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

❖ தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை,

❖ தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை,

❖ தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை,

❖ தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை என்று வரிசையாகப் பல கொள்கை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறோம். அந்த வரிசையில், காலணி மற்றும் தோல் துறையின் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022ஐ வெளியிடுவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

❖ பசுமை ஹைட்ரஜன் கொள்கை,

❖ எத்தனால் கொள்கை,

❖ திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கை,

❖ திருத்தப்பட்ட வான்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை என்று பல கொள்கைகள் விரைவில் வெளியிடப்பட உள்ளன.

தமிழ்நாடு தொழில் கொள்கை 2021இன்கீழ் வழங்கப்படும் நிலையான ஊக்கச் சலுகைகளுடன், கூடுதலாகத் தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் ஆடைகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்றும் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

எந்த முதலீட்டுச் சூழ்நிலைக்கும் அரசு தயாராக உள்ளது, அதற்கேற்பத் திட்டங்களையும் வகுத்து வருகிறது என்பது இதன்மூலம் நிச்சயமாகத் தெளிவாகும்.

❖ இந்திய அளவில், காலணி உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 26 விழுக்காடாகவும், ஏற்றுமதியில் 45 விழுக்காடாகவும் இருக்கிறது.

❖ தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தோல் பொருட்கள், உலகச் சந்தைகளில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

❖ இந்தியாவிலேயே, அதிக அளவிலான காலணிகள், தோல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மையங்கள் அமைந்துள்ள மாநிலமாக நம் தமிழ்நாடு விளங்கி வருகிறது.

❖ ஆம்பூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி, வேலூர், பேரணாம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, சென்னை ஆகியன தோல் மற்றும் தோல் பொருட்களுக்கு முக்கிய மையங்கள்.

❖ இந்தியாவிலேயே, தோல் பதப்படுத்தும் தொழிலகங்களில் எல்லாம் Zero Liquid Discharge அமல்படுத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இந்தத் துறையை மேலும் வலுப்படுத்துவதற்காகத்தான் காலணி மற்றும் தோல் பொருட்களுக்கான கொள்கை அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

❖ 2025ஆம் ஆண்டிற்குள், காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் ரூ.20,000 கோடி முதலீட்டை ஈர்ப்பதையும், 2,00,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் நோக்கமாக இந்தக் கொள்கை வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

❖ சிப்காட்/சிட்கோ மற்றும் பொது, தனியார் கூட்டாண்மை மூலம், 30-50 ஏக்கர் பரப்பளவில் தொழில் பூங்காக்கள் வடிவில் ஆயத்தத் தொழில் கூடங்களுடன் புதிய தோல் அல்லாத காலணி உற்பத்திக்கான பசுமைத் தொகுப்புகளை அரசு உருவாக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

❖ காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி விநியோகச் சங்கிலியிலிருக்கும் இடைவெளிகளை ஆய்வு செய்து, உட்கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

❖ இத்துறைக்கான ஊக்கத்தொகை பெறும் தகுதி அளவுகோல்கள் பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளமை இந்தக் கொள்கையின் சிறப்பம்சமாக அமைந்திருக்கிறது!

அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிப்பது, அதிலும் பெண்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பு அளிப்பது, குறிப்பாகப் பள்ளிக்கல்வி வரை பயின்ற பெண்களுக்கும் வேலைவாய்ப்பு அளிப்பது போன்ற காரணிகளால்,

தமிழ்நாடு அரசு, இந்தத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றது.

தோல் அல்லாத காலணிகள் துறை மீது கவனம் செலுத்திடவும் நமது அரசு முனைந்து வருகிறது.

தோல் அல்லாத காலணிகள்தான் அடுத்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சி வாய்ப்புகளை வழங்கிடும். குறிப்பிட்டுக் கூற வேண்டுமானால், தோல் அல்லாத உற்பத்திப் பொருட்கள்தான் சந்தையில் 70 விழுக்காட்டுக்கும் அதிக அளவில் விற்கப்படுகின்றன. அதன் பொருட்டே, வெளியிடப்பட்டுள்ள கொள்கையில், தோல் அல்லாத காலணித் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், உலக அளவில் புகழ்பெற்ற காலணி உற்பத்தியாளர்கள் எல்லாம், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை வழங்கத் தொடங்கியுள்ளனர் என்று நான் அறிகிறேன். இயற்கை வளங்களின் பாதுகாப்பை நமது கடமைகளில் ஒன்றாக நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இதன் பொருட்டு, பல முற்போக்கு நடவடிக்கைகளை நமது அரசு மேற்கொண்டு வருகிறது.

ஏற்கெனவே, பல காலணி தயாரிப்பு நிறுவனங்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்திருக்கிறார்கள். பல நிறுவனங்கள் முதலீடு செய்ய ஆர்வமும் காட்டி வருகிறார்கள். இந்தக் கொள்கையினால் மேலும் பல நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவார்கள்.

❖ 2009ஆம் ஆண்டு செய்யார் SEZ நிறுவனத்தினுடைய தொழில் பிரிவுகளை நான் தொடங்கி வைத்தேன். இது இன்று மாபெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது. ரூ.2,000 கோடி வரை முதலீடு செய்துள்ளார்கள். 35 ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்துள்ளது. அதில் 70 விழுக்காடு பேர் பெண்கள். இந்த நிறுவனம் தனது தொழிலை மேலும் விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

❖ ரூ.1,000 கோடி முதலீடு மற்றும் 25 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் தைவான் நாட்டைச் சேர்ந்த Hong Fu நிறுவனம், தனது உற்பத்தித் திட்டத்தினை நிறுவிடத் தமிழ்நாட்டினைத் தேர்ந்தெடுத்துள்ளது.

❖ உலகப் புகழ்பெற்ற தோல் அல்லாத காலணி நிறுவனங்களான Nike, Adidas, Reebok, Puma போன்ற நிறுவனங்கள், நேரடியாகத் தமிழ்நாட்டில் உற்பத்தி நிறுவனங்களை நிறுவவில்லை. மாறாக, ஒப்பந்த உற்பத்தியாளர்கள் மூலமே உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறான பன்னாட்டு நிறுவனங்களை ஈர்த்திட வேண்டுமானால், அதற்கான சூழலமைப்பை வலுப்படுத்திட வேண்டும்.

❖ இராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில், ரூ.400 கோடி செலவில், 250 ஏக்கர் பரப்பளவில் காலணி உற்பத்திப் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

தற்போது இத்துறைக்கான மூலப்பொருட்கள் சீனாவில் இருந்துதான் இறக்குமதி செய்திட வேண்டிய நிலை உள்ளது. இப்பூங்கா அமைக்கப்படுவதன் மூலம், காலணி உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களையும் நாமே தயாரிக்க முடியும்.

உலகச் சந்தையில் Make in Tamil Nadu முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்ற நமது இலட்சியத்தை இத்திட்டம் நிறைவேற்றும்.

ரூ.2,250 கோடி முதலீடு, 37,450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இத்துறை சார்ந்த 5 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு இருக்கிறோம். இதேபோல் பல நிறுவனங்கள் தமிழகத்தை நோக்கி வர வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறேன்.

இங்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட அனைத்து முதலீட்டாளர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களின் திட்டங்கள் மென்மேலும் வளர்ச்சி பெற்றிட என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும், அதிகாரிகளும் அயராது உழைத்து, தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு, தொழில் துவங்குவதற்கான சேவைகளைத் தொடர்ச்சியாக அளித்து வருகின்றனர். அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தமிழக அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காலணிகள் ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படையானவை. முக்கியமானவை.

அதைப் போலத்தான் காலணி மற்றும் தோல் தொழிலும், நம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிகமிக முக்கியமானது ஆகும். இத்தொழில் மேலும் சிறப்படைய அனைத்து உதவிகளையும் இந்த அரசு உறுதியாகச் செய்யும் என்று நான் உறுதி அளித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்”.

கோயம்புத்தூரில் ரூ.662.50 கோடி மதிப்பீட்டில் 748 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை (24.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.08.2022 அன்று கோயம்புத்தூர், ஈச்சனாரியில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.271.25 கோடி செலவில் 228 முடிவுற்ற திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்து, ரூ.662.50 கோடி மதிப்பீட்டிலான 748 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,07,410 பயனாளிகளுக்கு ரூ.589.24 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள்

பொதுப்பணித்துறை (மருத்துவப் பணிகள்) சார்பில் ரூ.100.03 கோடி செலவில் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட சீமாங் சென்டர் கட்டடம், மண்டலப் புற்றுநோய் மையத்தில் அதிநவீன சிகிச்சை கருவிகள் நிறுவியது, மதுபோதை மற்றும் போதைப் பொருட்கள் ஒழிப்பு மையம் மற்றும் பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஆர்.டி.பி.சி.ஆர். கருவிகள் நிறுவியது;

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ரூ.57.05 கோடி செலவில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம், ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம், நகர நலவாழ்வு மையங்கள், சிறுவர் விளையாட்டுப் பூங்கா, குடிநீர் விநியோகத் திட்டம், உள்ளிட்ட 18 வளர்ச்சி திட்டப் பணிகள்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் சார்பில் ரூ.24.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய துணை மின் நிலையங்கள், கூடுதல் மின்மாற்றிகள்;

பேரூராட்சிகள் பகுதிகளில் ரூ.22.44 கோடி செலவில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம், பெருமாள் கோவில் பகுதியில் பாலம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம், சமுதாய நலக்கூடம், தார்ச் சாலைகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளிட்ட 33 வளர்ச்சி திட்டப் பணிகள்;

பொதுப்பணித்துறையில் (நீர்வள ஆதார அமைப்பு) ரூ.17.81 கோடி செலவில் பரம்பிக்குளம் ஆழியார் வடிநிலத்தில் ஆச்சிப்பட்டி ஓடை, கோதவாடி ஓடை, தூலக்கல் ஆறு, வரட்டாறு ஆகியவற்றில் தடுப்பணைகள், புனரமைக்கப்பட்ட பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் ஆகிய முடிவுற்ற 5 பணிகள், பொதுப்பணித் துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு) ரூ.11.38 கோடி செலவில் கால்நடை மருந்தகங்கள், அரசுப் பள்ளிகளில் கணினி, கலை மற்றும் ஓவிய அறைகள், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம் உள்ளிட்ட 10 பணிகள்;

நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.2.59 கோடி செலவில் கணபதி, அத்திப்பாளையம் சாலையில் உயர்மட்டப் பாலம்;

உயர்கல்வித்துறை சார்பில் ரூ.11.48 கோடி செலவில் பொள்ளாச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம், வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள், நூலகம், கருத்தரங்கக்கூடம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.20.73 கோடி செலவில் புதிய பேருந்து நிலையம், சுயஉதவிக் குழுக் கட்டடங்கள், அங்கன்வாடி மையக் கட்டடங்கள், தானியக் கிடங்கு, சாலைகள்

அமைத்தல், ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட 138 பணிகள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் ரூ.2.73 கோடி செலவில் துணை வேளாண்மை விரிவாக்க மையம், புதிய தோட்டக்கலை தகவல் மற்றும் பயிற்சிக் கட்டடம் மற்றும் மறுசீரமைப்பு செய்யப்பட்ட குறிச்சி உழவர் சந்தை;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் ரூ.33 இலட்சம் செலவில் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கக் கட்டடம், நகரும் நியாயவிலைக்கடை உள்ளிட்ட 4 பணிகள்;

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் ரூ.35 இலட்சம் செலவிலான 3 பணிகள்;

என மொத்தம், ரூ.271.25 கோடி செலவில் 228 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் துணை மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்துதல், 22 மின்பாதைகளைப் பிரித்தல், மின் அழுத்த விநியோக அமைப்பினை நிறுவுதல், இரட்டை மின்மாற்றிகளைப் பிரித்தல் என ரூ.237.13 கோடி மதிப்பீட்டிலான 9 பணிகள்;

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ரூ.134.08 கோடி மதிப்பீட்டிலான சூரிய மின்சக்தி நிலையம், கூடுதல் வகுப்பறைகள், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகள், பூங்கா மேம்பாட்டுப் பணிகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் உள்ளிட்ட 334 புதிய திட்டப் பணிகள்;

நீர்வளத்துறை சார்பில் ரூ.121.62 கோடி மதிப்பீட்டில் வால்பாறைச் சோலையார் அணையைப் பலப்படுத்தும் பணி, கால்வாய் புனரமைக்கும் பணிகள், நடைபாலம் அமைக்கும் பணிகள், தடுப்பணை கட்டும் பணிகள் உள்ளிட்ட 10 பணிகள்;

மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலத்துறை சார்பில் ஆழியார், கோட்டூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையத்தில் பழுதடைந்த 429 வீடுகள் ரூ.21.46 கோடி செலவில் புதியதாகக் கட்டும் பணி;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் பாலம் கட்டுதல், பள்ளிகளில் உட்கட்டமைப்பு, நீர்த்தேக்கத்தொட்டி, சாலைகள் அமைத்தல், பலப்படுத்துதல், நீர்நிலைகள் புனரமைத்தல் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் என ரூ.74.96 கோடி மதிப்பீட்டிலான 119 புதிய திட்டப் பணிகள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.9.85 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம், நகராட்சி அலுவலகக் கூடுதல் கட்டடம், தார்ச்சாலை அமைத்தல் உள்ளிட்ட 5 புதிய திட்டப் பணிகள்;

பேரூராட்சிகள் துறை சார்பில் ரூ.23.08 கோடி மதிப்பீட்டில் சூலூர் வாரச்சந்தை மேம்பாட்டுப் பணிகள், துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு, தார்சாலை மற்றும் வடிகால் அமைத்தல், பூங்கா மேம்பாடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளிட்ட 253 புதிய திட்டப் பணிகள்;

நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.22.43 கோடி மதிப்பீட்டில் காந்தையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் மற்றும் அவினாசி - திருப்பூர் - பல்லடம்-பொள்ளாச்சி - கொச்சின் (வழி) மீன்கரை சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள்;

பொதுப்பணித்துறை (கட்டடங்கள் மற்றும் பராமரிப்பு) மற்றும் பொதுப்பணித்துறை (மருத்துவப் பணிகள்) சார்பில் ரூ.8.93 கோடி மதிப்பீட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிமனை மற்றும் ஆய்வகம், கால்நடை மருந்தகக் கட்டடம், வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு முழு உருவச்சிலை, சிங்காரவேலர் இல்லத்தில் கூடுதல் கட்டடம், பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை மையக் கூடுதல் கட்டடம்;

கூட்டுறவுத்துறை சார்பில் ரூ.31 இலட்சம் மதிப்பீட்டிலான துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகக் கட்டடம் நவீனப்படுத்தும் பணிகள்;

என மொத்தம், ரூ.662.50 கோடி மதிப்பீட்டிலான 748 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்

1,902 மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில ரூ.161.32 கோடி கல்விக் கடன், மாவட்ட நிருவாகத்தின் சிறப்பு முயற்சியாகச் செயல்பட்டு வரும் சமவாய்ப்பு மையம் வாயிலாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்குத் தனியார்த் துறையில் வேலைவாய்ப்பு, பழங்குடியின மக்களுக்குத் தனிநபர் வன அனுபவ நில உரிமைச்சான்று, "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ், மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரிகள் மற்றும் அரசுப் பள்ளிகளுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.10.53 கோடி மதிப்பீட்டில் இலவச மிதிவண்டிகள், மகளிர் திட்டம் மூலம் பயனாளிகளுக்குக் கடனுதவிகள், கூட்டுறவுத் துறையின் மூலம் 5,411 பயனாளிகளுக்கு ரூ.25.93 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின்

மூலம் 10,737 நபர்களுக்கு ரூ.176.03 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள், எனப் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் ரூ.589.24 கோடி மதிப்பில் 1,07,410 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, கோயம்புத்தூர், ஈச்சனாரியில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

காட்டக்கூடியவராக நம்முடைய செந்தில்பாலாஜி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவரை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. அவரோடு துணை நின்று திறம்பட செயல்படக்கூடிய நம்முடைய மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட இந்த மாவட்டத்தின் அனைத்து அரசு அதிகாரிகளை நான் தமிழக அரசின் சார்பில், தமிழ்நாட்டு மக்களின் சார்பில் குறிப்பாக இந்தக் கோவை மாவட்ட மக்களின் சார்பில் நன்றி சொல்கிறேன், அவர்களை வாழ்த்துகிறேன், அவர்களுக்கு என்னுடைய

பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

"உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நடந்து இந்த 15 மாத காலத்தில், இந்த கோவை மாவட்டத்திற்கு இதுவரை, எல்லோரும் குறிப்பிட்டதைப்போல ஐந்தாவது முறை நான் வந்திருக்கிறேன். இந்த மாவட்டத்தின்மீதும், இந்த மாவட்ட மக்கள்மீதும் நான் வைத்திருக்கக்கூடிய அன்பின் அடையாளம் இது!

இந்த விழாவை அரசு விழா என்று சொல்வதைவிட, கோவை மாநாடு என்று சொல்லக்கூடிய வகையில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்மீது இந்த மாவட்டத்து மக்கள் எத்தகைய மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு, இந்த 'கோவை மாநாடே' சாட்சியாக அமைந்திருக்கிறது. இன்னும் பெருமையாகச் சொல்லட்டுமா? எதிர்காலத் தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பதை, உங்கள் முகங்களில் பார்க்கும் மலர்ச்சியின் மூலமாக, மகிழ்ச்சியின் மூலமாக நான் அறிந்துகொள்கிறேன்.

நம்முடைய செந்தில்பாலாஜி அவர்கள் சொன்னதுபோல, நான் ஏற்கெனவே கடந்த நவம்பர் மாதம் 22ஆம் தேதி அரசின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய விழாவில், புதிய திட்டங்களைத் தொடக்கிவைக்கக்கூடிய விழாவில் நான் கலந்துகொண்டேன். அதற்குள் இரண்டாவது நிகழ்ச்சியை நம்முடைய அமைச்சர் செந்தில்பாலாஜி ஏற்பாடு செய்துவிட்டார். அவரைப் பொறுத்தவரைக்கும், தனக்கென ஒரு இலக்கை வைத்து, எப்படியும் வென்று

கோவையில் இத்தகைய பிரம்மாண்டமான விழா நடப்பது பொருத்தமானதுதான். ஏனென்றால் கோவை என்றாலே பிரம்மாண்டம்தானே.

❖ தென்னிந்தியாவின் மிக முக்கியமான தொழில் நகரம் இந்தக் கோவை. பெருந்தொழில்கள் கொண்ட நகரம் மட்டுமல்ல, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களும் ஏராளமாக இருக்கும் நகரம் இந்தக் கோவை! பல இலட்சம் தொழிலாளர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கே ஏற்றுமதி இறக்குமதிக் குறியீடுகளில் வளமான அளவீடுகளை வழங்கும் மாவட்டமாக இந்தக் கோவை அமைந்துள்ளது.

❖ என்ன தொழில்தான் இல்லை! என்று வியந்து சொல்லத்தக்க வகையில் இந்த மாவட்டம் விளங்கிக்கொண்டிருக்கிறது.

நூற்பாலைகள்,

விசைத்தறிகள்,

வார்ப்பாலைகள்,

வெட்கிரைண்டர் தயாரிப்பு,

மோட்டார் பம்புகள் தயாரிப்பு,

உதிரிப் பாகங்கள் தயாரிப்பு,

நகைத் தயாரிப்பு நிறுவனங்கள்,

தென்னை நார் சார்ந்த தொழில்கள்,

உணவுப் பதப்படுத்தும் தொழில்கள்

என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

அந்தளவுக்குத் தொழில் வளம் கொண்டிருக்கக்கூடிய மாவட்டமாக இந்தக் கோவை மாவட்டம் விளங்கிக்கொண்டிருக்கிறது!

புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவது, முடிவுற்றிருக்கக்கூடிய பணிகளைத் திறந்து வைப்பது, மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, என்கின்ற மூன்று திட்டமிடுதல்களோடு தமிழ்நாடு அரசின் அனைத்து அரசு விழாக்களும் இப்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அது எல்லோருக்கும் தெரியும்.

அந்த வகையில், இந்தக் கோவை மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் 22ஆம் தேதி நடைபெற்ற அரசு விழாவில், ரூ.89.73 கோடி மதிப்பீட்டில், 128 புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவை நான் நடத்தி வைத்தேன்.

ரூ.587.91 கோடி மதிப்பீட்டில் 70 முடிவுற்றப் பணிகள் தொடங்கிவைத்தேன்.

ரூ.646.61 கோடி மதிப்பீட்டில் 25,123 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் நான் வழங்கியிருக்கிறேன்.

அதைவிடப் பிரம்மாண்டமாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன, இதை முடித்துவிட்டு நான் வழங்க இருக்கிறேன்.

❖ இன்றைய நாள், அனைத்துத் துறைகளின் வாயிலாக, ரூ.589 கோடி மதிப்பீட்டில், 1.07 இலட்சம் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் இங்கு வழங்கப்படவிருக்கிறது. எல்லோரும் சொன்னார்களே பெருமையோடு, நானும் சொல்கிறேன், அதைத்தான் வழிமொழிகிறேன். இதுவரை நடந்த அரசு விழாக்களிலேயே அதிகளவு பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்படுவது இந்தக் கோவை மாவட்டத்தில்தான் என்ற மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

என்ன செய்தோம்? என்ன செய்தோம்? என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்களே, அவர்களுக்கு நான் நெஞ்சுயர்த்தி கம்பீரமாக இந்த மேடையில் நின்று சொல்கிறேன், இதுதான் சாதனை.

அனைத்துத் துறைகளின் சார்பில்,

❖ ரூ.662.50 கோடி மதிப்பீட்டில், 748 புதிய திட்டப் பணிகளுக்கு இன்றைக்கு நான் அடிக்கல் நாட்டி இருக்கிறேன், சற்றுமுன் உங்களுக்கு முன்னால் அடிக்கல் நாட்டினேன்.

❖ ரூ.272 கோடி மதிப்பீட்டில் 228 முடிவுற்ற திட்டப் பணிகளை இன்றைக்கு உங்கள் முன்னால் தொடங்கி வைத்திருக்கிறேன்.

கடந்த ஓராண்டிற்கும் குறைவான காலத்தில் இந்தக் கோயம்புத்தூர் மாவட்டத்தில், ரூ.1,234 கோடிக்கு அதிகமான மதிப்பில், 1.32 இலட்சம் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளதிலிருந்து இந்த அரசு மக்களுக்காக இருக்கிறது, இந்த அரசு பல காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறது, சாதனைகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் தெளிவாக அறியலாம்.

ஏதோ சிலருக்கு உதவிகளைச் செய்துவிட்டு கணக்குக் காட்டுபவர்கள் அல்ல நாங்கள். கணக்கில்லாத உதவிகளை, கணக்கிட முடியாத நலத்திட்ட உதவிகளைச் செய்யும் அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு என்பதை நான் கம்பீரமாகச் சொல்வேன்.

மிக எழுச்சியோடு, ஏற்றத்தோடு, பிரம்மாண்டமாக நடந்துகொண்டிருக்கும் இன்றைய நிகழ்ச்சியை மேலும் மும்மடங்கு பிரம்மாண்டமாக்கும் வகையில், மூன்று புதிய முன்னெடுப்புகளைத் தொடங்கவுள்ளோம் என்பதையும் மிக மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

❖ ரூ.161 கோடி மதிப்பிலான கல்விக் கடன்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

❖ 60 கல்லூரிகள் மற்றும் 200 அரசுப் பள்ளிகளுடன், "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

❖ மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கைம்பெண்கள் ஆகியோருக்குத் தனியார் துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான "சமவாய்ப்பு மையம்" திட்டம் தொடங்கப்படுகிறது.

அதேபோல, கோவை மாவட்டத்து மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் மாபெரும் திட்டம்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சண்முக சுந்தரம் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார், பன்னாட்டு விமான நிலைய விரிவாக்கத் திட்டம்!

கோயம்புத்தூர் பன்னாட்டு விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு ரூ.1,810 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

உலக அளவிலான தொழில் நகரமான கோவையின் வளர்ச்சிக்காக இதுபோன்ற பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

கடந்த ஓராண்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இந்த அரசு செய்த சாதனைகளைப் பட்டியலிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

❖ புதிய தொழில்முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தில், 85 பயனாளிகளுக்கு ரூ.18.47 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

❖ "முதல்வரின் முகவரி" என்ற திட்டத்தின் மூலம் 679 நபர்களுக்கு ரூ.31.82 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 1.57 இலட்சம் பேர் பயனடைந்துள்ளார்கள்.

❖ கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ், 19,590 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

❖ கூட்டுறவு வங்கிகளில், 5 பவுனுக்கு உட்பட்டிருக்கக் கூடிய நகைக் கடன்களைத் தள்ளுபடி செய்ததன் மூலம், 47,567 பயனாளிகளுக்கு ரூ.199.53 கோடி தங்க நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

❖ ரூ.10.85 கோடி மதிப்பீட்டில் 24,839 வீட்டு மின் இணைப்புகளும், ரூ.13.92 கோடி மதிப்பீட்டில் 294 தொழிற்சாலை மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில், 4,264 கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் மற்றும் ரூ.28.26 கோடி மதிப்பீட்டில், 5,970 விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம் தரப்பட்டுள்ளது.

❖ 1,703 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.66.05 கோடி மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

❖ 13,171 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.856.54 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ கடந்த 19.05.2022 அன்று கோயம்புத்தூரில், தொழிலதிபர்கள் மற்றும் தொழில் கூட்டமைப்பினருடன் தொடர்ந்து நான் இதே கோவையில் 3 மணி நேரம் அவர்களை உட்கார வைத்துக் கலந்துரையாடி, அவர்களின் கோரிக்கைகளையெல்லாம் கேட்டு, படிப்படியாக அந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் தீர்வு காணப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் இந்த ஓராண்டுக் காலத்திற்குள் செய்து தரப்பட்டிருக்கக்கூடிய பணிகள்! இதனுடைய தொடர்ச்சியாகத்தான் இந்த மாபெரும் விழா நடந்துகொண்டிருக்கிறது.

❖ கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள பழுதடைந்துள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் விரைந்து நடைபெறும்.

❖ மத்திய சிறைச்சாலையை இடம் மாற்றி, அந்த இடத்தில் ரூ.200 கோடி செலவில், செம்மொழிப் பூங்கா விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

❖ கோயம்புத்தூர் மக்களின் குடிநீர்த் தேவையினைத் தீர்ப்பதற்காக, சிறுவாணி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று மாண்புமிகு கேரள முதலமைச்சரிடம் நான் கடிதம் மூலமாகக் கேட்டுக்கொண்டேன், தொலைப்பேசியில் வலியுறுத்தினேன். மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய, கேரள அரசால் போதிய தண்ணீர் உடனடியாக திறந்துவிடப்பட்டது.

❖ கோயம்புத்தூரில் மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்த விரிவான திட்டம் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

❖ சென்னையைப் போன்று கோயம்புத்தூரில், வீட்டுமனை மற்றும் கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்கு, அங்கீகாரம் பெறுவதற்கு, கோயம்புத்தூர் மாநகர வளர்ச்சிக் குழுமம் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்மையில், டைம்ஸ் ஆப் இந்தியா என்கிற பிரபலமான ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்தது, மிகத் தெளிவாக எழுதியிருந்தார்கள், கோவையில் என்னென்ன பணிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லி, 'கோவை மாபெரும் தொழில் நகரமாகிறது' என்று பாராட்டி எழுதி இருக்கிறது.

நாட்டிலேயே, அதிக முதலீடுகளை ஈர்த்து, அதிக வேலைவாய்ப்பை உருவாக்கி, தொழில் முனைவோர்களை ஊக்குவித்து, கல்வியாக இருந்தாலும், புதிய வேலைவாய்ப்புகளாக இருந்தாலும், பொருளாதார வளர்ச்சியாக இருந்தாலும், சமூகநலத் திட்டங்களாக இருந்தாலும், அனைத்திலும் மேல்நோக்கி முன்னேறிக்கொண்டு இருக்கும் மாநிலமாகக் கடந்த ஓராண்டுக் காலத்தில், தமிழ்நாடு சென்றுகொண்டு இருக்கிறது என்று எழுதியிருக்கிறது.

அண்மையில், நான் டெல்லிக்குச் சென்றிருந்தேன். எதற்கென்றால், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களையும், குடியரசுத் துணைத் தலைவர் அவர்களையும் சந்திக்கச் சென்றேன். அவர்கள் பதவியேற்ற நேரத்தில் நான் செல்ல முடியாத சூழ்நிலை. கொரோனா என்ற அந்தத் தொற்று நோயில் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் நான் உடனடியாக வெளியூருக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை. அதனால், சில நாட்களுக்கு முன்பு நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, நான் அவர்களைப் பார்த்து அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லச் சென்றிருந்தேன்.

அப்போது,நான் சந்தித்தவர்கள் தமிழ்நாட்டைப்பற்றி, அதன் வளர்ச்சியைப்பற்றிக் கேட்டார்கள். அவர்கள் கேட்ட கேள்வியைப் பார்த்து, ஒரு உயர்ந்த கருத்து பரவலாக இருப்பதை நான் உணர்ந்தேன். ஒரு நாளிலோ அல்லது ஒரு மாதத்திலோ பெற்றதல்ல! தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அளித்துச்சென்ற அடித்தளத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த பாதையில், கழக ஆட்சி செல்வதால் பெற்றிருக்கக்கூடிய நற்பெயர்.

கழகம் கடந்து வந்த பாதை கடினமானது. ஆனால், தமிழ் மக்கள் வாழ்வு இனிமையானதாக இருக்க வேண்டும் என்பதற்காக அது தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது, அதற்காகத்தான் பாடுபடுகிறது கழகம், இந்த ஆட்சி. இதில் எந்த நாளும் மாறுபாடு என்பதே இருக்காது என்பதை நான் உறுதியோடு தெரிவிக்கிறேன்!

பல்வேறு மாநில அரசுகளும், தமிழ்நாடு அரசின் முற்போக்கு, முன்னேற்றத் திட்டங்களை உன்னிப்பாகக் கவனித்து தங்களுடைய மாநிலத்தில் பின்பற்றி வருகிறார்கள்.

ஆனால், இங்கே இருக்கக்கூடிய சிலரால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை! பொத்தாம்பொதுவாக, எந்த வாக்குறுதியையும் தி.மு.க.

ஆட்சி நிறைவேற்றவில்லை என்று சிலர் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அவர்களைப் பார்த்து நான் கேட்கின்ற கேள்வியெல்லாம், மக்களோடு மக்களாக வந்து, மக்களிடத்தில் வந்து நீங்கள் கேட்க வேண்டும்.

ஏதோ பேட்டி கொடுப்பதற்காக மட்டும் வீட்டைவிட்டு வெளியே வந்து, பேட்டியைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குள் சென்று உட்கார்ந்து கொள்பவர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாது. தமிழ்நாட்டு மக்கள் அடையும் நன்மைகளைப் பற்றி எதுவும் நீங்கள் தெரிந்துகொள்ள முடியாது! நான் இன்னும் கேட்கிறேன்,

❖ கட்டணமில்லாமல் பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய கோடிக்கணக்கான மகளிர்,

❖ தங்களது வீட்டுக்கு மருத்துவப் பணியாளர்கள் வந்து அவர்கள் மூலமாகச் சிகிச்சை பெற்ற பல்லாயிரக்கணக்கான கிராமப்புற மக்கள் இருக்கிறார்கள்.

❖ இலவச மின் இணைப்புப் பெற்ற 1 இலட்சத்துக்கும் மேற்பட்டு இருக்கக் கூடிய விவசாய பெருங்குடி மக்கள், உழவர்கள்,

❖ நான் முதல்வன், கல்லூரிக் கனவுத் திட்டங்களின் மூலமாக வாழ்க்கைக்கு நல்வழியைப் பெற்ற இலட்சக்கணக்கான மாணவக் கண்மணிகள்,

❖ ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதிய உயர்வுகளைப் பெற்ற இங்கே இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் என அத்தனை பேரும், நன்றி மறவாத் தன்மையுடன் இந்த ஆட்சியை வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள, புரிந்துகொள்ள மனமில்லாமல் புலம்பிக் கொண்டிருக்கும் சிலர் அளித்து வரும் பேட்டிகளுக்கு நான் எப்போதும் முக்கியத்துவம் தருவது கிடையாது.

“இனமானம், தன்மானம் ஆகிய இரண்டையும் பற்றிக் கவலைப்படாதவர்களிடம் நல்ல பேர் வாங்க வேண்டிய அவசியம் எனக்கில்லை” என்று தந்தை பெரியார் சொன்னார். அந்த வகையில், தன்மானம் இல்லாத, இனமானம் என்றால் என்னவென்று தெரியாத கூட்டம்தான், இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பார்த்து விமர்சிக்கிறது.

தி.மு.க. ஆட்சி என்பது, ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஒளி தரும் ஆட்சி!

தி.மு.க. ஆட்சி என்பது அடக்கப்பட்டவர்களை அரவணைத்து அவர்களுக்காக நன்மை செய்யக்கூடிய ஆட்சி!

இது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல், பழங்குடியின மக்களின் நல்வாழ்வுக்காக அமைந்திருக்கக்கூடிய அரசு.

சிறுபான்மைச் சமூகத்துக்கும், பெரும்பான்மைச் சமூகத்துக்கும் இடையேயான ஒற்றுமையை எந்தக் காலத்திலும்: எந்தச் சூழ்நிலையிலும், நம் மாநிலத்தில் சிதைந்துவிடக்கூடாது என்று நினைக்கும் சகோதரத்துவ அரசு!

எல்லார்க்கும் எல்லாம் என்கிற சமநிலைச் சமதர்ம சமுதாயம் அமைக்க வேண்டும் என்று நினைக்கக்கூடிய அரசுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு!

ஒரு தாய், தனது எல்லாப் பிள்ளைகளையும், ஒரே தரத்துடன், ஒரே குணத்துடன் வாழ்விப்பதைப்போல அனைவருக்குமான அரசாகச் செயல்பட்டு வரக்கூடிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு!

வாக்களிக்காதோரும் பாராட்டும் வகையில் நாம் அன்றாட செயல் அமைய வேண்டுமென்று நினைக்கிறவன் நான்!

என் நெஞ்சில் இதை வைத்துத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கடமையைச் செய்ய வேண்டும் என்று நான் தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டிருக்கிறேன். அப்படித்தான் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில்தான், எனது கொளத்தூர் தொகுதியைப்போல, மற்ற எல்லாத் தொகுதிகளையும் நான் எப்படிக் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரியும்.

நேற்றைக்கு நான், கோவைக்குப் புறப்படுவதற்கு முன்பு, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டுத்தான் புறப்பட்டேன்.

நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள், தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தை, 234 தொகுதிக்கும் விரிவுபடுத்தி இருக்கிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற பயணத்தை நான் தொடங்கினேன். அனைத்துத் தொகுதிகளுக்கும் போனேன். அவர்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றேன். ஆட்சிக்கு வந்ததும், நூறு நாட்களில் கோரிக்கைகளைச் சரிபார்த்து நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னேன்.

பொறுப்பேற்றதும் தனித் துறையை உருவாக்கி, 100 நாட்களில், பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறேன். அனைத்தையும் என்று சொல்லி யாரையும் நான் ஏமாற்ற விரும்பவில்லை. பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறேன். 100 நாட்களோடு அந்தத் திட்டம் முடியவில்லை. இப்போது, 234 தொகுதிக்கும் விரிவுபடுத்தி இருக்கிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்

மதிப்பிற்குரிய திருநடராசன் பேசுகிறபோது, MLAக்கு மட்டும் கொடுக்கிறீர்கள், MPக்கு இல்லையா? என்று கேட்டார்கள். உங்கள் MP தொகுதி அந்த MLA தொகுதியில்தான் அடங்கியிருக்கிறது. அதனால் கவலைப்பட வேண்டாம். எது எப்படியிருந்தாலும், நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய கோரிக்கைகள் கவனிக்கப்படும், அதை நிறைவேற்றுகிற முயற்சிகளை இந்த அரசு நிச்சயமாக ஈடுபடும். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது. கவலைப்படாதீர்கள். ஆகவே, அதற்கான கடிதத்தைத்தான் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நான் அனுப்பிவைத்து இருக்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும், அவரவர் தொகுதிக்கு வேண்டியத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சில தேவைகள், அந்தந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருந்தாலும், நடைமுறையில் உள்ள திட்டங்களின் மூலம் அவற்றைச் செயல்படுத்த இயலாத நிலை இருக்கலாம்.

ஆக, இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதியிலும் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத அவசியப் பணிகள் குறித்து அந்தத் தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளைப் பெற்று, மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து, அவற்றைப் பரிசீலித்து அதற்கு ஒப்புதல் வழங்க நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்கள் தொகுதியின் முக்கியமான பத்துத் திட்டங்களின் பட்டியலை, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடத்தில் நீங்கள் அளிக்கலாம். பட்டியலில் இருக்கக்கூடிய, மிக முக்கியமானத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களின்கீழ் செயல்படுத்த இயலாதத் திட்டங்களை, முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் உறுதியளித்துள்ளேன். என்ன அந்தத் திட்டம்?

- குடிநீர் மற்றும் நீர் ஆதாரத்தை மேம்படுத்தக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள்,
- வேளாண் உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்குரிய பணிகள்,
- இணைப்புப் பாலங்கள் மற்றும் சாலைகள்,
- மருத்துவ வசதிகள்,
- பள்ளி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்ற புதிய நிறுவனங்கள் அல்லது தற்போதுள்ள கல்வி நிறுவனங்களில் தேவைப்படும் உட்கட்டமைப்புப் பணிகள்,
- தொழில் வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய வசதிகள்,
- மின் மயானம்,
- நவீன நூலகம்,
- நகர்ப்புறங்களில் ஒருங்கிணைந்த நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள், புதிய சுற்றுலாத் தலங்கள்,
- தற்போதுள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பணிகள் போன்ற சமூக, பொருளாதார, வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யலாம்.

இந்தப் பட்டியலை, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அடுத்த 15 நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறு சட்டமன்ற உறுப்பினர்களை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

நான் பெருமையோடுச் சொல்கிறேன். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டம் இந்த திட்டம்.

இது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, எங்கள் கூட்டணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, அது அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பா.ஜ.க.வைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் சேர்த்துத்தான். அந்தத் தொகுதிகள் பயனடைய இருக்கின்றன. இதற்காக, அவர்கள் என்னைப் பாராட்டவில்லையென்றாலும், நன்றி சொல்லவில்லை என்றாலும் நான் நிச்சயமாகக் கவலைப்பட மாட்டேன், பரவாயில்லை! அதையெல்லாம் எதிர்பார்த்து மக்களுக்காகக் கடமை ஆற்றுகிறவன் ஸ்டாலின், இந்த ஸ்டாலின் அல்ல! இது என்னுடைய

பொறுப்பு என, மக்களுக்கு அந்த உணர்வோடு நான் கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன். சிலர் காழ்ப்புணர்ச்சியோடு தூற்றுகிறார்கள். பரவாயில்லை. அவர்களும் பிழைக்க வேண்டும் என்று எண்ணிக்கொள்கிறேன், அவ்வளவுதான்.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் சொன்னார்:

போற்றுவார் போற்றட்டும்

புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்

ஏற்றதோர் கருத்தை

எனதுள்ளம் என்றால்

எடுத்துரைப்பேன்

எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்!

அந்த உணர்வோடு நான் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறேன். இவர்கள் பாராட்டு எனக்குத் தேவையில்லை.

நமது அரசின் திட்டங்களால், நாளும் பயனடைந்து வரும் மக்களின் பாராட்டு எனக்குப் போதும். உங்களுடைய முகங்களில் பார்க்கும் மகிழ்ச்சிதான் என்னை மகிழ்ச்சி அடைய வைக்கிறது.

இந்த மூன்று நாள், இன்று, நாளை, நாளை மறுநாள், மூன்று நாள் சுற்றுப்பயணத்திற்காக, நேற்று மாலை சென்னையிலிருந்து விமானத்தில் புறப்பட்டு, கோவை விமான நிலையத்தில் இறங்கி நான் தங்குகிற விடுதிக்கு வந்து சேர்வதற்கு ஏறக்குறைய 2 மணி நேரம் ஆனது. அதேபோல, காலை இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்குத் தங்கியிருக்கக்கூடிய இடத்திலிருந்துப் புறப்பட்டு இந்த இடத்திற்கு வருவதற்கு ஏறக்குறைய ½ மணியிலிருந்து 1¾ மணி நேரம் ஆனது. 10 நிமிடத்தில் வந்துவிடலாம். எதற்கு இவ்வளவுக் காலதாமதம். வருகிற வழியெல்லாம் மக்கள் சாலையின் இருபுறமும் நின்று, ஆண்கள், பெண்கள், தாய்மார்கள், வயது முதியோர்கள், இளைஞர்கள், மாணவர்கள், மாணவியர்கள், அரசியலுக்கு அப்பாற்பட்டு இருமருங்கிலும் இருந்து வரவேற்ற அந்தக் காட்சியைப் பார்த்தேன். ஆக மக்கள் கொடுத்திருக்கக்கூடிய வரவேற்பைப் பார்க்கிறபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு இணை எதுவும் கிடையாது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா!

ஆக, உங்களின் சிரிப்பினில்தான் நான் இறைவனைக் காண்கிறேன், அண்ணாவைக் காண்கிறேன், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரைக் காண்கிறேன்!

இந்தக் கொள்கைகளும், கோட்பாடுகளும், எண்ணங்களும், சிந்தனைகளும் நிறைவேறிவிடக் கூடாது என்று நினைப்பவர்கள் மட்டும்தான், தி.மு.க. அரசை விமர்சிக்கிறார்கள். என்னை விமர்சிக்கிறார்கள்.

தனிப்பட்ட ஸ்டாலினை விமர்சிப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை, ஏனென்றால் நான் விமர்சனத்தில் வளர்ந்தவன்!

இன்னும் சொன்னால், விமர்சனங்களாலேயே வளர்ந்தவன் நான்!

எதிர்ப்பையும், அடக்குமுறைகளையும் மீறி வளர்ந்தவன்தான் நான்!

யாராவது எதிர்த்தால்தான் நான் மேலும் மேலும் உற்சாகமாகச் செயல்படுவேன். அதே நேரத்தில், என்னை எதிர்ப்பதன் மூலமாக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டுக்கு, குந்தகம் விளைவிக்க நினைத்தால் அதனை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

விமர்சனங்களை விரும்புபவன்தான் நான். ஆனால் விதண்டாவாதங்களை அல்ல!

வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொள்பவன்தான் நான். ஆனால் பயனற்ற சொற்களை அல்ல!

சொந்தக் கட்சிக்குள் நடக்கும் அதிகாரப் போட்டியில், தங்களது கையாலாகாத்தனத்தை மறைப்பதற்கு, திசை திருப்புகிற நோக்கத்தோடு தி.மு.க. அரசை இன்றைக்கு விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள், தி.மு.க. அரசை விமர்சிப்பதற்குத் தகுதியோ, யோக்கியதையோ, கிஞ்சிற்றும் கிடையாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

காரணம் இந்த ஓராண்டுக் காலத்தில், ஓராயிரம் திட்டங்கள்! ஒன்றரை வருடம்தான், இன்னும் ஒன்றரை வருடம் ஆகவில்லை, அதற்குள் இவ்வளவு திட்டங்கள். நினைத்துப் பாருங்கள், ஒரு வருடத்தில் இவ்வளவு என்றால், ஐந்து வருடங்களில்,

அளப்பரிய திட்டங்களை நிறைவேற்றித், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக, உலகில் அனைத்து வளம் கொண்ட மாநிலமாக ஆக்குவதே எங்களுடைய இலட்சியம்! அதனை அறிவிக்கக்கூடிய மாநாடுதான், இந்த மாநாடு.

இறுதியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது,

உங்களுக்கான அரசு இது!

உரிமையுடன் கோரிக்கை வையுங்கள்!

உண்மையுடன் நிறைவேற்றித் தருவோம்!

ஆகவே, இந்த ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் பக்கபலமாக இருக்க வேண்டும், இருக்க வேண்டும் என்று கேட்டு, உங்கள் அன்புக்கும், உங்களுடைய வாழ்த்துக்கும், என்னுடைய நன்றி, நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.”

திருப்பூர் மண்டல மாநாட்டில் “தோள் கொடுப்போம் தொழில்களுக்கு” என்ற முழக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஆற்றிய உரை (25.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.08.2022 அன்று தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற ‘தோள் கொடுப்போம் தொழில்களுக்குத்’ திருப்பூர் மண்டல மாநாட்டில் கலந்துகொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக ரூ.167.58 கோடி அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு திட்டங்களைத் தொடங்கிவைத்தும், பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், தொழில்முனைவோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை அளவான முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதார மூலங்களை வழங்கி ஒட்டுமொத்த சமூக-பொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூரில் நடைபெற்ற ‘தோள் கொடுப்போம் தொழில்களுக்குத் திருப்பூர் மண்டல மாநாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

தமிழ்நாட்டில் தேங்காய் மட்டையிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் சுமார் 4,500 நிறுவனங்கள், ஆண்டிற்கு சுமார் ரூ.8,000 கோடி விற்று முதல் ஈட்டும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இத்தொழில் மேலும் பன்மடங்கு அதிகரிக்கத் தேவையான வளங்களும், வாய்ப்புகளும் இங்கு உள்ளன என்பதனை அறிந்து, தமிழ்நாடு அரசு, 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், கயிறு வணிக வளர்ச்சிக்கென ரூ.5 கோடி ஒதுக்கீட்டில் ‘தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்’ அமைக்கப்படும் என்று அறிவித்தது.

இதன்படி, அறிவிக்கப்பட்ட ஐந்து மாதங்களுக்கு உள்ளாகவே, புதிய கயிறு குழுமங்கள் அமைத்தல், புதிய சந்தைகளை அடையாளம் காணுதல், நுகர்வோருடன் பிணைப்பை ஏற்படுத்தி, கயிறு வணிகம் மற்றும் சந்தைப்படுத்துதலை உலக அரங்கிற்குக் கொண்டு செல்லுதல், நவீன வசதிகளுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்களை உருவாக்குதல், இத்தொழில் துறையில் புதுமைகளை அடையாளம் கண்டு மேம்படுத்தத் தொழில் கல்வி கூட்டாண்மையை உருவாக்குதல், ஆகிய இலக்குகளைச்

செயல்படுத்திடும் வகையில், கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்" என்ற புதிய நிறுவனம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ரூ.36.60 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.26.58 கோடி அரசு உதவியுடன் நான்கு புதிய கயிறு குழுமங்கள் அமைப்பதற்கான ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதன் விவரங்கள்:

❖ திருப்பூர் மாவட்டம், குண்டடம் (திட்ட மதிப்பீடு - ரூ.13.95 கோடி, இதில் அரசு மானியம் ரூ.8.75 கோடி),

❖ உடுமலைப்பேட்டை (திட்ட மதிப்பீடு - ரூ.6.92 கோடி, இதில் அரசு மானியம் ரூ.6.23 கோடி),

❖ கரூர் மாவட்டம், கே. பரமத்தி (திட்ட மதிப்பீடு - ரூ.6.93 கோடி, இதில் அரசு மானியம் ரூ.5 கோடி),

❖ கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (திட்ட மதிப்பீடு - ரூ.8.80 கோடி, இதில் அரசு மானியம் ரூ.6.60 கோடி),

மேலும், ரூ.8.78 கோடி திட்ட மதிப்பீட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் திட்டங்களான புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், முதலீட்டு மானியம் ஆகியவற்றின்கீழ், கயிறு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள 6 தொழில் முனைவோர்களுக்கு மானிய உதவிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிதி வசதியினைப் பிணையமின்றி எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தின்கீழ், ரூ.40 இலட்சம் வரையுள்ள கடன்களுக்கு 90 விழுக்காடு உத்தரவாதமும், ரூ.40 இலட்சம் முதல் ரூ.2 கோடி வரை உள்ள கடன்களுக்கு 80 விழுக்காடு உத்தரவாதமும், ஒன்றிய அரசின் குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்துடன் (CGTMSE) இணைந்து தமிழ்நாடு அரசு அளிக்கிறது.

இத்திட்டத்தின் சிறப்பம்சமானது, பொதுவாக வங்கிக் கடன் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் களையப்பட்டு அனைத்து நடைமுறைகளும் இணையதளம் வாயிலாகச் செயல்படுத்தப்படுவதால், கடன் விண்ணப்பப் பரிசீலனை செய்யும் நேரம் குறைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தாய்கோ வங்கியிலிருந்து கடன் பெறவிருக்கும் தொழில் முனைவோர்களுக்கும் பயனளிக்கும் விதமாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் "தரமதிப்பீடு" (Credit score), நிறுவனங்களின் 'கடந்த கால கடனைத் திருப்பிச் செலுத்திய காரணி (CIBIL score)' மட்டுமல்லாமல் இதர நிதிநிலைச் செயல்பாடுகளையும் கொண்டு இணையதளம் வாயிலாகவே செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தரமதிப்பீடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வங்கிகள் / நிதி நிறுவனங்களின் மூலம் கடன் பெற பேருதவியாக அமையும்.

மேற்கண்ட அனைத்து நடைமுறைகளையும் இந்தியாவில் செயல்பாட்டுக்குக் கொண்டுவரவுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கெனத் தமிழ்நாடு அரசு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் விதமாக, கடன் உத்தரவாதத்துடன் ரூ.1.19 கோடிக்கான கடன் தொகையினை, திருப்பூர் மண்டலத்தைச் சார்ந்த 5 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இதுமட்டுமின்றி, 70க்கும் மேற்பட்ட பிற பயனாளிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.17 கோடி அளவிற்குக் கடன் பெற்று இன்றைய தினமே இத்திட்டத்தின் வாயிலாகப் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி செயல்முறை தளம் (TN TReDS)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தாங்கள் விற்பனை செய்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்கானத் தொகையை மிகவும் காலதாமதமாகப் பெறும் சூழல் உள்ளது. இதற்குத் தீர்வு காணும் நோக்கோடு முதற்கட்டமாகச் சட்டப்பூர்வ வாரியங்கள், மாநிலத்தின் அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களை, ட்ரட்ஸ் (TReDS) எனப்படும் வர்த்தக வரவுகள், தள்ளுபடித் தளங்களின்கீழ்க் கொண்டுவரத் தேவையான மென்பொருள் உருவாக்கப்பட்டுத் தமிழ்நாடு வர்த்தக

வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளத்தினை (TN TReDS) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இத்தளத்தின் சிறப்பம்சமானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் விற்பனைப் பட்டியல்கள் (Sale Bills) மீதான கடன் அளிக்கும் வங்கிகளுக்கு 179 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பணம் பெறப்படவில்லை எனில் 180ஆவது நாள் தமிழ்நாடு அரசின் தாய்கோ வங்கி Auto debit முறையில் தொகையை வங்கிக்கு அளித்துவிடும்.

தமிழ்நாடு அரசின் இந்த உத்தரவாதத்தின் மூலம், மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களுக்குப் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தாங்கள் பொருட்கள் வழங்கியதற்கான பட்டியலை இத்தளத்தில் பதிவேற்றம் செய்யும்பொழுது,வங்கிகள் போட்டிப்போட்டுக்கொண்டு மிகக் குறைந்த வட்டியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கடன் அளிக்கும் வாய்ப்பு TN TReDS-னால் அதிகரிக்கும். இதனால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான 'நடைமுறை மூலதனக் கடன் தேவை' குறைந்திட வாய்ப்புள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் TN TReDS தளங்களுடனுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின்கீழ்ப் பதிவு செய்த முதல் மூன்று தொழில் முனைவோர்களுக்கு அவர்களுக்கான தள்ளுபடிக் கடன் தொகையினை வழங்கினார்.

FaMe TN

குறைந்த வட்டியில் பிணையில்லாக் கடன் பெறுதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஏற்றுமதிக்குத் தேவையான உதவிகளைச் செய்தல், விளம்பரப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், நவீனத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துதல், தொழிலாளர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல், வரி, தணிக்கை போன்றவற்றிற்கான வசதிகள் ஆகிய தேவைகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவிட M-TIPB (MSME-Trade and Investment Promotion Bureau) நிறுவனம் செயல்பட்டு வந்தது.

தொழில் முனைவோர்கள் தங்களது தொழிலில் முழுக்கவனத்தையும் செலுத்திடவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றிடவும் தமிழ்நாடு அரசால் "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற புதிய திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்த M-TIPB நிறுவனம் இன்று முதல் "FaMe TN" (Facilitating MSMEs of Tamil Nadu) என்ற புதிய பெயரில் செயல்படும்.

அனைவருக்கும் அனைத்தும் என்ற வகையில் சமச்சீரான ஒருங்கிணைந்த வளர்ச்சியினைக் குறிக்கும் விதமாக அமைந்துள்ள "FaMe TN" முன்னெடுப்பின் இலச்சினையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வெளியிட்டு, "தொழில் தொடங்குவது எப்படி" என்ற FaMe TN–இன் தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்களை வெளியிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இம்மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் குறு, சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், சிறு வணிகர்கள் இணைய வர்த்தகத் தளங்களின் வாயிலாக புதிய வாய்ப்புகளைப் பெறுவதற்கு, வழிகாட்டிடும் வகையில், FaMe-TN நிறுவனம் மற்றும் Open Network for Digital Commerce (ONDC) நிறுவனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும்:

FaMe-TN நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி பொருளாதார சட்டத்திற்குட்பட்டு இருக்கும் வகையில், வழிகாட்டுதல் பெற Institute of Chartered Accountants of India (ICAI) நிறுவனத்துடனும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வளர்ச்சியாக அமைந்திட World Resource Institute (WRI) நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டங்கள் அனைத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ்ச் செயல்படும் தொழில் ஆணையரகத்தின் வாயிலாகச் செயல்படுத்தப்படும்.

இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

கோயம்புத்தூர் மாவட்டம், சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கர் பரப்பளவில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.9.06 கோடி அரசு மானியத்துடன் கொசிமா (COSIMA) புதிய தனியார் தொழிற்பேட்டை.

சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் ரூ.24.55 கோடி திட்ட மதிப்பீட்டில் வெள்ளிக் கொலுசு தயாரிக்கும் குறுந்தொழில் முனைவோருக்காக தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 100 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி உற்பத்தி வளாகம், காட்சி மையம் மற்றும் பொது வசதி மையம்.

கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 510 தொழிலாளர்கள் தங்கும் விடுதி.

என மொத்தம், ரூ.64.68 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது வசதி மையத்தைத் திறந்துவைத்தார்.

திருப்பூர் மாவட்டம், நாரணபுரத்தில் ரூ.15.34 கோடி திட்ட மதிப்பீட்டில் பின்னலாடைத் தயாரிக்கும் குறுந்தொழில் முனைவோருக்காகப் பொது வசதி மையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (SIDCO) மூலம் செயல்படுத்தப்படும்.

முன்னதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தோள் கொடுப்போம் தொழில்களுக்குத்' திருப்பூர் மண்டல மாநாட்டையொட்டி பல்வேறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

“உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

விடுதலைப் போராட்ட காலத்திலும், திராவிட இயக்க வரலாற்றிலும் முக்கியத்துவம் பெற்றுள்ள இந்தத் திருப்பூர் நகரத்தில் இந்தச் சிறப்பான நிகழ்ச்சி குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படித் திருப்பூருக்குப் பல சிறப்புகள் உண்டு.

அப்படிப்பட்ட சிறப்புக்குரிய இந்தத் திருப்பூருக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் திருப்பூர் மாநகராட்சியாக உருவாக்கப்பட்டது. அந்த மாநகராட்சியை உருவாக்கித் தருவதற்காகச் சட்டமன்றத்தில் அறிவித்தது மட்டுமல்லாமல், இதே திருப்பூருக்கு நேரடியாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வருகை தந்து அந்த மாநகராட்சியை அவர்தான் தொடங்கிவைத்தார். நானும் அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தேன், காரணம், உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த நேரம். அந்த நிகழ்ச்சியிலேதான் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்கள், அரசியல்வாதிகள், பெரியோர்கள், தொழிலதிபர்கள் ஒரு கோரிக்கையை அழுத்தந்திருத்தமாக எடுத்து வைத்தார்கள், இதைத் தனி மாவட்டமாக உருவாக்கித் தரவேண்டும் என்று அதே மேடையில், திருப்பூர் மாநகராட்சியின் தொடக்கவிழா மேடையிலேயே இந்த மாவட்டம், திருப்பூர் மாவட்டமாக, தனி மாவட்டமாக உருவாக்கப்படும் என்ற அந்த அறிவிப்பையும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் அறிவித்தார்கள் என்பது வரலாறு. அப்படிப்பட்ட இந்த திருப்பூர், பல சிறப்புகளைப் பெற்றிருக்கக்கூடிய மாவட்டமாக இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் குறிப்பாக இந்த மாவட்டத்திற்கு இந்த ஒன்றேகால் ஆண்டு காலத்திற்குள்ளாக நான் நான்காவது முறை வந்திருக்கிறேன். இன்னும் வருவேன், வந்துகொண்டே இருப்பேன், அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

வந்தாரை வாழவைக்கக்கூடிய திருநகராக இந்த திருப்பூர் விளங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பது உங்களுக்குத் தெரியும்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய மூன்றும் முக்கியம் என்பார்கள். அதில் முக்கியமாக, உடுக்க உடை என்றால், அதில் திருப்பூர் இல்லாமல் இருக்க முடியாது. இந்தியாவின் பின்னலாடையின் தலைநகரமாக இருப்பது இந்த திருப்பூர். திருப்பூர் என்றாலே நமக்கு நினைவிற்கு வருவது பின்னலாடைதான். அந்தளவுக்குத் தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் பல்வேறு மாநில மக்களுக்கும் திருப்பூருக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு.

தொழிலதிபர்கள் வளரும் ஊராக மட்டுமல்லாமல், தொழிலாளி வளரும் ஊராகவும் திருப்பூர் அமைந்துள்ளது.

நேற்றைய தொழிலாளி - இன்றைய முதலாளி

இன்றைய தொழிலாளி - நாளைய முதலாளி என்பது திருப்பூருக்குப் பொருத்தமான சொற்களாக அமைந்திருக்கின்றன!

திருப்பூரில் இப்போது தொழிலதிபர்களாக உள்ள பெரும்பாலானோர் தொழிலாளர்களாக இருந்து தொழிலதிபர்களாக முன்னேறி வந்திருக்கக் கூடியவர்கள். அதை நினைக்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது, அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

- திருப்பூரின் மொத்த பின்னலாடை உற்பத்தி ஏறத்தாழ ரூ.60,000 கோடி. இதில் 50 விழுக்காட்டிற்கு மேல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- திருப்பூர் மாவட்டத்தில் 57,900 MSME நிறுவனங்கள் இயங்குகின்றன. இதில் எட்டு இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் பெண்கள்.

பின்னலாடை மட்டுமல்லாமல்,

- காங்கேயம், தாராபுரம் பகுதிகளில் அரிசி ஆலைகள்,
- வெள்ளக்கோவில், காங்கேயம் பகுதிகளில் சமையல் எண்ணெய்,
- ஊத்துக்குளியில் நெய்,
- காங்கேயம், தாராபுரம், உடுமலைபேட்டைப் பகுதிகளில் கயிறு மற்றும் கயிறு சார்ந்த பொருட்கள்,
- திருப்பூர், அவினாசி, பல்லடம் பகுதிகளில் அட்டைப்பெட்டி, விசைத்தறி மற்றும் தானியங்கி விசைத்தறி,
- திருமுருகன்பூண்டி, அவினாசி பகுதிகளில் கற்சிற்பம் மற்றும் வெட்கிரைண்டர் அரவைக் கற்கள்,
- பல்லடம், உடுமலை பகுதிகளில் கறிக்கோழி பண்ணைகள் மற்றும் கோழித்தீவன உற்பத்தி ஆலைகள்

எனப் பல்வேறு தொழில்களில் திருப்பூர் முன்னணியில் விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களின் மையமாகவே இந்தத் திருப்பூர் மாவட்டம் இருக்கிறது.

இது போன்றே மற்ற மாவட்டங்களும் மாற வேண்டும் என்று முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் ஆசைப்படுகிறேன்.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளரும்போது சிறு தொழில் முனைவோர் உருவாகிறார்கள். அதன்மூலம் பல இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கிறது. இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வு செழிக்கத் தொடங்குகிறது.

பெருந்தொழில்களை மட்டும் நம்பி இருக்காமல் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் ஊக்கமடைய வேண்டும் என்று தமிழக அரசு விரும்புகிறது. அதிக வேலைவாய்ப்பை உருவாக்குவதில், வேளாண்மைத் துறைக்கு அடுத்தபடியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முக்கிய பங்காற்றுகிறது. அதனால்தான் இதில் நாம் தனிக்கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

"தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற முழக்கத்தோடு MSME நிறுவனங்களின் முக்கியத் தேவைகளுக்கு உதவிகள் செய்து வருகிறோம். இத்தகைய தொழில்கள் சென்னையை அல்லது குறிப்பிட்ட மாநகரத்தை மையப்படுத்தி மட்டுமே அமைந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்.

அனைத்து மாவட்டங்களும் சீராக வளர வேண்டும் என்று நினைக்கும் தமிழ்நாடு அரசானது, தென்மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்களில் இத்தகைய முதலீட்டு மாநாடுகளை நாம் நடத்தி வருகிறோம்.

கடந்த 15 மாதத்திற்குள் தமிழ்நாடு அரசு நடத்திய முதலீட்டு மாநாடுகளின் மூலமாக 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அதன்மூலம் ரூ.2,20,727 கோடிக்கு முதலீடுகளை ஈர்த்து, 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ரூ.1,300 கோடி முதலீடு செய்திடப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள 49 MSME நிறுவனங்களும் இதில் அடங்கும். புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட

நிறுவனங்களில் 19 நிறுவனங்கள் ரூ.1,522 கோடி முதலீடு செய்து உற்பத்தியைத் தொடங்கி 1,909 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருக்கிறது.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் நான் நேரில் சென்று தொழில்முனைவோர்களை, தொழிலதிபர்களைச் சந்தித்து அவர்களின் தேவையை அறிந்துத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறேன். அந்த வகையில், நான் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்.

❖ இன்றைய நாள் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் என்னால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சொத்துப் பிணையில்லாக் கடன்களை எளிதாகப் பெறலாம். இணையதளம் மூலம் இத்திட்டம் இயங்கும். முதல்கட்டமாக ஆறு வங்கிகளை இணைப்போம். அடுத்த ஆண்டுக்குள் அனைத்து வங்கிகளும் இணைக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

❖ தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடிக்கான தளம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. உங்களது தயாரிப்புகளை விற்பனை செய்வதில் உள்ள சிரமங்கள், காலதாமதங்கள் ஆகியவற்றைக் குறைப்பதற்காக இது உருவாக்கப்பட்டிருக்கிறது. நடைமுறை மூலதனக் கடன் தேவையைக் குறைப்பதற்கு இது பயன்படும். அரசு தரும் உத்தரவாதம் காரணமாக வங்கிகள் போட்டிப் போட்டுக்கொண்டு, மிகக் குறைந்த வட்டியில் கடன்களை அளிப்பார்கள்.

❖ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான வங்கிக் கடனுக்கான சொத்துப் பிணையம் பத்திரப் பதிவு செய்திட ஆன்லைன் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சொத்தின் மீது கடன் பெற்றதைப் பதிவு செய்வதற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்லாமல் வங்கிகளிலிருந்தே ஆன்லைன் மூலமே உரியக் கட்டணம் செலுத்திப் பதிவு செய்திடும் வகையில், சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

❖ பட்டியலின, பழங்குடியின மக்களுக்கான ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பயனாளிகள் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது. தொழில் துறையில் சமூக நீதியை நிலைநாட்டும் பணியாக இதனை நாங்கள் நினைக்கிறோம்.

❖ வங்கிகள் மூலமாக எளிதில் கடன் கிடைக்க தாட்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இதன் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு 2,092 நிறுவனங்களுக்கு ரூ.2,113 கோடிக்கும் அதிகமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 99 விழுக்காடு MSME நிறுவனங்களுக்குத்தான் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன்தொகையைப் பொறுத்தமட்டில் 86 விழுக்காடு தொகை MSME நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மனைகள், குறைந்த விலையில் வழங்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழிற்பேட்டைகளில் மனைகளின் மதிப்பீட்டு விலை குறைக்கப்பட்டு இருப்பது எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

❖ கோவையில் சொலவம்பாளையம் கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை அமைக்க இன்று நான் அடிக்கல் நாட்டி இருக்கிறேன். 42.42 ஏக்கரில் இது அமைய இருக்கிறது.

❖ சிட்கோ மூலம் 5 மாவட்டங்களில் புதிய தொழிற்பேட்டைகள் 81.85 ஏக்கர் மொத்த பரப்பில் அமைய இருக்கின்றன.

❖ சென்னையில் அம்பத்தூர், கிண்டி தொழிற்பேட்டைகளில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் இரண்டு அடுக்கு மாடி தொழிற்கூடங்கள் அமைக்கப்பட உள்ளன.

“ ஹோம் டெக்ஸ்டைல்ஸ் எனப்படும் வீட்டு உபயோக ஜவுளிப் பொருட்கள் ஆண்டொன்றுக்கு ரூ.8,000 கோடிக்கு மேல் உற்பத்திச் செய்யப்பட்டு, அதில் ரூ.4,000 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த வகைப் பொருட்கள் தயாரிப்பைச் சிறப்பு வகைத் தொழில்கள் பிரிவில் சேர்த்து, MSME துறையின் மூலம் முதலீட்டு மானியம் வழங்க கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை ஏற்கப்படுகிறது. சிறப்பு வகைத் தொழில்கள் பிரிவில் சேர்க்கப்பட்டு, முதலீட்டு மானியம் வழங்கப்படும்.”

MSME நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகவும், இந்நிறுவனங்களின் போட்டியிடும் தன்மையை அதிகரிக்கவும், அரசு பெருங்குழுமத் திட்டம், குறுங்குழுமத் திட்டம் ஆகிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. பெருங்குழுமங்களுக்கானப் பொது வசதி மையங்கள் தலா ரூ.100 கோடி மதிப்பில் தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புத்தாக்க மற்றும் புத்தொழில் சார்ந்த முன்னெடுப்புகளிலும், தமிழ்நாடு சிறந்து விளங்க வேண்டும் என்ற அந்த நோக்கோடு சென்னை நந்தம்பாக்கத்தில் ஒரு இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் ரூ.75 கோடித் திட்ட மதிப்பீட்டில் மாநிலப் புத்தொழில் மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறுந்தொழில் நிறுவனங்களைக்கொண்ட பல்வேறு குழுமங்களை அமைக்க முடிவெடுத்திருக்கிறோம்.

❖ திருப்பூர் மாவட்டம், நாரணபுரத்தில் ரூ.15.34 கோடித் திட்ட மதிப்பில் பின்னலாடைத் தயாரிக்கும் குறுந்தொழில் முனைவோருக்காகப் பொது வசதி மையம் அமைக்கப்பட்டுத் தொழில் முனைவோர்களின் உபயோகத்திற்காக என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

❖ சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் ரூ.24.55 கோடி திட்ட மதிப்பில் வெள்ளிக் கொலுசு தயாரிக்கும் குறுந்தொழில் முனைவோருக்காகத் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களில் 100 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி உற்பத்தி வளாகம், காட்சி மையம் மற்றும் பொது வசதி மையம் அமைப்பதற்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

❖ ஈரோட்டில், மஞ்சள்தூள் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமம்,

❖ ஈரோடு மாவட்டம், பவானியில் ஜமுக்காளம் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமம்,

❖ கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் முந்திரி பதப்படுத்தும் குழுமம்,

❖ காஞ்சிபுரத்தில் நரிக்குறவர் பாசிமணிக் குழுமம்,

❖ விருதுநகர் தளவாய்புரத்தில் மகளிர் நெசவுக் குழுமம்,

❖ கோயம்புத்தூரில், அலுமினியம் டை காஸ்டிங் குழுமம்,

❖ மதுரையில், பொம்மைக் குழுமம்,

❖ தூத்துக்குடியில், ஆகாயத்தாமரை கைவினைப் பொருட்கள் குழுமம் ஆகிய குழுமங்களுக்குப் பொது வசதி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில் வளர்ச்சியுடன் இத்தொழில்களுக்குத் தேவையான பணியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கும் பணியையும் செய்து வருகிறோம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், இளைஞர்கள் படிப்பில் மட்டுமின்றி அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக்கொண்டு, வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான 'நான் முதல்வன்' என்ற திறன் மேம்பாடு மற்றும் வழிகாட்டுதல் திட்டம் மாநிலம் முழுவதும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தற்போதைய நான்காம் தொழில் புரட்சிக் காலத்தில் புதியத் தொழில்நுட்பங்களை நாம் பயன்படுத்தியாக வேண்டும். அதற்கு வழிகாட்டப் பன்னாட்டு நிறுவனங்களுடன் தமிழக அரசு கைகோர்த்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் ஒரு ஏற்றுமதி வழிகாட்டி மையம் விரைவில் தொடங்கப்படும்.

MSME நிறுவனங்கள், திறன் வாய்ந்த பொருளாதார முன்னேற்றங்களை அடைவதற்கு அடித்தளமாகச் செயல்பட்டு, அந்நிறுவனங்களைச் சர்வதேச அரங்கில் வெற்றிபெறச் செய்யும் நோக்கத்தோடு எம்-டிப் அமைப்பினை Re-branding செய்யவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஃபேம் டி.என் (FaMe-TN) (Facilitating MSMEs of Tamil Nadu) என Re-branding செய்யப்பட்டுள்ளது.

ONDC (Open Network for Digital Commerce) எனப்படுகின்ற திறந்த வலைப்பின்னல் இணைய வர்த்தகத் தளம் பற்றி உங்களுக்குத் தெரியும். இந்த ONDC தளத்தில் தமிழ்நாட்டிலுள்ள MSME நிறுவனங்கள் இணைந்திட வழிகாட்டிடும் வகையில் FaMe-TN நிறுவனமும் ONDC நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. இதனை நமது MSME நிறுவனங்கள் பயன்படுத்திப் பயனடைய வேண்டும் என நான் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒற்றைச் சாளர இணையதளம் 2.0வை நான் கடந்த ஆண்டு ஜூலை மாதம் தொடங்கிவைத்தேன். அதில் இதுவரை, MSME நிறுவனங்களிடமிருந்து 10,555 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 9,212 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது மொத்த விண்ணப்பங்களில் 87 விழுக்காடு என்பதைப் பெருமையோடு நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் பகுதிகளில் கயிறு மற்றும் கயிறு சார்ந்தத் தொழில்கள் ஒரு முக்கிய பொருளாதார முன்னேற்றத்திற்கானத் தொழிலாக விளங்குகிறது. தமிழகம் முழுவதும் கயிறு குழுமங்கள் உருவாக்கிக் கயிறுத் தொழிலை மேம்படுத்துவதன் மூலம், தொழில்முனைவோர்கள் மட்டுமல்லாமல், தென்னை விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற அந்த நோக்கோடு தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகத்தை நான் திறந்துவைத்திருக்கிறேன்.

மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றை இங்கு வெளியிடலாம் என நினைக்கிறேன்.

ஹோம் டெக்ஸ்டைல்ஸ் எனப்படும் வீட்டு உபயோக ஜவுளிப் பொருட்கள் ஆண்டொன்றுக்கு ரூ.8,000 கோடிக்கு மேல் உற்பத்திச் செய்யப்பட்டு, அதில் ரூ.4,000 கோடி அளவுக்கு ஏற்றுமதி

> **“தற்போதைய நான்காம் தொழில் புரட்சிக் காலத்தில் புதியத் தொழில்நுட்பங்களை நாம் பயன்படுத்தியாக வேண்டும். அதற்கு வழிகாட்டப் பன்னாட்டு நிறுவனங்களுடன் தமிழக அரசு கைகோர்த்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் ஒரு ஏற்றுமதி வழிகாட்டி மையம் விரைவில் தொடங்கப்படும்.”**

செய்யப்படுகிறது. இந்தவகைப் பொருட்கள் தயாரிப்பைச் சிறப்பு வகைத் தொழில்கள் (Thrust Sector) பிரிவில் சேர்த்து, MSME துறையின் மூலம் முதலீட்டு மானியம் வழங்க கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை ஏற்கப்படுகிறது. சிறப்பு வகைத் தொழில்கள் (Thrust Sector) பிரிவில் சேர்க்கப்பட்டு, முதலீட்டு மானியம் வழங்கப்படும் என அறிவிக்கிறேன்.

இதனால் பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள் பயன்பெறும். இதன்மூலமாக இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள். இதுபோன்ற ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் எதுவாக இருந்தாலும் அதற்குச் செவிமடுக்க இந்த அரசு எப்போதும், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் தயாராக இருக்கிறது.

உங்களுக்குத் தேவையான வசதிகளை உருவாக்கித் தருவதற்காகவே நாங்கள் இருக்கிறோம். நாங்கள் இத்தகையப் பொறுப்பை வகிக்கிறோம். புதியப் புதியத் தொழில்களை அறிமுகம் செய்யுங்கள். இருக்கும் தொழில்களை வளப்படுத்திக் கொள்ளுங்கள். ஏராளமானத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக் கொடுங்கள்.

அதன்மூலமாக உங்கள் வட்டாரத்தின் சமூக, பொருளாதாரச் சூழலை வளர்த்தெடுங்கள்.

இவை அனைத்தும் சேர்ந்து மாநிலத்தையும், ஒட்டுமொத்தமாக இந்திய நாட்டையும் அது நிச்சயமாக வளர்க்கும், அந்த நம்பிக்கையோடு உங்களிடமிருந்து நான் விடைபெறுகிறேன்”.

அத்திக்கடவு – அவிநாசித் திட்டத்தின் எம்மாம்பூண்டி நீர் உந்து நிலையத்தில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.08.2022 அன்று அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின்கீழ், ஈரோடு மாவட்டம், பெருந்துறை, கிரே நகரில் அமைக்கப்பட்டுள்ள எம்மாம்பூண்டி நீர் உந்து நிலையத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அத்திக்கடவு - அவிநாசித் திட்டமானது கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்ப்புறத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 1.50 டி.எம்.சி. உபரிநீரை நீரேற்று முறையில் நிலத்தடியில் குழாய்ப் பதிப்பின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் மொத்தம் 24,468 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 32 பொதுப்பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள், 971 குளம் குட்டைகள் நீர் நிரப்பும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ரூ.1,652 கோடி மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. பின்னர் ரூ.1,756.88 கோடி மதிப்பீட்டில் திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை, பவானி, நல்லக்கவுண்டம்பாளையம், திருவாச்சி, போலநாயக்கன்பாளையம், எம்மாம்பூண்டி, அன்னூர் ஆகிய ஆறு நீர் உந்து நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் எதிர்வரும் டிசம்பர் 2022க்குள் முடிக்கப்பட்டுப் பரிசோதனை ஓட்டம் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, இப்பணிகளை விரைந்து முடித்திட நீர்வளத்துறையைச் சேர்ந்தப் பொறியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார் (26.08.2022)

ஈரோடு மாவட்டத்தை, எல்லாவற்றிலும் முதன்மை மாவட்டமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை (26.08.2021)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.08.2022 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.262 கோடி செலவில் 135 முடிவுற்றத் திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்து, ரூ.184 கோடி மதிப்பீட்டிலான 1,761 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 63,858 பயனாளிகளுக்கு ரூ.167.51 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஈரோட்டில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.19.46 கோடி செலவில் பவானி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், கோபிச்செட்டிப்பாளையம், பெருந்துறை பகுதிகளில் 3 மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடங்கள் உள்ளிட்ட 100 பணிகள்;

நிதித்துறையின் சார்பில் கொடுமுடியில் ரூ.1.07 கோடி செலவில் சார்நிலை கருவூலக் கட்டடம், கைத்தறித் துறையின் சார்பில் ரூ.47 இலட்சம் செலவில் சென்னிமலை, சென்குமார் தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தைப் புதுப்பித்துக் காட்சியறையுடன் கூடியச் சில்லறை விற்பனை நிலையம் மற்றும் சரக்கு இருப்பு கிடங்கு, வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் சார்பில் ரூ.1.01 கோடி செலவில் புஞ்சை புளியம்பட்டியில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்;

ஈரோடு மாநகராட்சியின் சார்பில் ரூ.99.55 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஜவுளி வணிக வளாகக் கட்டடம், புதிய வணிக வளாகக் கட்டடம், பசுமைக் கட்டடம் மற்றும் பூங்கா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.113.99 கோடிச் செலவில் வாரச்சந்தை மேம்பாடு, பேருந்து நிலைய மேம்பாடு, குடிநீர் விநியோக மேம்பாடு, நகர் நல மையம், கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பில் ரூ.11.73 கோடிச் செலவில் பெருந்தலையூர் மேவாணி - தாழைக்கொம்புதூர் சாலையில் சிறுபாலம், அந்தியூர்-நம்பியூர் சாலையில், சுண்டக்காம்பாளையத்தில் சிறுபாலம், புளியம்பட்டி - பவானிசாகர் - பண்ணாரி சாலையில் பவானி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் ரூ.50 இலட்சம் செலவில் ஈரோடு கிழக்கு, வாணிப்புத்தூர், சிவகிரி ஆகிய இடங்களில் குறுவட்ட அளவர் குடியிருப்புகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ரூ.1.73 கோடிச் செலவில் ஊஞ்சலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வகம், கழிவறை, குடிநீர் இணைப்பு வசதி, சுற்றுச்சுவர், கூடுதல் வகுப்பறைகள், கவுந்தபாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வகக் கட்டடம்;

கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் ரூ.1.20 கோடி செலவில் பெத்தாம்பாளையம், கஸ்பாபேட்டை, செம்மாம்பாளையம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.2.66 கோடிச் செலவில் ஓங்கல்வாடியில் ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம், துணைச் செவிலியர் தங்கும் விடுதி மற்றும் கிராமப்புற சுகாதார பயிற்சி மையக் கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் ரூ.3.41 கோடிச் செலவில் 4 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், தாளவாடியில் உழவர் சந்தை, அந்தியூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பர்கூரில் 2 சேமிப்புக் கிடங்குகள்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் ரூ.4.70 கோடிச் செலவில் ஊராட்சிக்கோட்டை துணை மின்நிலையத்தில் மின்மாற்றித் தரம் உயர்த்துதல் மற்றும் எம்மாம்பூண்டிப் பகுதியில் புதிய மின்மாற்றி;

கூட்டுறவுத்துறை சார்பில் ரூ.9 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் சிவகிரி கிளை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ATM அறை;

என மொத்தம், ரூ.262 கோடி மதிப்பீட்டிலான 135 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

மேலும், இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.103.44 கோடி மதிப்பீட்டில் பவானிசாகரில் இலங்கைத் தமிழர்களுக்கான 420 தொகுப்பு வீடுகள், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப்பணிகள் உள்ளிட்ட 1,748 பணிகள், பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் தேவர்மலை தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கைக்கோளபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 2 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் கொமாரபாளையம் அரசு அண்ணா மருத்துவமனை மற்றும் சென்னிமலை ஆரம்பச் சுகாதார நிலைய வளாகத்தில் கட்டப்படவுள்ள சித்தா பிரிவுக் கட்டடங்கள், எழுமாத்தூர் ஆரம்பச் சுகாதார நிலைய வளாகத்தில் இந்தியச் சித்தா மருத்துவச் சேவை, யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கான கூடுதல் கட்டடம்;

ஈரோடு மாநகராட்சியின் சார்பில் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் சோலார் பகுதியில் புதிய பேருந்து நிலையம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் மற்றும் உள்நோயாளிகளின் உறவினர்கள் தங்குமிடம்;

வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் சார்பில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் கோபிச்செட்டிப்பாளையத்தில் வணிகவரித்துறை அலுவலகக் கட்டடம், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ரூ.5.16 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மற்றும் கோபிச்செட்டிபாளையத்தில் கால்நடை பன்முக மருத்துவமனை கட்டடங்கள், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் பணிமனை மற்றும் ஆய்வகக் கட்டடம்;

என மொத்தம், ரூ.184 கோடி மதிப்பீட்டிலான 1,761 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்குத் தென்னங்கன்றுகள், நெல், பயறு விதைகள், பேட்டரியில் இயங்கும் விசை தெளிப்பான்கள், நேரடி நெல் விதைப்புக் கருவிகள் வழங்குதல், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்குதல், மீன்வளத்துறையின் சார்பில் பயனாளிகளுக்குக் குளிர்காப்புப் பெட்டியுடன் கூடிய இருசக்கர வாகனங்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் திட்டத்தின்கீழ் நிதியுதவி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் பயனாளிகளுக்குப் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகை, விதவை உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, மகளிர் திட்டத்தின்கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நிதியுதவி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சிறப்புச் சக்கர நாற்காலி, தையல் இயந்திரம், காதொலிக் கருவி, திறன்பேசி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பயனாளிகளுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகள், தாட்கோ சார்பில் தொழில் முனைவோர் திட்ட மானிய நிதி எனப் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 63,858 பயனாளிகளுக்கு ரூ.167.51 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை,

“உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மூன்று நாள் பயணமாக, மேற்கு மண்டலத்திற்கு வந்துள்ள நான் ஈரோடு மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். ஈரோடு என்பது, தமிழர்களாகிய நமது உயிரோடு கலந்திருக்கக்கூடிய ஊர். இதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை.

நேற்றைய நாள் கள்ளிப்பட்டியில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தேன்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில், தற்போது இந்த மாபெரும் நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கிறேன். பெருந்துறை என்பது பல்வேறு வரலாற்றுப் பெருமை கொண்ட ஊர்! பெருந்துறை அருகே, திங்களூரில் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் தமிழ்ச்சங்கம் இருந்ததாக ஒரு செப்பேடு சொல்கிறது. சேரனைச் சோழன் வென்ற இடம், இந்தப் பெருந்துறை.

சிறை வைக்கப்பட்ட சேரனை மீட்கப் புலவர் பாடியதுதான் களவழி நாற்பது என்ற நற்றமிழ் நூல்!

யானைப் போர்களை நினைவூட்டும் கோட்டை - கோவில்கள் இருக்கக்கூடிய பகுதி இந்தப் பகுதி.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியில் இந்த அரசு விழா மிகப்பிரமாண்டமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முத்துசாமி அவர்கள், மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் பணியாற்றியவர். நம்முடைய அருமைச் சகோதரர் முத்துசாமி அவர்களைப்போல, அமைதியாகப் பணியாற்ற யாராலும் முடியாது. சிலர் செய்யும் பணி, அதிக பரபரப்பாக இருக்கும், ஆர்ப்பாட்டமாக இருக்கும், ”என்னைப் போல பணியாற்ற முடியுமா?” என்று கேட்பதைப்போல இருக்கும்.

ஆனால் சிலர் செய்யும் பணி அமைதியாக, அடக்கமாக, ஆர்ப்பாட்டமில்லாமல் இருக்கும். அந்த வரிசையில் மிகமுக்கியமானவராக நம்முடைய சகோதரர் முத்துசாமி அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார். இன்றைய இளைய தலைமுறையினர் அவரிடம் இருந்து இதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

என்னுடைய வாழ்க்கையில் மிக முக்கியமானது, இதே ஈரோட்டில், இதே இடத்தில் நடந்த மண்டல மாநாடு. அந்த மாநாட்டை, மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியவர் நம்முடைய மாண்புமிகு முத்துசாமி அவர்கள். அவருடைய சீரிய முயற்சியால், இந்த அரசு விழாவும், அந்த மாநாட்டைத்தான் இப்போது எனக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. அவ்வளவு பெரிய கூட்டம், அவ்வளவு பெரிய எழுச்சி. இதற்குக் காரணமாக விளங்கக்கூடிய நம்முடைய அமைச்சர் முத்துசாமி அவர்களுக்கும், அதேபோல நம்முடைய மாவட்டத்தினுடைய ஆட்சியருக்கும், அவருக்குத் துணைநின்று பணியாற்றியிருக்கக்கூடிய அனைத்து அதிகாரிகள், அரசு அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் ஒவ்வொரு துறை சார்பிலும் ஏராளமானத் திட்டப்பணிகள் ஈரோடு மாவட்டத்திற்குச் செய்து தரப்பட்டுள்ளன.

❖ பெருந்துறை அரசு மருத்துவமனையில் 761 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

❖ 20 ஆண்டு கோரிக்கையான, ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்டுள்ளது.

❖ ஈரோடு மாநகராட்சியில் இரண்டு பேருந்து நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பணிகள் தொடங்கி இருக்கின்றன.

❖ அந்தியூர், பர்கூர் ஊராட்சி மலைப்பகுதி கிராமங்களில் சாலை வசதி அமைக்கப்பட்டு வருகிறது.

❖ அம்மாபேட்டை, வெள்ளித் திருப்பூர் ஊராட்சியில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

❖ அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ அதேபோல், அ.தி.மு.க. ஆட்சியில், கிடப்பில் போடப்பட்ட ரூ.1,600 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட உள்ளது.

❖ பெருந்துறை பகுதிக்கு, ரூ.765 கோடி மதிப்பீட்டிலான கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் கிடந்தது. அதனையும் நாம் செயல்படுத்த இருக்கிறோம்.

அதன் தொடர்ச்சியாகத்தான், இந்தப் பிரமாண்டமான அரசு விழா இப்போது நடைபெற்று வருகிறது.

1,761 புதிய திட்டப்பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ.184 கோடி.

❖ 135 முடிவுற்ற பணிகளை நான் இந்த விழாவில் துவக்கிவைத்திருக்கிறேன். இதன் மொத்த மதிப்பு ரூ.262 கோடி.

❖ 63,858 பயனாளிகளுக்கு, ரூ.167.51 கோடி மதிப்பீட்டில், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்பட இருக்கின்றன.

ஆக, மூன்றும் இணைந்த, முப்பெரும் விழாவாக இந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டாரம் - பர்கூர் ஊராட்சியிலுள்ள, மடம், கல்வாரை, பெஜலட்டி, எப்பத்தாம்பாளையம் மற்றும் தேவர்மலை பகுதியிலுள்ள மலைவாழ் மக்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக நபார்டு - கனிமம் மற்றும் சுரங்கங்கள் திட்டங்களின்கீழ்த் தொலைதூரக் கல்வி (Smart Study Center) மற்றும் தொலைதூர மருத்துவச் சேவையினை (Telemedicine) இணையதளம் வழியாக வழங்கிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் அவர்களது குடும்பத்தினர் மூலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் தொழிற்குழு உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட மாவட்ட நிருவாகத்தின் மூலமாக “ஆற்றல் ஈரோடு” என்ற பிரத்தியேகச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை இணையதளத்தின் செயல்பாடு இன்றைய தினம் தொடங்கிவைக்கப்பட்டிருக்கிறது.

❖ நான் பொள்ளாச்சி போகும்போது, அங்கிருந்த விவசாயிகள் என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். அதனைப்பற்றி, நான் வேளாண் துறையில் கேட்டபோது, கொப்பரை கொள்முதல் செய்வதற்குத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், கோவை, திருப்பூர், தஞ்சை, திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களில் 6 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்குக் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு இலக்கு நிருணயிக்கப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரிவித்தார்கள். இங்கு நேற்று வந்தவுடன், மாவட்ட மக்களுடைய கோரிக்கைகளை நான் அதிகாரிகளிடத்தில் அதுகுறித்துக் கேட்டறிந்தேன். அதனையொட்டி, சில அறிவிப்புக்களை நான் வெளியிட விரும்புகிறேன்.

ஈரோடு வெளிவட்டச் சுற்றுச் சாலை, தற்போது நாமக்கல் மாவட்டம், கொக்கராயன்பேட்டையில் தொடங்கி, ஈரோடு மாவட்டம், ஈரோடு - பெருந்துறை - காங்கேயம் சாலை வரை 14 கிலோ மீட்டருக்கு அமைக்கப்பட்டுள்ளது.

இச்சாலையின் தொடர்ச்சியாக, மாநில நெடுஞ்சாலையான ஈரோடு - திங்களூர் சாலையைக் கடந்து, ஊட்டி - கோத்தகிரி - மேட்டுப்பாளையம் - சத்தி - கோபி - ஈரோடு சாலை வரை நீட்டித்து அமைத்தலுக்கான விரிவான திட்ட அறிக்கை, ரூ.60 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி - உழவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை நமது அரசு எடுத்து வருகிறது. தற்போது ஈரோடு மாவட்டத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பாக ரூ.16.82 கோடிச் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அவற்றையும் இங்கே அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஈரோட்டில் ரூ.2 கோடிச் செலவில், குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

நல்லாம்பட்டியிலும் ரூ.2 கோடிச் செலவில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

தாளவாடியிலும் ரூ.2.82 கோடிச் செலவில், குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

மஞ்சள் உற்பத்தி செய்யும் உழவர்களின் நலனுக்காக, ரூ.10 கோடிச் செலவில், மஞ்சள் ஏற்றுமதி மையம் தரம் உயர்த்தப்படும்.

அதேபோன்று, தாளவாடி மக்களின் கோரிக்கையாக, அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் 24 மணிநேர அவசர சிகிச்சை மையம் ஏற்படுத்தப்படும். மேலும், அந்த ஆரம்பச் சுகாதார

நிலையத்தில் எக்ஸ்ரே கருவியும் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கூட்டத்தின் மூலமாக நான் உங்களுக்கு உறுதி அளிப்பது, ஈரோடு மாவட்டத்தை, எல்லாவற்றிலும் முதன்மை மாவட்டமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வோம் என்பதுதான்.

இங்கு வருவதற்கு முன்னால், அத்திக்கடவு-அவினாசி திட்டப் பணிகளை நான் பார்வையிட்டேன். அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் என்னோடு வந்தார்கள். அதைப் பார்வையிட்டு விட்டுத்தான் இந்த மேடைக்கு, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

அந்த அரசுப் பணிகளை உடனடியாக துரிதமாக நிறைவேற்றச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, அலுவலர்களுக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன். நிச்சயம், உறுதியாக, விரைவில், இன்னும் சில மாதங்களில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, நானே நேரடியாக வந்து அதைத் தொடங்கிவைப்பேன் என்ற அந்த உறுதியை இன்றைக்கு உங்கள் அனைவருக்கும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைக்கு முந்தைய நாள், கோவை மாவட்டத்தில் இதேபோன்ற ஒரு அரசு விழாவில் கலந்துகொண்டேன். அங்கும் இதேபோல் பல்வேறு பணிகளைத் துவக்கி வைத்தேன், அடிக்கல் நாட்டினேன்.

இத்தகைய அரசு விழாக்கள் பொழுதுபோக்குக்காக நடைபெறுகிற விழாக்கள் அல்ல, ஏதோ எங்களைப் புகழக்கூடிய விழாக்கள் அல்ல! மக்களுக்கு நாங்கள் என்ன செய்யப் போகிறோம் - என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லக்கூடிய விழாதான்.

இதுபோன்ற மக்கள் மன்றமாக இருந்தாலும் சரி, சட்டமன்றமாக இருந்தாலும் சரி, என்னைப் பாராட்டிப் பேசுவதைவிட மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி அனைவரும் பேச வேண்டும் என்று விரும்புகிறவன் நான். புதிய புகழ்மொழிகள் எனக்குத் தேவையில்லை, இருக்கும் புகழே போதும் என்று நினைக்கக்கூடியவன் நான்.

'ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு' என்று உழைப்பின் சிகரமாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டிச் சொன்னதைவிட எனக்கு வேறு ஏதேனும் பாராட்டு வேறு இருக்க முடியுமா? 'நீ உன் அப்பாவைப் போலவே இருக்கிறாய்!' என்று பேரறிஞர் அண்ணா சொன்னதைவிட வேறு பாராட்டு எனக்கு இருக்கவே முடியாது. இத்தகைய பாராட்டுகளின் மூலமாக அடைந்த உற்சாகத்தால்தான் நான் உழைத்துக் கொண்டு இருக்கிறேன், இன்னும் உழைப்பேன், என் உயிர் இருக்கிற வரையில் உழைத்துக்கொண்டே இருப்பேன். இது உறுதி.

என்னுடைய இலக்கு அதுதான்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய இலக்கு.

அனைத்துத் துறை வளர்ச்சி,

அனைத்து மாவட்ட வளர்ச்சி,

அனைத்துத் தரப்பு மக்களின் வளர்ச்சி,

அனைத்துச் சமூக வளர்ச்சி,

ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிட மாடல் இலக்கணப்படி ஆட்சி இன்றைக்கு நடந்துகொண்டு இருக்கிறது.

மூன்று நாள் பயணமாக, இந்த மேற்கு மண்டலத்திற்கு நான் புறப்படுவதற்கு முன்பு, இரண்டு வெற்றிச் செய்திகள் எனக்கு வந்து சேர்ந்தன. அவை என்னவென்று கேட்டீர்களானால்,

❖ இருபது ஆண்டுகள் இல்லாத அளவுக்கு, தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி புதிய உச்சத்தைத் தொட்டுச் சாதனை படைத்திருக்கிறது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப் பெரிய சாதனை.

மக்களைக் காக்கக்கூடிய அரசாக மட்டுமல்ல, மண்ணைக் காக்கக்கூடிய அரசாகவும் இது செயல்படுகிறது.

இத்தகைய விளைச்சல் மூலமாக என்ன தெரிகிறது? கழக ஆட்சி அமைந்ததும் எடுக்கப்பட்ட துல்லியமான நடவடிக்கையின் காரணமாக, கடந்த ஆண்டு 1.04 கோடி மெட்ரிக் டன் ஆக நெல் உற்பத்தி உயர்ந்தது. இந்த ஆண்டு, அதையும் விஞ்சி 1.22 கோடி மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. அதாவது 18 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதலாக உற்பத்தி செய்திருக்கிறோம். அதேபோல், நெல் உற்பத்தி பாசனப் பரப்பும் அதிகமாகி இருக்கிறது.

இந்தச் சாதனையானது சாதாரணமாக நடந்துவிடவில்லை.

தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, வேளாண்துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். 50 விழுக்காடு மானியத்தில் பாரம்பரிய விதை நெல்கள் வழங்கப்பட்டன.

நேற்று நான் கோபிச்செட்டிப்பாளையம் சென்றிருந்தபோது, விவசாயிகள் அந்த நெல்மணிகளைக் கொடுத்து நீங்கள் அறிவித்த திட்டத்தால், விளைந்தது என்று சொன்னார்கள். மகிழ்ச்சியோடு, சிரித்துக்கொண்டே சொன்னார்கள். நன்றி, நன்றி, நன்றி என்று சொன்னார்கள். இதைவிட மகிழ்ச்சி என்ன இருக்கமுடியும்.

அதுமட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களில், சம்பா மற்றும் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

குறுவை சாகுபடிக்காக, மேட்டூர் அணையிலிருந்து முன்கூட்டியே தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

கடைமடை வரைக்கும் தண்ணீர் செல்வதற்கு உரிய வாய்ப்பாக, கால்வாய்கள் முறையாக தூர்வாரப்பட்டது.

இவை அனைத்தும் சேர்ந்துதான் இத்தகைய மகத்தான சாதனைக்கு அடித்தளம் அமைத்தது.

நெல் சாகுபடி அதிகம் ஆவது என்பது தமிழ்நாட்டின் வளத்தைக் காட்டுவதாக இருக்கிறது. தமிழ்நாட்டின் வளத்தை மேலும் வளப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

இன்னொரு முக்கியமான வெற்றி செய்தி என்னவென்று கேட்டால், இங்கே கூட திரு. கணேசமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, கோட்டிட்டுக் காட்டினார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமூகநீதி எண்ணத்திற்குச் சென்னை உயர்நீதிமன்றம் சட்டப்பூர்வமான அங்கீகாரம் கொடுத்துவிட்டது.

ஆலயங்களில் அர்ச்சகராக நியமிக்கப்படுபவர்கள் அதற்கான உரியப் பயிற்சி பெற்றிருந்தால் போதும் அதுதான் நம்முடைய கருத்து. இதில் சாதி என்பது ஒரு அளவுகோலாக இருக்கக்கூடாது.

இத்தகைய சமூகநீதியைக் காக்கக்கூடிய அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்று சிலர் நீதிமன்றம் போனார்கள், வழக்கு தாக்கல் செய்தார்கள். அதற்குத் தடைபோடச் சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது, திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

தந்தைப் பெரியாரும், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும் இன்றைக்கு இருந்திருந்தால், எப்படியெல்லாம் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். ஆக, இது நமது கொள்கைக்குக் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி!

வேளாண் உற்பத்தியாக இருந்தாலும் சரி, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதனாலும் சரி, அனைத்திலும் தொலை நோக்கத்தோடு, நாம், முடிவெடுத்துச் செயல்படுவதன் காரணத்தால்தான் இத்தகைய வெற்றி சாத்தியம் ஆனது.

ஆகவே, அனைவரும் பாராட்டக்கூடிய அரசாக இந்த அரசு இருக்கிறது. அது மட்டுமல்ல, அனைவருக்கும் வழிகாட்டக்கூடிய அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திராவிட மாடல் அரசானது இன்று இந்தியாவுக்கே வழிகாட்டும் அரசாக இருக்கிறது.

மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி இது போன்ற பல்வேறு திட்டங்களை, பல்வேறு மாநிலத்தவரும் பின்பற்றக்கூடிய அளவிற்கு இன்றைக்குச் சூழல் உருவாகி இருக்கிறது. ஏற்கெனவே, நமது இட ஒதுக்கீடு என்ற சமூகநீதித் தத்துவத்தைத்தான் பல்வேறு மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன.

மாநில சுயாட்சி என்கிற தத்துவம் என்பதும் திராவிட இயக்கம் கொடுத்த கொடைதான்.

கடந்த ஐம்பது ஆண்டுக்கால தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சிந்தனையில் உதித்த மகத்தான திட்டங்களின் மூலமாக அடைந்த வளர்ச்சிதான்.

பள்ளிக்கல்வியை முடித்து உயர்கல்வியில் சேரக்கூடியவர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம், அதுவும் பெண்கள்தான் அதிகம்.

இந்தியாவிலேயே கல்வி நிறுவனங்களில் தலைசிறந்தது எந்த மாநிலம் என்று கேட்டால் அதுவும் நம்முடைய தமிழ்நாடுதான்.

இந்தியாவிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தி அதாவது ஜிடிபி, மகாராஷ்டிராவை விட அடுத்தது நம்முடைய தமிழ்நாட்டில்தான்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின, பழங்குடி மக்களின் முன்னேற்றம் என்பதும் மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாட்டில்தான் அதிகம்.

பெண்களின் சமூகப் பாதுகாப்பும் தமிழ்நாட்டில்தான் அதிகம். பெண் தொழில்முனைவோர் இங்குதான் அதிகம். தனிநபர் வருமானம் தமிழ்நாட்டில்தான் அதிகம். மனிதவளக் குறியீடுகள் இங்குதான் அதிகம். வறுமை குறைவு. சிசு மரணம் குறைவு. பட்டினிச் சாவுகள் இல்லை.

இவைதான் திராவிட மாடல் ஆட்சியினுடைய வளர்ச்சி.

யாரோ ஒரு சில தொழிலதிபர்கள் மட்டும் வளர்வது அல்ல வளர்ச்சி.

அனைத்துத் தொழில்களும், அனைத்துத் தொழில்முனைவோரும், அனைத்து மாவட்டமும், அனைத்துச் சமூகமும் சேர்ந்து வளர்வதுதான் வளர்ச்சி.

இதுதான் தந்தைப் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் காணவிரும்பிய வளர்ச்சி.

அத்தகைய திட்டங்களைத்தான் தினந்தோறும் தீட்டி வருகிறோம். அதற்காகவே, நித்தமும் உழைத்து வருகிறேன். முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களில் ஒருவனாக இருந்து நான் செயலாற்றி வருகிறேன்.

ஊருக்கு உழைப்பதை, உங்களுக்கு உழைப்பதை என் வாழ்நாள் கடமையாகக் கருதி உழைத்து வருகிறேன். அழுத்தமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன். நான் வாழ்ந்த காலத்தில் தமிழ்சமுதாயத்தை வளமும், நலமும் பெற்ற சமுதாயமாக, தமிழ்நாட்டை வளமும் நலமும் கொண்டிருக்கக்கூடிய மாநிலமாக மாற்றிக் காட்டினேன் என்று பெயரெடுப்பதற்காகவே நான் உழைத்து வருகிறேன்.

கோட்டையிலிருந்தாலும், மக்களின் மனங்களில் வாழ்வதையே பெரும் பேறாகக் கருதக்கூடியவன் நான்.

எனவே, உங்கள் அனைவரின் ஆதரவோடு, என் இலக்கை நோக்கி நான் நடைபோடுகிறேன்!

உங்கள் துணையோடு நிச்சயம் நான் வெற்றி பெறுவேன்! வெற்றி பெறுவேன்! வெற்றி பெறுவேன்! என்று கூறி விடைபெறுகிறேன்.

அக்டோபர் 1 : நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பிறந்தநாள்

நட்புக் காவியம்

"என்னைவிட வயதில் இளைய நடிகர் திலகம் மறைந்து விட்டார். நான் இருக்கிறேன். அவருக்காகக் கண்ணீர் விட! காலத்தால் எழுதப்பட்ட எத்தனையோ நட்புக் காவியங்கள், இறவா சரித்திரங்களாக இந்த உலகத்திலே இருக்கின்றன. ஆனால், எங்களுடைய நட்புக் காவியம் அவைகளையெல்லாம்விட மேலானது, உயர்ந்தது, உணர்ச்சி மிக்கது.

இப்படி ஏதோ நண்பர்களாக இருந்தோம், கலையுலகத்தில் இணைந்து தொண்டாற்றினோம் என்று இல்லாமல் எங்கள் குடும்பத்திலே ஒருவராக அவரும், அவர் குடும்பத்திலே ஒருவனாக நானும் இரண்டு குடும்பங்களும் ஒரே குடும்பம் என்கிற அளவிற்கு நாங்கள் வாழ்ந்து வளர்ந்தது பல பேருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

ஏதோ ஒரு மாபெரும் கலைஞர் மறைந்தார். அவருக்காக இரங்கல் உரை என்கிற அளவோடு நிற்பதல்ல என்னுடைய உரை. இந்த உரை எங்கள் இருவருக்கும் இடையே பாலப் பருவத்திலிருந்து தொடர்ந்து பாசமும், நேசமும் மிகுந்து யாராலும் பிரிக்க முடியாத இரண்டு நண்பர்களை இன்றைக்குச் சாவு பிரித்து விட்டதே என்பதை எண்ணி நான் விடுகின்ற கண்ணீரின் உரை இந்த உரை என்பதைத் தெரிவித்து என்னுடைய நண்பர் சிவாஜியின் புகழ் என்றைக்கும் மறையாது. அந்த திருவிளக்கு என்றைக்கும் அணையாது."

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்
23.07.2001 அன்று முரசொலியில் வெளிவந்த
தொலைக்காட்சியில் ஆற்றிய இரங்கல் உரை.

நான் மட்டும் முதல்வன் அல்ல, அனைவரும், ஒவ்வொரு வகையிலும் முதல்வனாக வரவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
"நான் முதல்வன் திட்டத்தினைத்" தொடங்கிவைத்து ஆற்றிய உரை (29.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" திட்டத்தின் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினைத் தொடங்கிவைத்து, "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் இணைய தளத்தையும் தொடங்கிவைத்தார்.

தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாகிய "நான் முதல்வன்" என்கிற புதிய திட்டத்தை 01.03.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தின் சிறப்பம்சமானது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித்திறமைகளை அடையாளம் கண்டு, அதனை மேலும் ஊக்குவித்து, அடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எங்குப் படிக்கலாம், எப்படிப் படிக்கலாம் என்று வழிகாட்டுவதுடன், தமிழில் தனித்திறன் பெறவும், சிறப்புப் பயிற்சியுடன் ஆங்கிலத்தில் எழுதவும், சரளமாகப் பேசவும், நேர்முகத் தேர்வுக்குத் தயாராவதற்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டுள்ள "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் இணையதளமானது, தமிழக இளைஞர்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப தனித்திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் இலவச திறன் பயிற்சிகள், குறைவான கட்டணத்துடன் கூடிய திறன் பயிற்சிகள், பாடத்திட்டத்துடன் கூடிய திறன் பயிற்சிகள், பாடத்திட்டத்துடன் இணைக்கப்படவுள்ள திறனெய்தும் தொழில்நுட்பப் பாடங்கள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள், ஆங்கிலம், ஜப்பானிய, ஜெர்மன் மொழித்திறன் பயிற்சிகள், ஆளுமைத்திறன் பயிற்சிகள், உயர் கல்விக்கான நுழைவுத்தேர்வு பயிற்சிகள் என அனைத்தும் "நான் முதல்வன்" இணையதளத்தின் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி இளைஞர்கள் நவீனத் தொழில்நுட்பங்களில் விருப்பத்திற்கேற்ற வேலைவாய்ப்பினைப் பெறும் வகையிலான குறுகிய கால பயிற்சிகளைத் தெரிவு செய்து உலகத்தரத்திலான பயிற்சிகளையும் அதற்குரிய சான்றிதழ்களையும் பெறலாம். இதற்கான இலவசப் படிப்புகள், குறைவான கட்டணத்துடன் கூடிய படிப்புகள், பாடத்திட்டத்துடன் கூடிய படிப்புகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேசத் தரத்துடன் இப்படிப்புகளைத் தமிழக மாணவர்களுக்கு வழங்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், 47 பன்னாட்டு மற்றும் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னதாக, திறன் பயிற்சி தொடர்பாகப் பல்வேறு நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு இளைஞர்களைக் கல்வியில், அறிவில், ஆற்றலில், தனித்திறமைகளில் தலைநிமிர்ந்து நிற்கவைக்கத் தமிழக அரசால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டம்தான் "நான் முதல்வன்" திட்டம்!

நான் மட்டும் முதல்வன் அல்ல, அனைவரும், ஒவ்வொரு வகையிலும் முதல்வனாக வரவேண்டும் என்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்தத் திட்டம். இது என்னுடைய கனவுத் திட்டம். அந்தத் திட்டம், என் கண்ணுக்கு முன்னால் மாபெரும் வளர்ச்சியை அடைந்து வருவதை மகிழ்ச்சியுடன் பார்த்து, மனநிறைவடையும் உள்ளத்தோடுதான் நான் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

அனைத்துத் துறையின் வளர்ச்சி, அனைத்து வகை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்ற திராவிட மாடல் ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது. அதைத்தான், எல்லோரும் இங்குப் பேசும்போது சொன்னார்கள்.

இது இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய ஆட்சியாக நடந்து வருகிறது. இதனை அறிந்து, பல்வேறு தொழில் நிறுவனங்களில் பார்த்தீர்களென்றால், இன்றைக்குப் போட்டிபோட்டுக்கொண்டு, தமிழகத்தில் முதலீடு செய்வதற்கும், புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் தமிழ்நாட்டை நோக்கிவந்துகொண்டு இருக்கிறார்கள்.

இது தொழில்வளம் இல்லை என்ற நிலைமையையும், வேலை கிடைக்கவில்லை என்ற நிலைமையையும் மாற்றுவதாக அமைந்துள்ளது. இப்படி உருவாகும் தொழில்களின் திறனுக்கேற்ற வல்லுநர்களை உருவாக்க வேண்டிய கடமை நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதனை மனதில் வைத்துத்தான் இந்தத் திட்டம், "நான் முதல்வன்" என்கிற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

நமது இளைஞர்களை, தொழில் நிறுவனங்களின் தற்போதைய தேவைக்கேற்ற திறன் படைத்தவர்களாக உருவாக்குதல், அதன் மூலம், அவர்களின் திறனுக்கேற்ற தகுதியான வேலை கிடைக்கச் செய்தல், இந்த அரசின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாக அமைந்திருக்கிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டே, இளைஞர்களை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் "நான் முதல்வன்" என்கிற திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு என்னுடைய பிறந்தநாளன்று, இதே கலைவாணர் அரங்கத்தில்தான் இந்தத் திட்டத்தை நான் தொடங்கிவைத்தேன்.

அதைத் தொடர்ந்து, இராணிமேரி கல்லூரி வளாகத்தில், "இளைஞர் திறன் திருவிழா" என்ற ஒரு பிரம்மாண்ட விழா நடத்தப்பட்டது. அதில், பல்வேறு கல்வித் தகுதி பெற்ற இளைஞர்கள் கலந்துகொண்டு, தங்களுக்குத் தேவைப்படும் திறன் பயிற்சிகளைத் தேர்வு செய்து, அதில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது.

என்ன படிக்கலாம்? எங்குப் படிக்கலாம்? எந்த வகையான பயிற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்? இளைஞர்களை எப்படி நாம் பக்குவப்படுத்தலாம்? இளைஞர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டிய திறமைகள் என்னென்ன?

எளிதில் கிடைக்கக்கூடிய வேலைகள் என்ன? தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள் என்ன? என்பது போன்ற விளக்கங்களை அந்த நிறுவனங்கள் வழங்கினார்கள். பன்னிரெண்டாம் வகுப்பு படித்த பெரும்பாலானவர்கள் மருத்துவம், பொறியியல்

கல்லூரிகளை நோக்கி ஓடி வந்துகொண்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்புகள் கொட்டிக் கிடக்கக்கூடிய பிற துறைப் படிப்புகளையும் அவர்கள் உணர்ந்திருந்தால் இதுமாதிரி நிச்சயமாக நடக்காது. பல்வேறு துறைசார் படிப்புகளைப் பற்றியும் மாணவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களது பெற்றோர்களும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

பெற்றோர்கள், தங்களது ஆசைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லலாம். வழிகாட்டலாம். அதில் தவறு கிடையாது. ஆனால் திணிக்கக் கூடாது. அப்பா, அம்மாவின் ஆசைக்காக மட்டும் சேரும் பிள்ளைகள், பின்னர், மனதளவில் சோர்வடைகிறார்கள். அவர்களால், முழுமையாகப் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. தங்களது பிள்ளைகளுக்கு, எந்த மாதிரியான படிப்பில் ஆர்வம் இருக்கிறது என்று கேட்டு, அதில் படிக்க வையுங்கள். பல்வேறு படிப்புகளைக் குறித்துத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதற்காகத்தான், 'கல்லூரிக் கனவு' வழிகாட்டல் நிகழ்ச்சியை நம்முடைய அரசு தொடங்கி இருக்கிறது.

"நான் முதல்வன்" திட்டத்தின்கீழ், 'கல்லூரிக் கனவு' என்ற பெயரில், 25.06.2022 அன்று, தமிழக அரசு ஒரு விழாவைச் சிறப்பாக நடத்தியது. அந்த விழாவை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நான் தொடங்கி வைத்தேன். பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் அதில் பங்குபெற்று, ஒவ்வொரு துறையின் சிறப்புகளை மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த விழாவில், ஆயிரக்கணக்கான +2 முடித்த மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் பங்குபெற்றது உண்மையிலே எனக்கு நிறைவாக இருந்தது. இதில் கலந்துகொண்ட மாணவ, மாணவியர், விழா முடிந்து வெளியில் செல்லும்போது, நாம் எந்தத் துறையைத் தேர்வு செய்து மேற்படிப்புக்குச் செல்லலாம் என்ற தீர்க்கமான முடிவுடன் செல்லும் வகையில் அரசு அந்த விழாவை நடத்தியது என்பதை நான் பெருமையோடு இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் அடிக்கடி பேசுவது, நம் தமிழ்நாட்டு மாணவர்கள் மிகவும் திறமையானவர்கள், அவர்கள், வேறு எந்த மாநில மாணவியருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அதைப்போல்தான் இப்போதும் சொல்கிறேன், உறுதியாகக் கூறுகிறேன். நம் இளைஞர்கள், திறமையில் எவருக்கும் சளைத்தவர்கள் இல்லை. ஆனால், இவர்களுக்குத் தேவை, சிறந்த வழிகாட்டி, உந்து சக்தி ஆகியவைதான். இவற்றை வழங்கினால், இவர்களின் திறமை இன்னும் பளிச்சிடும். அதன்மூலம், வேலைவாய்ப்பும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மேம்படும் என்பதை நன்கு நான் உணர்ந்த காரணத்தினால் "நான் முதல்வன்" திட்டத்தை நான் தொடங்கினேன்.

❖ இன்று அறிமுகப்படுத்தியிருக்கக்கூடிய, "நான் முதல்வன்" இணையதளம் இந்த நோக்கத்தை நிறைவேற்றப்போகிறது. இந்த இணையதளத்தை மாணவர்கள் பயன்படுத்தும்போது, தெளிவான, சீரான தகவல்களை நிச்சயமாகப் பெற முடியும்.

❖ இந்த இணையதளத்தில் இருக்கக்கூடிய திறனறித் தேர்வு (Psycho-metric Test) மூலம் மாணவர்களின் உளவியல் பண்புகளை ஆராய்ந்து அவர்களின் தனித்திறனை அறிந்து, அதற்கு ஏற்றவாறு பயிற்சிகளை பரிந்துரைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

❖ இந்த இணையதளத்தின் வாயிலாக, கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப அந்தப் பாடப்பிரிவுகளைக் கூடுதலாகப் பயின்றால், நவீனத் தொழில் நிறுவனங்களில் எளிதாக வேலைவாய்ப்பினைப் பெற முடியும் என்ற தெளிவான முடிவுக்கு வருவர்.

❖ இந்த இணையதளம் மூலம் தாங்கள் பயில விரும்பும் பாடப்பிரிவுகளைத் தேர்வுசெய்து பயிற்சி பெறக் கூடுதலாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ Robotics, Virtual Reality, Oracle, Machine Learning, Cloud Computing, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (Artificial Intelligence).

❖ இணையப் பாதுகாப்புத் தொழில்நுட்பம் (Cyber Security), Internet of Things,

போன்ற நவீனக் கூடுதல் பிரிவுகளை இலவசமாகவும், மிகக் குறைவான கட்டணத்திலும் பயிலும் வகையில் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

புதிய புதிய படிப்புகள் ஏராளமாக வந்துவிட்டன. அதனைக் கற்க முன்வர வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

புதிய புதிய தொழில்கள் உருவாகி வருகிறது. அந்த நிறுவனங்களுக்கு என்ன மாதிரியான வல்லுநர்கள் தேவைப்படுவார்கள் என்பதை அறிந்து அவற்றைப் படிக்க வேண்டும்.

கல்லூரியில் படிக்கும்போதே, தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இணையத் தளங்களிலேயே, நிரம்பப் பட்டயப் படிப்புகள் வந்துவிட்டன. அவற்றை இடைப்பட்ட காலத்திலேயே கற்றுக்கொள்ளலாம். இத்தகைய வாய்ப்பை, மாணவர்கள் பயன்படுத்தும்போது கல்லூரிப் படிப்பை முடித்து வெளியேறும்போது, வேலைவாய்ப்புக் காத்துக்கொண்டிருக்கும்.

தற்போதைய நிலைப்படி, மாணவர்கள் தங்களது கல்லூரிப் படிப்பினை முடித்துவிட்டு, கூடுதல் ஆண்டுகள் செலவிட்டால்தான், வேலைவாய்ப்புப் பெறுவதற்கான கூடுதல் பாடப்பிரிவுகளைப் படிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக, இத்தகைய நவீனப் பாடப்பிரிவுகளைக் கல்லூரிப் படிப்பின்போதே வழங்கிட இந்த அரசு முனைப்பைக் காட்டி வருகிறது.

வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் குறுகியகாலத் திறன் பயிற்சிகளையும் "நான் முதல்வன்" இணையதளம் வழங்கிக்கொண்டிருக்கிறது. மாணவர்கள் தேர்வு செய்ய வேண்டிய பாடப்பிரிவுகள் குறித்துத் தகுந்த வழிகாட்டுதலை வழங்கும் வகையில் "நான் முதல்வன்" இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது, மென்மேலும் அவ்வப்போது புதிய, கூடுதல் விவரங்களை வழங்குவதற்காக, தொடர்ந்து மேம்படுத்தப்படும்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழியிலும் நம்முடைய இளைஞர்களுக்கு மொழித் திறன் இருக்க வேண்டும்.

தமிழ், தாய்மொழி!

ஆங்கிலம், உலகத்தோடு நம்மை இணைக்கும் மொழி!

இந்த இரண்டு மொழிகளிலும் எழுத, படிக்க, பேச மாணவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நல்ல மொழி ஆற்றல் இருந்தால்தான் நம் வளர்ச்சியை அது வானளவுக்கு உயர்த்தும்.

கல்லூரிப் படிப்பை முடித்து வெளிவரும் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருப்பது ஆங்கிலப் பேச்சாற்றல்.

வேலைக்கான நேர்முகத் தேர்வுக்குச் செல்லும்போதும் சரி, வேலை கிடைத்த பின்னரும் சரி, இன்றைய பணிச்சூழலில் ஆங்கிலப் பேச்சாற்றல் என்பது தவிர்க்கமுடியாத தேவையாக இருக்கிறது. இந்த ஆங்கிலத்திறன் குறைவாக இருக்கும்போது சிலருக்கு, ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டு விடுகிறது. அதன் காரணமாக, ஆங்கிலப் பேச்சாற்றல் குறைவாக இருக்கும்போது, அவர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் வேலைக்குச் செல்லும்போது, அங்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தையே அவர்கள் கைவிட்டு விடுகின்றனர்.

எனவே, இன்றைய சூழலில் மாணவர்களின் தேவை அறிந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதல் பருவத்திலேயே (First Semester) ஆங்கிலப் பேச்சாற்றல் (English Communication) என்ற பாடத்திட்டம் திறன்மிகு பயிற்சி அளிக்கும் நிறுவனங்களின் உதவியுடன், அனைத்துக் கல்லூரிகளிலும், அனைத்து மாணவர்களுக்கும் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும்.

ஆங்கிலம் மட்டுமன்றி, ஜெர்மன், ஜப்பானிய மற்றும் பிரெஞ்சு மொழித் திறன் பயிற்சிகளும் வழங்கப்படும். இதன்மூலம், அடுத்தடுத்த ஆண்டுகளில் ஆங்கில வழிப் பாடப்பிரிவுகளைக் கற்பதில் இருக்கக்கூடிய சிரமங்கள் குறையும் என்பதோடு கல்லூரிப் படிப்பை முடித்து வேலைக்குச் செல்லும்போது, 'எங்களால் முடியும்' என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாகும் நாளேடுகளை, புத்தகங்களைத் தொடர்ந்து வாசியுங்கள். இதை ஒரு பழக்கமாகவே ஆக்கிக்கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைகளை எழுதிப் பாருங்கள்.

கருத்தை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் என்பது மிகமிக முக்கியமான திறமை! நம்மை நாமே அறிந்துகொள்ள, எடைபோட இது ஒரு சிறந்த வழிமுறை!

போட்டித் தேர்வுகளுக்கு ஆயத்தமாவது குறித்த பயிற்சிகளும் "நான் முதல்வன்" இணையதளத்தில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டு மாணவர்கள் தங்களின் ஆளுமைத்திறன் மற்றும் தொழில் முனைவை வளர்த்துக்கொள்ளும் வகையில் பல பிரத்தியேகப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

I.I.T, N.P.T.E.L, ஆரக்கிள் (Oracle), கேம்பிரிட்ஜ் (Cambridge), இன்போசிஸ் (Infosys), சிஸ்கோ (Cisco), மைக்ரோசாப்ட் (Microsoft), கோர்செரா (Coursera), T.C.S, ஆட்டோ டெஸ்க் (Autodesk), மேத்வர்க்ஸ் (Mathworks) இதுபோன்ற 50க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்களுடன் இதற்காக நாம் ஒப்பந்தம் செய்திருக்கிறோம்.

உலகத் தரத்திலான பயிற்சிகளை உலகளாவிய வேலைவாய்ப்புகளைப் பெற உதவும் சான்றிதழ்களை, கல்லூரியில் பயிலும் காலத்திலேயே பெறும் வாய்ப்பை இந்த இணையதளம் உறுதி செய்கிறது.

தமிழ்நாடு என்பது, இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக இருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்தியாவில், தலைசிறந்த 100 கல்வி நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 21 தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. தலைசிறந்த 100 கல்லூரிகளில் 32 கல்லூரிகள் தமிழ்நாட்டில்

இருக்கின்றன. தலைசிறந்த 100 ஆராய்ச்சி நிறுவனங்களில் 10 தமிழ்நாட்டில் இருக்கின்றன.

தலைசிறந்த 200 பொறியியல் கல்லூரிகளில் 35 கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கிறது. தலைசிறந்த மேலாண்மைக் கல்வி நிறுவனங்களில் 11 தமிழ்நாட்டில் இருக்கின்றன. 100 மருத்துவக் கல்வி நிறுவனங்களில் 8 தமிழ்நாட்டில் இருக்கின்றன. 40 பல்மருத்துவக் கல்வி நிறுவனங்களில் 9 தமிழ்நாட்டில் இருக்கின்றன. 30 சட்டக் கல்லூரிகளில் 2 தமிழ்நாட்டில் இருக்கின்றன. 30 கட்டடக்கலைக் கல்லூரிகளில் 6 தமிழ்நாட்டில் இருக்கின்றன.

இப்படி நான் அடுக்கிக்கொண்டே போக முடியும். கல்வியில் சிறந்த மாநிலமாக, நாம் இன்றைக்கு உயர்ந்து நிற்கிறோம்.

இதேபோல், உலகின் தலைசிறந்த திறமைசாலிகளில் தமிழ்நாட்டு இளைஞர்களின் பட்டியல் வெளிவர வேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவின் பல்வேறு சிறந்த நிறுவனங்களில் மட்டுமல்ல, உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களிலும் முக்கியப் பொறுப்புகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அமர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

அனைவருக்கும் வேலை என்பது மட்டும் நமது இலக்கல்ல! அனைவருக்கும் தகுதியான வேலை என்பதே நம்முடைய இலக்கு! அந்த இலக்கை அடைவதற்கான முழுத் திறமையும் தமிழக இளைஞர்களுக்கு உண்டு! உங்கள் மீது எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது! நீங்களும் அந்த தன்னம்பிக்கையோடு உலகை எதிர்கொள்ளுங்கள்! தமிழ்நாட்டு இளைய சக்தியை இணையற்ற சக்தியாக மாற்ற எந்நாளும் உழைப்போம்!

அந்த இலக்கை அடைவோம்! அடைவோம்!

அக்டோபர் 30 :
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்தநாள்

பசும்பொன்

"மறைந்தும் மறையாத பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களுடைய நூற்றாண்டு விழா இது. இங்கே பேசியபோது இந்த மண்டபத்தை எழுப்பியதற்குக் காரணமே கலைஞர்தான் என்று சொன்னார்கள். மதுரையிலே இருக்கின்ற தேவர் சிலை கலைஞரால்தான் வைக்கப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் அந்த விளம்பரங்களைத் தேடிக்கொள்வதற்காக இங்கே வரவில்லை. சிலை வைத்தால் போதாது. அந்த சிலைக்கு உரிய உருவத்திற்குச் சொந்தக்காரர் என்ன உள்ளத்தோடு பாடுபட்டாரோ, எந்த வகையில் நாட்டிற்கு, சமுதாயத்திற்கு உழைத்தாரோ அந்த வகையிலே நாமும் உழைத்தால்தான் அந்தப் பாதையில் நாம் நடந்தால்தான் சிலை வைப்பதற்கும், அவரது பெயரால் நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கும் பொருள் உண்டு என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மதுரை மாநகரத்திலே ஒரு மாபெரும் சிலை அவருக்காக வைக்கப்பட்டது. அந்தச் சிலையைத் திறந்து வைப்பதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்களே வந்தார்கள். உங்களுக்குத் தெரியும். அப்பொழுது கிரி அவர்கள் தேவர் அவர்களைப் பற்றிப் பாராட்டிய அந்த உரை இன்றைக்கும் நம்முடைய காதுகளில் ஒலித்துக் கருத்திலே நிறைந்திருக்கக்கூடிய உரையாகும்.

இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்கமுடியாத இடத்தை, மறைக்கமுடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார்கள். குறைந்த வயதுதான், 55 ஆண்டுகள்தான் வாழ்ந்தார் என்றாலும் அந்த 55 ஆண்டு வாழ்க்கையும் 100 ஆண்டுகளில் ஒரு மனிதன் செய்ய வேண்டிய அத்தகைய அருமையான செயல்களைச் செய்து பேறும் புகழும் பெற்றுத் திகழ்ந்தவர் தேவர் திருமகன் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தேவர் இன்று இல்லையென்றாலும் அவர் இருக்கிறார், அவருடைய கொள்கைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவருடைய எண்ணம் பலிக்க நாமெல்லாம் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்ற உறுதியை எடுத்துக்கொள்வதுதான். இந்த நல்ல நாளில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான சூளுரை."

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்
30.10.2007 அன்று பசும்பொன்னில் நடைபெற்ற
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

திரைப்படம் மற்றும் சின்னத்திரை விருதுகள் வழங்கும் விழா

சென்னை,
கலைவாணர்
அரங்கில், 04.09.2022 அன்று
தமிழ்நாடு அரசின் சார்பில் 2009
முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான
திரைப்படம், சின்னத்திரை, தமிழ்நாடு அரசு
எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும்
தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன
மாணவர்களுக்கான விருதுகள் வழங்கும்
விழாவில், மாண்புமிகு அமைச்சர்
பெருமக்கள் விருதுகளை
வழங்கினார்கள்.

இளையோன் எதிர்க்கும் இளையான்

– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

கல கலவெனக் காலில் ஒலித்த
சதங்கையைக் கழற்றி ; வீரக்
கழலினை அணிந்த இளங்கன்று அவன்!
பின்னிச் சடையிட்ட நீள்குடுமி களைந்து
மின்னிடும் வாளேந்தி நிற்கின்ற சிறுவன் அவன்!
மெல்லிய கரங்களில் எழில் வளையல் நீக்கி
வில்லினைத் தோளில் தாங்கிய இளைஞன் அவன்!
ஐம்படைத் தாலியினை இன்னும் மார்பில் பூண்ட
அறியாப் பருவத்தினன் அவன்!

பாண்டிய மரபில் வந்த அந்தப் பாலகனோ
பலமுண்டு பகையழிக்கத் தன் தோளுக்கென்று
படைநடத்தத் தலைமை ஏற்றான்;
பார்அதிர முரசொலித்தான்!
கடும் எதிர்ப்பின் தலை மிதிக்கப் புறப்பட்டுக்
களம் சென்று வெல்வேன் என்று சூளுரைத்தான்!
நெடுஞ்செழியன் என்கின்ற பெயருடையான்;
நிமிர்ந்த தலை வளையாத புகழுடையான்!
உடைவாள் ஓங்கி உறுமுகின்ற அச்சிங்கக் குட்டிதனை
இடைக்குன்றூர் கிழார் எனும் புலவர், இவ்வாறு
பலபடப் பாராட்டி வாழ்த்துப் பாடி
பால்மணமும் மாறாத பச்சிளம்பசலை என்றார்.
அந்தப் பாண்டிய இளவலைப் பாடி மகிழ்ந்த
செந்தமிழ்ப் பாவலர் பல்லோர் ஆவர்!

குன்றூர்கிழார் மற்றும் குறுங்கோழியூர்க் கிழார்,
குடபுலவியனார், கல்லாடனார்-மதுரைக்
கணக்காயனார் மகன் நக்கீரனார்-அவன்
கொலுமண்டபத்துப் புலவர் ஏறு
மதுரைக் காஞ்சி பாடிய
மருதனார் என்னும் மாங்குடிக் கிழார்;
இத்தனைச் சான்றோர் தமிழ்க்கவி கேட்டு
பத்தரை மாற்றுப் பசும்பொன் பாண்டியன்
சித்திரத் தமிழால் கவிதை யாத்திடும்
சிறப்பினைப் பெற்று செருக்களம் புகுந்தவன்!

வயதில் இளையோன் பாண்டியன் என்று,
வலியோர் ஐந்து வேளிர் துணையுடன்;
சேர சோழ முடிமன்னர் இருவர்,
போரில் குதித்து ஓலை அனுப்பினர்!
வேளிர் வேந்தர் ஐவர் படையும்
வில், புலி பொறித்த கொடியுடை மன்னர்
இருவர் படையும் இணைந்து மோதிட;
எழுவரை எதிர்க்க இயலுமோ என்று
இளைஞன் பாண்டியன் கலங்கவே இல்லை!
"ஒடுங்கி அடங்கிடுக! அல்லால்; உயிர்
ஒழிந்து போக நேரிடும்!" என்ற
ஓலை கண்டு உரக்கச் சிரித்தான்!
ஒளிந்திடும் மரபல்ல போருக்கென்றான்!

"இளவயது எனக்கென்று ஏளனம் புரிகின்றார்
எதிர்ப்போர் வயதும் படையும் என் முன்னே
எப்பாடுபடப் போகின்றதென்று
இலக்கணமே தெரிவிக்கின்றேன்!
ஓலை கொண்டு வந்தவனே! உடன்
ஓடு நீ; உன் ஏழு மன்னரிடம்! வீர
வேலை, கரம் ஏந்திவிட்டான்; இந்த
விடலையாம் செழியன் என்று நான்
விடை தந்ததாக அறிவித்திடுக!" என்றான்!
"தலையாலங்கானத்துப் போர்க்களம் புகத்
தயாராகட்டும் தென்பாண்டியப் படை" என்றான்!

அப்போது,
மாங்குடி மருதனார் இடைமறித்து, "பாண்டி
மன்னர் குலக் கொழுந்தே! இந்தப் பாவலன்,
மறுப்பதாக எண்ண வேண்டாம்...
மாற்றார் வலிமையினைக் காணும்போது
தோற்றோம் இறுதியில் நாம் என்றே முடிவு வரும்!
எச்சரித்தல் என் கடமையென்ற காரணத்தால்,
இனியும் சிந்தித்துப் போர்தவிர்த்தல் நலமாகும்" என்றார்!

மீன்கொடிப் பாண்டியனோ; மாங்குடி
மருதனார் மொழி கேட்டு, அவர் முன் சென்று;
மான்குட்டி போல் இருக்கின்றேன், அதனாலே
மாற்றார் எனும் புலிப்போத்தின் வாய்க்குள்ளே
இரையாக மாறிப்போவேன் என்று
இரங்கலுரை இப்போதே ஆற்றுகின்றீர்
அச்சம் தவிர்த்திடுக அய்யனே! இறந்த பின்னர்
எச்சமெனத் தமிழன் விட்டுச் செல்வது மானமொன்றே!
அந்த மானத்தைப் பகைவர் காலடியில் பூவாக்கிப்
போட்டுவிட்டு,
சொந்த வாழ்க்கைதனை சுகமாக ஆக்கிக் கொள்வோன்
சோற்றாலடித்த பிண்டமாவான்-நூல் அறுந்த

காற்றடிப் பட்டமாவான்!
தமிழுக்குத் தலைவணங்கும் நெடுஞ்செழியன் நான்:
தகவிலார்க்குத் தலைவணங்க ஒப்பமாட்டேன்!
எழுவரென்ன எழுபது கோடிப் பேர்
எட்டுத் திசையும் முரசு கொட்டி,
எதிர்க்க வரினும் என்னை-இந்த
இளையோன் எதற்கும் இளையான் என்ற
இலக்கியத்தைப் படைக்கின்றேன் போர்க்களத்தில்!

"பாண்டியத்துப் பெருமண்ணில், வெறும்
ஆண்டிகளோ வாழ்கின்றார் ? இல்லை! இல்லை!
குலமாதா பாண்டித்தாய்: கோழைகளைக்
குழந்தைகளாய்ப் பெற்றெடுக்கவில்லை! இந்த
நிலமகளின் பெருமைக்கு மேலும் பெருமை,
நெடுங்செழிய இளைஞனவன் சேர்ப்பான் என்று
நம்பிடுவீர்: நாட்டோரே! நல்லோரே!" என முழக்கி:
'நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்' எனும்
நரம்பெலாம் வீரம் மீட்டும் புறப்பாட்டை
நாடாளும் இளமன்னன் இயற்றலானான்!

அப்பாட்டில்,
"அணிதேர்ப் புரவியும் ஆனைகளுடனே
ஆட்பெரும்படையும் மிகக் கொண்டதால், நம்மை:
இழித்தும் பழித்தும் ஏளனம் செய்தும்
இளையோன் என்றும் சிறுமொழி கூறிய
எதிரிகள் எழுவரின் இடுப்பை ஒடித்து
தலையாலங்கானப் போரில் வென்று-அவர் தம்
அலைகடற் படையை அறவே அழித்து
நிலைகுலைந்த பகைவரை முரசொடு பிடித்து
மலையென நிமிர்ந்து நிற்பேன் கண்டீர்!
எழுவரிடம் எதிர் நிற்க முடியாமல் நான்
விழுவதானநிலையொன்று தோன்றுமாயின்
குடிமக்கள் நலம் பேணாக்
கொடுங்கோல் மன்னன் எனக்
குவலயம் எனைத் தூற்றட்டும்!
தோல்வி என்னைத் தழுவுமாயின்
தொழுதேத்தி எனை நாடி
இல்லையென்று இரப்போர்க்கு
எதுவும் வழங்காத பாவியென
வையகம் இகழுமளவுக்கு
வறுமை வந்தென்னை வருத்தட்டும்!

வெற்றி மாலை என் தோளை வெறுத்து விட்டால்
உற்றார் அனைய எளியோரின் துயர்போக்க
உதவிட முடியா நிலை எனை வந்தடையட்டும்!
மாற்றார் கை ஓங்கி நிற்க-நம்
மறவர் படை தாழ்ந்து விட்டால்,
மாங்குடி மருதனார் தலைமை தாங்க
மாங்குயிலோசைத் தமிழ் மொழியில்
பாப்புனையும் பாவாணர் அனைவருமே
பாண்டியத்தை இனிப்பாடுவது சிறப்பல்ல என்று
இந்த
நெடுஞ்செழியப் பாண்டியனை நீங்கி,
நெடுந்தொலைவு சென்றிடட்டும்!"
இவ்வண்ணம் சூளுரைத்த பாண்டி மன்னன்
செவ்வண்ணம் கண்ணில் தேக்கி-படைக்குத்
தலைமையேற்றுச் சென்றிட்டான்:
தலையாலங்கானப் போர்முனை நோக்கி!

***

சூளுரைக் கவிதையைப் பாண்டியன்
சுளைத் தமிழில் வடித்தபோதும்:
சுற்றத்தார் அனைய எளியோர் காத்தல்,
கொற்றவர்க்குரிய கொடையளித்தல்,
பற்றுக் கொளல் குடிமக்கள்பால்,
கற்றறிந்த புலவர் கூட்டம், நாடு போற்றிக்
கவிபுனைதல் - இந்நான்கும்,
உயிரே போல் கருதி வாழ்ந்த
உயர்தனிப் பண்பாட்டையன்றோ
உறுதியாக உரைக்கின்றான்!
இதையெண்ணி மகிழும் காலை-நம்
இதயம்: தமிழ் உணர்வால் மலரும் சோலை!

***

"நகுதக் கனரே, நாடுமீக் கூறுநர்:
இளையவன் இவன் என உளையக் கூறிப்,
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படைஅமை மறவரும், உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்குஅகப் படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை:
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே"

(புறநானூறு: பாடல் : 72
பாடியவர்: தலையாலங்கானத்துச் செருவென்ற
பாண்டியன் நெடுஞ்செழியன்)

பொருள் விளக்கம் :
நகுதக்கனர் = சிரிக்கத் தக்கவர்.
மீக்கூறுதல் = அதிகமாகப் புகழ்தல்.
உளையக் கூறி = வெறுத்து வருந்துமாறு சொல்லி.
பாவடிப் பணைத்தாள் நெடுநல் யானை = பரந்த அடியும் பெரிய காலுங் கொண்ட உயர்ந்த யானை.
உறுதுப்பு அஞ்சாது = என் மிகுந்த வலிமைக்கு அஞ்சிடாமல்.
வரைக என் நிலவரை = என் நாட்டை விட்டு நீங்குக.
புரப்போர் புன்கண் கூர = சுற்றத்தார் போல் பாதுகாக்கப்பட வேண்டியவர்களின் துயரம் மிகுந்திட.

நன்றி: கலைஞரின் 'சங்கத் தமிழ்' நூலிலிருந்து...

"விடுதலைப்போரில் வீரத் தமிழகம்" முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சி

சென்னை கலைவாணர் அரங்கத்தில் 75ஆவது சுதந்திர ஆண்டை முன்னிட்டுச் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தேசத் தலைவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள "விடுதலைப்போரில் வீரத்தமிழகம்" என்ற முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சி 15.08.2022 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் திறந்துவைக்கப்பட்டது.

200 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்கள், ஆங்கிலேயரின் அடக்கு முறைகள், சுதந்திரத்தின் அருமை ஆகியவற்றை இளம் தலைமுறையினரிடையே கொண்டு செல்லும் நோக்கில் இந்த முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் போராடிய அரும்பெரும் தலைவர்கள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் கொண்ட மாதிரிகளை வடிவமைத்து, அவர்களின் வீரதீரச் செயல்கள் மற்றும் தியாகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தென்னகத்தில், குறிப்பாக வீரம் விளைந்த நம் தமிழகத்தில்தான் முதல் சுதந்திரப் போர் ஆரம்பமானது. வேலூர் கோட்டையில் நடைபெற்ற சிப்பாய்களின் புரட்சிதான் இந்தியாவில் நடந்த முதல் விடுதலைப் போராகக் கருதப்படுகிறது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பூலித்தேவன், ஒண்டிவீரன், வீரன் அழகுமுத்துக்கோன், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலுநாச்சியார், குயிலி, மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை போன்ற வீர மறவர்களின் போராட்டங்களும், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, மகாகவி பாரதியார், பெரியார், மூதறிஞர் இராஜாஜி, திருப்பூர் குமரன், காமராஜர், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத், ஜே.சி. குமரப்பா, பசும்பொன் முத்துராமலிங்கம், கடலூர் அஞ்சலை அம்மாள் போன்ற எண்ணற்ற தலைவர்களின் தியாகங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய விடுதலைக்கு வித்திட்ட முத்தாய்ப்பான மூன்று போராட்டங்களான ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய நிகழ்வுகளும் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

25.08.2022 வரை நடைபெற்று வந்த இம்முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சியினை, பொதுமக்கள் மற்றும் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகள் அதிக அளவில் பார்வையிடுவதற்கு ஏதுவாக 01.09.2022 வியாழக்கிழமை வரை நீட்டிக்கப்பட்டு மாணவ, மாணவியர்கள் கண்டுகளித்தனர்.

இக்கண்காட்சி காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை காட்சிப்படுத்தப்பட்டு வந்த இக்கண்காட்சிக்கு நுழைவுக் கட்டணம் ஏதுமில்லை. அனுமதி முற்றிலும் இலவசம். பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆகியோர் இந்த முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சியினைப் பார்வையிட்டுப் பயன்பெற்றார்கள்.

விடுதலைப் போரில் வீரத்தமிழகம் என்ற முப்பரிமாண ஒளி-ஒலிக் காட்சியினைப் பார்வையிட்ட தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் திரு.பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நம்மிடம் கூறும்போது,

"இந்திய சுதந்திரத்தினுடைய அமுதப் பெருவிழாவை முன்னிட்டு தமிழகத்தினுடைய சுதந்திரப் போராட்டத்தின் பங்கினை வெளிக்கொணரக்கூடிய மிக அருமையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழக அரசினுடைய செய்தி விளம்பரத்துறையினுடைய காட்சி அரங்கை பார்க்கக்கூடிய வாய்ப்பினை நான் இன்று பெற்றிருந்தேன். சுதந்திரப் போராட்டத்தில் தமிழகம் ஆற்றிய பங்கு, பணி மகத்தானது. 1857இல் நடந்த அந்த முதல் சிப்பாய்க் கலகம் என்று அழைக்கப்படுகின்ற முதல் சுதந்திரப் போராட்டம் என்று வரலாறு குறிக்கப்பட்டதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே சுதந்திரத் தீ தமிழகத்திலே பற்றி எரிந்தது. தமிழகத்தினுடைய மிக பெருமையான, பாரம்பரியம் கொண்ட, வீர மரபுகளைக் கொண்ட நம்முடைய குறுநில மன்னர்களும், சுதந்திரப் போராட்ட வீரர்களும், தியாகிகளும் எண்ணிலடங்காத் தியாகத்தைச் செய்து இந்தச் சுதந்திர வேள்விக்கு மாபெரும் பங்காற்றியிருக்கின்றனர். ஆனால், ஒட்டுமொத்தமாக அகில இந்திய அளவிலே சுதந்திரப் போராட்ட வரலாற்றை எழுதுகின்றபோது தமிழகத்தினுடைய சுதந்திர வீரர்களுடைய வரலாறு முறையாக குறிக்கப்படவில்லை, முறையாக வெளிக்கொணரவில்லை. அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பாராட்டுவதிலும், சுதந்திரத் தேசிய உணர்வுகளை வளர்ப்பதிலும் தங்களுக்கு இருக்கின்ற பொறுப்பினை உணர்ந்து இந்த அருமையான நிகழ்வுக்கு மிக அற்புதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மனிலிருந்து, பூலித்தேவனிலிருந்து, சின்ன மருது, பெரிய மருதிலிருந்து, வேலுநாச்சியாரிலிருந்து 20ஆம் நூற்றாண்டுச் சுதந்திரப் போராட்ட வீரர்களான பெருந்தலைவர் காமராஜர், தந்தைப் பெரியார், இராஜாஜி, முத்துராமலிங்கத் தேவர், கக்கன்ஜி போன்ற மாபெரும் தியாகச்சீலர்களுடைய வரலாறுகளையும், பெண் போராளிகளான அஞ்சலை அம்மாள், குயிலி, வேலு நாச்சியார், சிறுபான்மை சமூகங்களைச் சார்ந்த காயிதே மில்லத் அவர்கள், கே.சி.குமரப்பா போன்றோர்கள் ஒதுக்கப்பட்ட பட்டியலினத்தைச் சார்ந்த சுந்தரலிங்கத்தை போன்றவர்கள், ஒண்டிவீரனை போன்றவர்கள் என்று எந்தச் சமூகப் பின்னணியும் புறக்கணிக்கப்படாத அளவிலே தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த சமூகதளத்தில் அத்தனைப் பகுதிகளையும் பெருமைப்படுத்துகின்ற அருமையான சுதந்திரப் போராட்ட வீரர்களை இங்குப் பதிவு செய்திருக்கிறார்கள். இதைப் பார்க்கின்றதின் மூலம் இளைய தலைமுறைக்கு நம்முடைய சுதந்திரப் போராட்டத்தின் வீரத்தினுடைய வரலாற்றை உணர்ந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இந்த அருமையான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த தமிழ்நாடு அரசினுடைய செய்தி விளம்பரத் துறையைப் பாராட்டி நன்றி கூறுகிறேன்."

பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மக்கள் திட்டம்

தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவு 1,30,068 சதுர கிலோ மீட்டராகும். இதில் 31,194 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் மட்டுமே 23.8 சதவிகிதம் காடுகள் உள்ளது. இதை 33 சதவிகிதமாக உயர்த்தினால்தான் நம் எதிர்கால சந்ததியினருக்கு தேவையான ஆக்ஸிஜன் கிடைக்கும். இதற்காக தமிழ்நாடு அரசு வனத்துறை சிறப்பு திட்டமாக பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தைத் தொடங்கி 10 ஆண்டுகளில் 2030 - 2031க்குள் காடுகளின் பரப்பளவை 33 சதவிகிதமாக உயர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி தமிழகத்தின் வனப்பரப்பை 33 சதவிகிதமாக உயர்த்திட, தமிழ்நாடு பசுமை இயக்கம் தொடங்கப்பட்டு வனத்துறை சார்பாக நடப்பாண்டு, முதல் கட்டமாக 37 மாவட்டங்களில் உள்ள 360 நாற்றங்கால்கள் மூலம் 2.80 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகிறது.

சென்னை மண்டலத்தில் உள்ள 4 மாவட்டங்களில் 9 இலட்சத்து 88 ஆயிரத்து 950 மரக்கன்றுகள் 28 நர்சரிகளில் வளர்க்கப்படுகிறது. இதில் சென்னை வனக்கோட்டத்தில் 5 நர்சரிகள் மூலம் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 600 மரக்கன்றுகளும், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் வனக்கோட்டத்தில் 13 நர்சரிகளில் 2 இலட்சத்து 36 ஆயிரத்து 100 மரக்கன்றுகளும், திருவள்ளூர் வனக்கோட்டத்தில் 10 நர்சரிகள் மூலம் 6 இலட்சத்து 5 ஆயிரத்து 250 மரக்கன்றுகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மரக்கன்று வளர்ப்பு பணி தொடங்கப்பட்டு, செப்டம்பரில் நடவுப் பணிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோல் மாநிலம் முழுவதுமுள்ள 360 நாற்றங்கால்களில் வளர்க்கப்படும் 2.80 கோடி மரக்கன்றுகளும் வனத்துறைக்கு சொந்தமான இடங்களிலும், நெடுஞ்சாலைகள், திருக்கோயில் காலி நிலங்கள், பள்ளி, கல்லூரி வளாகங்கள், ஊராட்சிக்கு சொந்தமான காலியிடங்கள் மற்றும் தனியார் நிலங்களிலும் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. சங்ககால இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்துவகை நிலங்கள் உள்ளன. அந்தந்தப்பகுதி மண் வளத்திற்கேற்ப மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வழங்கப்படவுள்ளது. ஆகையால், எந்தப்பகுதியில் எந்த மரம் நன்றாக வளருமோ அதற்கேற்ற மரக்கன்றுகள் வழங்கப்படும்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசுத்துறைகளின் பங்கேற்புடன், தொழிற்சாலை வளாகங்களில் அதிக மரங்களை வளர்ப்பதற்காக தொழில் முனைவோர், தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், வாகன ஓட்டுநர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் என அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து தமிழ்நாட்டில் 33 சதவிகிதமாக காடுகள் பரப்பளவை 10 ஆண்டுகளுக்குள் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் மக்கள் பங்கேற்பு பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தை 24.09.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அருகேயுள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்து சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியின்போது, ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பள்ளி மாணவர்களால் 500 மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டுள்ளன. இதனால், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு வருகைதரும் வாகனங்கள் பசுமை போர்வை வாகன நிறுத்துமிடங்கள் என்னும் இயற்கை நிழல் தரும் வசதியை பெற்றுள்ளன.

மேலும், பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தில் இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் வனத்துறை மற்றும் தனியார் பங்கேற்புடன் 32 கோடி மரக்கன்றுகள் வளர்த்து நடவு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மரம் வளர்ப்பை கண்காணித்திட மாநில மற்றும் மாவட்ட பசுமைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாற்றங்கால் / மரம் வளர்ப்பு கண்காணிக்க பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்காக தனி வலைதளம் (www.greentamilnadumission.com) உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கோடியக்கரைக்கு மட்டுமே ராம்சார் தளமாக சர்வதேச அமைப்பு அங்கீகாரம் வழங்கி இருந்தது, தற்பொழுது, வனத்துறையின் சிறப்பான பணிகள் மூலம் ஈரநில மேம்பாட்டுத் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட 13 தளங்கள் சர்வதேச அமைப்பின் ராம்சார் அங்கீகாரம் பெறப்பட்டதன் மூலம் இந்தியாவில் உள்ள 75 ராம்சார் தளங்களில் 14 தமிழ்நாட்டில் அமைந்து முதலிடம் பிடித்துள்ளது பெருமைக்குரியதாகும்.

கடந்த ஓராண்டில் வனங்களைப் பாதுகாக்கவும், வன விலங்குகள் மற்றும் பறவைகள் பாதுகாப்பிற்காக திருநெல்வேலி மாவட்டம், அகஸ்தியர்மலை யானைகள் காப்பகம், விழுப்புரம் மாவட்டம், கழுவெளி பறவைகள் சரணாலயம், திருப்பூர் நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் ஆகியவை அறிவிக்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வன விலங்குகளால் உயிரிழக்கும் நபர்களுக்கு ரூ.4 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது, தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா சிறந்த பராமரிப்பிற்காக நடப்பாண்டில் இந்தியாவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் பயன்கள்

12,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் விளைநிலங்கள், தரிசு நிலங்கள், பஞ்சாயத்து குளங்கள், வளமிழந்த வனப்பகுதிகள், நகர மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், 260 கோடி நாட்டு மரக்கன்றுகளை நடுவித்து பத்து ஆண்டுகளில் காடுகள் மற்றும் மரங்களின் பரப்பளவை 23.69 சதவிகிதத்திலிருந்து 33 சதவிகிதமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தில் இதுவரை 73 இலட்சம் தரமான மர நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் சுமார், 2.80 கோடி மர நாற்றுகள் 38 மாவட்டங்களில் உள்ள

360 வனத்துறை மற்றும் தனியார் நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

பாரீஸ் உடன்படிக்கையின்படி இந்தியாவின் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பில், அதாவது 2.5 பில்லியனிலிருந்து 3 பில்லியன் கார்பன்டை ஆக்ஸைடுக்கு நிகரான கூடுதல் கார்பன் உட்கொள்ள நமது மாநில பங்களிப்பாக 25 முதல் 30 மில்லியன் டெரா கார்பன்டைஆக்ஸைடுக்கு நிகரான கூடுதல் கார்பன் உட்கொள்ளுதனை அளிக்க முடியும்.

இந்த இயக்கத்தை மக்களின் இயக்கமாக மாற்ற விவசாயிகள், ஊராட்சிகள், கிராம சபை, சுயஉதவி மகளிர் குழுக்கள், தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபடுத்தப்படும். நாற்றுகள் தேவை மற்றும் நாற்றாங்கால்/தோற்றத்தை கண்காணிப்பதற்காக பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்கான தனி இணையதள வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாநில பசுமைக் குழு மற்றும் மாவட்ட பசுமைக் குழுக்கள் நடவு மற்றும் மரம் வெட்டுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

மரங்கள் நடுவதன் மூலம் விவசாயிகள், பஞ்சாயத்துக்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு மரங்கள் மற்றும் சிறுவன மகசூல் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பசுமை தமிழ்நாடு இயக்கம் என்பது ஒரு குடை போன்ற இயக்கமாகும். இது மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் மர நடவு பணிகளை பொதுவான தளத்தின்கீழ் கொண்டுவருகிறது.

இந்த இயக்கத்தில் மரக்கன்று நடவு விவசாய நிலங்கள், கடற்கரையோரப்பகுதிகள், அரசு நிலங்கள், தனியார் நிலங்கள், தரிசு நிலங்கள். வளமிழந்த காடுகள், குளங்களின் அரசு கரைகள் போன்ற பல்வேறு நில வகைகளில் நடவு செய்யப்படும்.

தொலைநிலை உணர்திறன் மற்றும் செயற்கை நுண்ணறிவு உதவியுடன் நகர்ப்புர, புறநகர் மற்றும் வனம் போன்ற நிலப்பகுதிகள் (பயன்படுத்தப்படாத நிலங்களை திறன்கொண்ட மறு காடுகளாக வளர்க்க) கண்டறியப்படும்.

இந்த இயக்கத்தில் திட்டமிடல், இலக்குகளை முடிவு செய்தல் மற்றும் செயல்படுத்துவதில் அடித்தள அளவில் இருந்து அணுகுமுறைகள் நடைபெறும்.

நாற்றங்கால் தேர்த்தெடுப்பு மற்றும் நடவு மதிப்பீடுகள் விஞ்ஞான அணுகுமுறைப்படி மேற்கொள்ளப்படும். ஏனெனில், அவை முன்னர் செய்யப்பட்ட சராசரி அடிப்படையில் இல்லாமல் வேளாண் காலநிலை மண்டலங்களுக்கு உகந்தவையாக இருக்கும்.

இது ஒரு சமூகத் திட்டம். மக்கள் திட்டம். நாற்றங்கால் பெறுவது முதல் நடவு வரை அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்க டிஜிட்டல் ஆவணங்கள் மற்றும் பிரத்தியேகமாக இணைய செயலி இத்திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

இந்த வலைத்தள செயலியானது தனிப்பட்ட பயனாளி விவரங்கள், நடவு செய்யப்படும் நிலங்கள் மற்றும் நாற்றங்கால் விவரங்கள் பற்றிய அனைத்து விவரங்களையும் கொண்டிருக்கும்.

இந்த இயக்கத்தில் மாவட்ட பசுமைக் குழு முழு அதிகாரம் கொண்டதாக விளங்கும். முக்கிய முடிவுகள் மற்றும் மாவட்டங்களுக்குள் நிதி பரிமாற்றம் போன்றவை மாவட்ட பசுமைக் குழுவால் மட்டுமே நிறைவேற்றப்படும்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மற்றும் பிற நிறுவனங்கள் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும், இது மக்களிடம் சேரவும் மற்றும் சமூக பங்களிப்பைப் பெற உதவும்.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் புவிசார் குறியீடு முறையாக பதிவு செய்யப்படும் இது தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

விவசாயிகள் தங்களது நிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மரங்களுக்கு உரிய விலையை பெற மரச்சந்தைகளுடன் இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய இரண்டு வருடங்களுக்கான, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்கீழ், ரூ.38.80 கோடிநிதி வழங்கப்பட்டுள்ளது.

– வனத்துறை

தந்தைப் பெரியார் அவர்களின் 144ஆவது பிறந்தநாளை முன்னிட்டு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.09.2022 அன்று, சென்னை,
அண்ணாசாலையில் அமைந்துள்ள தந்தைப் பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில்
வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

சென்னை, பாரதி மகளிர் கல்லூரி வளாகத்தில் 05.09.2022 அன்று நடைபெற்ற “புதுமைப்பெண்” திட்ட தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அர்விந்த் கெஜ்ரிவால் ஆகியோர், மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,